17 AUG 96 OFFICE MADRAS
894

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

உருக்குமாங்கத நாடகமென்றுவழங்கும்

ஏகாதசிவிரத

# தருமாங்கதவிலாசம்

இவை

சுந்தரானந்த மகாரிஷிகோத்திரர்

கும்பகோணம் பச்சை கந்தசுவாமி குருக்கள்

மாணாக்கரி லொருவராகிய

புல்லரம்பாக்கம்,

திருவப்பனுடு குமாரர்,

சங்கீத சாஹித்திய பரதனாட்டியத்துடன்

நாடகவிலாசம் கற்பிக்கும்

வித்துவான்

## வீராசாமிவுபாத்தியாயர்

அவர்களாலியற்றப்பட்டு.

திருப்பதி

## இரத்தினமுதலியார்

அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896

REGISTERED COPY RIGHT.

உ

கடவுள் துணை,

# அறிவிப்பு.

நண்பர்களே,

புண்ணிய சரித்திரமாகிய
தர்மாங்கத விலாசமென்னும் புத்தகத்தை
சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை முத்து
கிருஷ்ணன் தெருவு 34-நெ, கதவிலக்கமுள்ள
ம-ா-ா-ஸ்ரீ, திருப்பதி இரத்தினமுதலியார்
அவர்கள், சகல சுதந்தரத்துடன் தாமே பெற்
றுக்கொண்டு வேறொருவர் அச்சிடாதபடிக்கு ரிஜிஸ்டர்
காபி ரைட் செய்யப்பட்டது,

மேற்படியார் அனுமதியின்றி யாவரேனு மச்சிடத்துணிவராகில்
1867-ம் வருஷத்திய 25-வது ஆக்ட்டின் 20-வது பிரிவின் 6-வது
விதியின்படி நஷ்டத்திற்கு உத்தரவாதிகளாகியும் பினல்கோர்ட்டா
ரவர்கள் சட்டத்திற்கு விரோதஸ்தர்களுமாவார்களென்றறிக.

இப்படிக்கு,

☞ பு. வீராசாமி வுபாத்தியாயர்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# சாத்துக் கவிகள்.

சென்னை, ம-ா-ா-ஸ்ரீ, அப்பாசாமி புலவர் இயற்றிய

ஆசிரிய-விருத்தம்.

சீரிலகுநலந் தீவிர்ச்செழித்திலகு செந்தமிழ்ப்பாண்டிநாட்டிற் (ல்
ஜெயமிலகுபுல்லரம் பாக்கமென்பேயரிலகு செய்யமுத்தமிழ்ப்பதியினி
பேரிலகுகுருவப்ப னுதன்றவத்திலகு பெட்புசெரிகட்பிலகுவான்
பிளாயிலகுகெங்கைநீள் முடியிலகுமிஞ்சகன் பத்தியிலகுசகுணனும்
நாரிலகுநாடகத்தமிழிலகு வீராசாமிநாவல் நிந்தனுட்
டளையிலகுமா பழையகாட்காதையாந் தருமாங்கதன்சரிதைநலப
காரிலகுமுலகெலாங்கண்களிக்கொள்ளவேயுரிதனன்விலாசமென்ன
காட்டினன்யிசைவிருது பூட்டினன்மிக்களர்க் கதிர்ந்தியுமெனறைங்
கவே.

இசை-பாரிப்பாக்கம்-முகிலப்பாசுவாமிகள்

மாணாக்கன் கண்டலம் முத்துசாமி பிள்ளையிறுவியற்றிய

நேரிசை-வெண்பா.

காடுங்குருவப்ப நாதனருளாலின்ற
பாடும்வீராசாமி பாவலன்-தேடும்
தருமாங்கதவிலாசம் சாத்திறுண்டாரில்
தெரிவோர்ந்தவர்க் காணநேர்க்கு.

புரசை, ம-ள-ள-ஸ்ரீ, சுப்பிரமண்ணிய புலவர்இயற்றிய,

ஆசிரிய-விருத்தம்.

சீர்கொண்டபலவளம் சேர்பாண்டிநாட்டிற் சிறந்தவிற்ஜாபுரத்தை, செங்கோல்நடாத்துகதிர் குலதிலகுநுயர்ஞான செல்வனபாகவதர்தலைவன், பேர்கொண்டதெய்விக வேதாந்தத்தவமியர்ச்சி யைருத்தமூர்த்தி, மிளிர்தமர்த்திடும்புத்தி தருமாங்கதன்சரிதை யின்னிலத்தோர்புகழ்வரத், கார்கொண்டமாதமும் மாரிமாரா நபொழிமைலைகர் மாதருன்றிகுக், கனமேவும்புலலராம்பாளைநவாழ் குருநவப்பவேளா காதலமிகுதலைப்புத்திரன், பார்கொண்டமன்பதை கன்மகிழ்வீராசாமி பாவல கிராதகாளம், பண்பிசைதருக் தமிழ்விலாசமாகப்பசிட பதித்தனன்யின்புறவிரோ.

சென்னை மகாவிகட—தூதன் வுதவி பத்திராதிபர்
மானேஜர், ம-ா-ா-ஸ்ரீ, ஸ்டீவின் அவர்கள்கூறிய
அறுசீர்கழிநெடிலாசிரிய-விருத்தம்.

சீர்சிறந்தவொரு வேகாதசிவிரதம் பூண்டரங்கன்திருதாட்கொண்ட
பார்சிறந்ததருமாங்கதன் கதையைப் புல்லரம்பாக்கமென்னும்
ஊர்சிறந்த குருவப்பகாதனுவந்திடும் தனயன்வீராசாமி
பேர்சிறந்த வாத்திபுகழ்நாடகமா யச்சியற்றி பெட்புத்தானே.

இவை சென்னை விக்டர் அச்சியந்திரசாலை
பின்னப்பேடு, ஆதினவித்வானுமாகிய
ம-ா-ா-ஸ்ரீ, பி, எ. மெல்கிஸ்பிள்ளையவர்கள் கூறிய
எண்சீர்கழிநெடிலாசிரிய-விருத்தம்.

நீர்பரந்தவளம்பொலிவு நகரஞ்சீர்சால்
நிலம்பரந்த தல்ஞ்சுரந்த கும்பகோணம்
பேர்பரந்த குருககள் பச்சை கந்தசுவாமி
பிரபலர்தம் சீடன் புல்லரம்பாக்கத்தின்
சீர்புரந்ததீரன் குருவப்பவள்ளல்
சேயன்வீரசாமியென்னும்வாத்தி
தார்பரந்த தருமாங்கன் விலாசம்
தரணிமெச்சப் பாடிபுகழ் தேடினனே.

சாத்துக்கவி.



கடவுள் துணை.

# விக்கினேசுவரர் வணக்கம்.

---

## கவித்துறை.

சீரோங்கும் ருக்மாங்கர் செய்யேகாதசிவிருதம் செந்தமிழால்
பாரோங்க நுவிலடியேன் விலாசம்தா சிருதுபாடுதற்கு
தாரோங்குங்கொன்றையணிசிவனுமையாளீன்றெடுத்ததனயனை னு
காரோங்கும் கெஜமுக னைங்கரனை கைதொழுதேத்துவேன்,

## தரு-இ-ம்-தாளம்-ஞட்டை.

கெணநாத கெணனுதைய கெஜமுகசிரசுந்தர
யிணைய துணைவந்தோதையா.
மணமிகுமலரணிதிணையடிகளை
பணிந்துனைவணங்கிட துணைவருகுவாய், கெ

வுலகபொஸ்தகபாணியே வுதிம்திவதனயகுண
இலகுசாரதவாணியே
தலந்திலொருதவரிலாதிலகிய பலகலைகளுமுதவியபுதமொழி
புலவர்களுளம் கிரந்துனைபுகழ்பெர
மலரயன்மகிழ்மனைவியே மதியருள். வு

அரிஅயன்தேடிஅரியா அக்கினியதாயுருகொடு
கரிபரிசெய்கக்கன்சடையா மரைமுடிக்கிளம்பிறைபுனைலொடு
கரியுரித்தரு தகைமையோடுரிகிய (கி
திரிபுரமெரித்தவெரனு முறைசெயும்அா.அரசிவ அடியேனு
ருள்தரும். அரிஅ

சிகரசிலம்பில்வாசனே திருவடிவுடைநடைபெரு
நகரபரிவிலாசனே அகம்திலடியவருனையனுதினம்
துதிதொழுபவரகம்துகளித்திட தகையுடனருளுதவியமயிலே
ஜெகம்தனை யொருநொடியினில் வலம்வரும். சி

உ

ஸ்ரீராமஜெயம்.



# தர்மாங்கதவிலாசம்.

விநாயகர்-வெண்பா.

சீரார்சிரகஜவதன செகதிற்குலோதுங்கன்
தாரநற்தர்மாங்கதனைச் சரித்திரத்தைக்-கூறவே
அத்திமுகனைக்கரனென் நாளுநமீனமெடுத்த
புத்திரனை யென்றுநம் போற்று.

தேவர்கள்வணக்கம்-வெண்பா.

செல்வவிநாயகனை தேவர்சேனாபதியை
வில்லாவிசைகாசன்விஷ்ணுவையை கல்விதரும்
கலைமகளை தர்மாங்கதன்கதையினைப்பாடுதற்கு
மலைமகளையும் வணங்குவோம்.

ஸ்ரீதேவதைகள்-வணக்கம்.

மைக்குழல்கல்வாணியவ்வை மாரிவள்ளிதெய்வயானையுந்
துர்க்கைபார்வதியம்மன் திரௌபதைபிடாரியை
தாளமேளத்துடன்கூடி கேளிக்கைகளாடியிந்த
வேளைவந்துகாத்தருளவே.

ஈஸ்வரன்-குருக்கள்-வணக்கம்-விருத்தம்.

வெள்ளியங்கிரியின்மீது விளங்குமெய்ப்பொருளேபோற்றி
வெள்ளைவுபிசக்கிடாமல் இச்சரிதையைப்புகழ்க்க
கள்ளமில்லாமலென்றன் கருத்தினிலிருந்துசெய்யும்
வள்ளிமணாளன்றன் பொன்னடிபோற்றிபோற்றி.

### இதுவுமது-விருத்தம்,

சந்ததமடியேனுந்தன் தாளுமேகெதியென்றெண்ணி
சிந்தையில்மகிழ்ச்சிகொண்டு திருவடிதியானஞ்செய்தேன்
இந்தனர்ச்சரித்திரத்தை யியலுடன்பாடுதற்கு
கதைமோதீர்முன்னின்று காப்பதுகடனுனக்கே.

### சிவன்வணக்கம்-விருத்தம்,

ஆலமுதுண்டயீசர் அன்புடனீரெழுந்து
பாலன்மார்க்கண்டனுக்கு பதினறுவயதளிக்க
காலனையுதைத்து அன்று கடையூரில்வரமளித்த
சூலபாணியனேயுந்தன் றூயமலர்பாதம்போற்றி.

### விஷ்ணுவணக்கம்-விருத்தம்.

தாரணிதனை யளந்த தாளிணைக்கடியேன்போற்றி
வாரணன்தன்னைக்காத்த மலர்கழலடியேன்போற்றி
ஆரணன்முதலோர்போற்றும் மடிதனுக்கடியேன் போற்றி
நாரணா அடியேனுந்தன் நளினபொற்பாதம்போற்றி.

### இதுவுமது-விருத்தம்.

திங்கள்செஞ்சடையாபோற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
சங்கையில்லாமலிந்த சரித்திரம் விளங்கவெந்தன்
பங்கினிலிருந்துசெயயும் பரயோகின்தாள்போற்றி.

### ஸ்ரீராமர்வணக்கம்-விருத்தம

திசரதர்வயத்திற்றோன்றி சீதையைமணம்புரிந்து
அசுரதிராட்சசாளை யாவையுஞ்சங்கரித்து
யிசையவெவிபூஷணர்க்கு யிலங்கையேபட்டங்கட்டி
அசைவிலாதாளச்சொன்ன அய்யோத்திராமாபோற்றி.

### ஸ்ரீராமர்தோத்திரம்-ஜம்பை-தருவு.

ஜெயருமரெகுராம ஜெயஜானகிராமா
ஜெயலட்சுமிபதிராமா ஜெகதபிராமா
ஜெயபூபதிமித்திர ஜெயசகலமுனிதோத்திர
ஜெயதிசரதபுத்திர ஜெயகருணைகாத்திர
ஜெயதிருப்பதிவாச ஜெயசின்னிஸ்ரீகேச
ஜெயபாபவிமோச ஜெயவெங்கடேசா
ஜெயகெஜேந்திரமோக்ஷ ஜெயகிருபாகடாக்ஷ
ஜெயபுண்ணியவிருதிட்ச ஜெயபுத்திரபாட்சா-

சரஸ்வதிவணக்கம்-விருத்தம்.

பாரெல்லாப் புகழ்பெற்றோங்கும் பிரமன்தேவியரே போற்றி
கலைகள் நூற்கல்வியும் கற்றுணர்ந்தவளே போற்றி
பேசதாய்வோர் அவர்க்குப் பிரபலமானவளே போற்றி
சார்தாம்பாளேயென்னும் சரஸ்வதிதாயேபோற்றி.

இதுவுமது-விருத்தம்.

இந்நாடகத்தை யெவர்களுங்கேட்டபோது
அந்தமாயிருக்குதென்று அவனியோர்புகழ்ந்தாக
பொருத்தமிலிலிருந்து இடர்கள்லாறுமன்காறும்
வந்தனைமகிழ்ந்துகொள்ளு வாணியேநின்றாள்போற்றி.

சரஸ்வதிஸ்தோத்திரம்-தரு-ஆதிதாளம்

இராகம்-புன்னாகவராளி.

பல்லவி.

தாயேநிருபையா ருயேயெனக்கார்
சேயேனிடத்திரப்பாய்க் கடைக்கண்பார் — தாயே

அநுபல்லவி.

பாணிசரஸ்வதி வாணிபூரணி
வேணியெனையாதரிக்கிரவாணி — தாயே

சரணங்கள்.

அம்பாகியான — ஜெகதம்பாபலகலை
சம்பரமாயளித்திட — அம்புவியிதனிலே தாயே
வத்தியதாயே — பாவர்க்கீயே
வித்தைபுத்திகளே — விளம்பிடுவாயே தாயே
சுந்தரிசவுந்தரி — திரந்தரிதுரந்தரி
அந்தரிவந்தித்தி — சொந்தமேயாதரி தாயே
யென்னுளூந்த — னிணையடிதேடினான்
புன்னாகவராளி — புகழ்ந்துமிகபாடினேன் தாயேநீ

அவ்வையடக்கம்-விருத்தம்.

பூதலந்தன் னிலிலக்கும் பொருந்தியே புகழ்ந்துரிக்கும்
நீதிசாஸ்திரங்களெல்லாம் நின்னருளாலெப்போதும்
ஓதியேபெரியோரெல்லாம் உளமகிழ்ந்திருந்தாளூர்
ஆதலாலெனக்கருள்செய் அவ்வையேநின்றாள்போற்றி.

# நர்மாந்தகவிலாசம்

கவிவாணர் வணக்கம்-விருத்தம்.

பலவிதநூல்கள்காவியம் பாரினிற்சாஸ்திரத்தோடு
கலைகளைசகற்றுணர்ந்த கவிவாணர்முன்னில் பாலும்
மலைவிக்கொண்டுசொல்லி மங்கசேர்க்குமபெரிப்புபோலே
தலைவனுசெய்தெனித்தை தன்னயனைக்காத்தடியே,

ஔவை யடக்கம்-விருத்தம்.

பரிதிருமூலருக்கு படித்திடுங்கலைகளெல்லாம்
பெருமையாயருள்செய்தன்பாய் பிறப்பளிக்கசெய்யதீபும்
சிரியனசெய்கவிக்குகல்வி திறமையில்லாத்தாலே
அழுதிருந்தன்பாய்க்கூறும் அவ்வையேயின் தாள்போற்றி.

ஔவைவணக்கம்-தரு-ஆதி.

இ ம்-சாவேரி.

| | |
|---|---|
| பார்புகழவ்வையெனுந்தாயே | கவி |
| பாக்கிடவருள்தருன் | வாயே |
| சீற்பெருமைக்கவிகி | சாரம் |
| நுதிசெதரிந்தசர்வினை | பரிகாரம் |
| மூடர்கைசேவையும் | நீக்கும் |
| நிதிமுகையபிரகசர்வினை | போக்கும் |
| படுவார்மனதில்நிலவக்ளை | மிருபலகலைகளுமுணர்பவளே |
| பேர்பெருங்கினைஇ | நர்ப்புரியில்தற்மேவிய |
| தாரணிமன்னனேடை... | சாவேரிராகம்பாட பாரபுகழ் |

ஔவையடக்கம்.

கவிவாணர்செந்தமிழ்க்கவி புகழ்சொல்றதனை
கண்டியெனகாமினிபோர் கருத்தாய்க்கேழ்க்க
குவலயத்திலதுபோல் சிலந்தகல்லைக்
குண்டுமணிக்காண்டு விலைக்கூறாமான்
தவறுதனைலோன்சில் லாமலைவுமேண்செய்த
சரித்திரத்தைமன மகிழ்ந்துதன்மையாக
அவ்வையடக்கமென்சரணடைந்தேன்
அபசெற்றுப்போலிம்மொழிவைஆக்குவாயே.

இதையாடுனென்வியாய்-பத்தியம்.

ஜெயமபுகழுகவியக ஜெஸாயிரக்குதி
துலைமாத்தென்ன பதிராஸ்கடில்

சேர்ந்துமேவருஞளசம் சாலிவாகன
வருஷமாயிரத்தெண் ணூற்றுமூன்றில்
மகருஜனிங்கிலிஷ் வருஷமோருயிரத்
தென்ஞூற்றெண்பதொன்றில்
வழக்குவார்சரியான விசுவருஷமாசியின
மாதமிருபது தேதியில்
புகல்வியாழம்திரியோதசி பூர்வபட்சமதனில்
பூசமேநட்சத்திரமாம்
பொங்கேருக்கிறவன் பிரண்டுநாழிகையின்மேல்
புகழ்மீனலக்கினத் தில்
புகழ்நிறைபுல்லரப்பாகை வாழ்குருவப்பன்
புதல்வன் வீராசாமியும்
புண்ணியஏகாதசி விருத்தமதைசரிஜதயாய்
புகழ்ந்திட தொடங்கினனே.

கதையணிதிபிவத்,

திருவுணாகிரியில் தேவாலயமும்
பரிவுடனெதிரில் பரிந்துஜஸ்த்தம்பம்
வாகனமண்டபம் மடப்பளியழகும்
வாகுடன்மதிளும வாசலும்வளமாய்
திகழ்கின்றகோபுரம் ஸ்தாபிசுனொளிவும்
வெகுவிநோதங்களு வேடிக்கையாக
அண்டர்கள் முனிவர்கள் அரியெபோர்த்துதலும்
தொண்டர்வாழ்மடங்களும் சித்திரகூடங்கள்
சித்தர்கிம்புருடர்கள் தேவரோத்துதலும
பத்தானபத்கள் பறவிபோறறுசலும்
திமியெனதேவர்கள் துந்துமிமுழக்க
அமரர்கள்பூமழை அன்புடன்பொழிய
பாருள்ளோர்புகழும் பண்புள்ளநகரில்
சிருடன்வீதியில்சிறப்புடன் வாழ்வோர்
வர்ண்ணமாணிக்கையும் மாடமேடைகளும்
வுன்னதமான வுயர்ந்தவேதியரும்
பூமிபாலர்களும் புண்ணியர்தழைத்து
நேமநிஷ்டைகளும் நித்தியனுஷ்டானம்

த"க்ஷிண்ணியமுள்ள சைவகாரானர்
திலகடையில்மிகுத்த சிர்கருணிகா
பவமதையொழிப்பேரா பரமனைநினைப்போர்
சிவபூசைதுரெந்திரர் ஜெபதபமுடையோர்
விசுவாசமுறும் விளங்கும்வைசியரும்
சுசிகரமான சூத்திரரனேகம்
துயவர்கோபாலர் குலவுவேசியர்கள்
செப்பவரகைக்களர் செரிலிக்கதாரி
சகலசாதிபரும் சந்தோஷமாக
இகல்பெரும்வன்னியர் இப்படியாக
மேட்டானமேட்டியர் மிகுமகதாக
கோடானகோடி குரவிலாவாழ்வோர்
வுச்சிதமான வுபர்ந்தவீதியினில்
பச்சைதோரணங்கள் பூபந்தலுமினிய
சித்திராரய்மகுட தோரணமசைய
வெத்தியவாத்திய வொலிவிபரிதமாக
காதகீதங்களும் சடனவாயித்தியமும்
தவளசங்கத்தொனி சர்வாய்த்தியமுடனே
குவலயமகிர்ந்திட குமமெணபேரிகை
பூரிமுழங்கவும் மிள்ளாங்குழலுடன்
சூரிவவாய்த்தியமுடன் திருச்சின்னமூத
செப்பெரிதான திருவிழாவழகும்
அப்பெருநகரினையாளும் நுக்காங்கதன்
மன்னுயிர்யாவையும் மனமதுமகிழ்ந்து
தன்னுயர்போலவுந் தர்க்காத்திருப்பார்
அரிபக்திபுனன் ஆசாரபுருஷன்
சிறந்தரும்புவியில் நீடுழிகாலம்
வாழ்ந்திடும்போது வதஷ்டமாமுனியும்
தாழ்விலாவிருதமும் தந்திடவேநான்
ஏகாதசிவிருத்தம் யிப்புவிதனிலே
வாகாகநடத்தும் மகாபுண்ணியமென்று
சொல்லிட முனியும் கருத்தினில்ராசன்
நல்லதெனரெண்ணி நகரமுழிதனிலும்
பேரிகையரைந்து புவியிலுள்ளோரை
பாரணிவிருதம் பண்புடன்செய்யென
விந்தமுன்செய்ய மேதினிதனிலே

மறணமெயில்லாமல் வாழ்ந்திடும்போது
பூமிதேவியும்பாரம் பொறுக்காமலேதான்
யெமனேறுமைக்க யெமனும்தூதரும்
திசைமுகனிடத்திற்சொல்லிடவுந்தான்
வுசிதமோகினிபிருகம்பமனுஞ்சிரித்தெடுத்து
முக்கியமாய்நீபோய் முனிந்துமேகிரிசை
வுருக்மாங்கதன் விருதமொழித்துவாவென்ன
மிருகங்களனேகம் மேன்மையதாக
கிரிஜையில்பயிர்பச்சை கெடுயுஞ்செய்ய
வேட்டைக்கிருஜன் விருடன்வந்து
காட்டினில்மோகினிக் கன்னியைகண்டு
தழுவியேயணைத்து சரசமாயவளை
அழைத்துமேதன்னிட அரமனைசேர்த்தி
யிரவிலும்பகலிலும் எந்தவேளையிலும்
மருவியேகூடி வாழ்ந்திடுங்காலில்
தசமிநாளந்திடில் தறணியாள்ருசன்
விசையாகவந்தனர் விருதமுஞ்செய்ய
தடுத்திட விருதமும் தையல்மோகினியும்
இடத்துடன்ருசனை சேசொன்றழைக்க
விருதமுஞ்செய்யாமல் மெல்லியேயுன்னை
மருவினன் விளையாட வசமல்லவென்ன
வசமல்லவென்குறாய் மகனிடராசை
விசையுடன் தந்துனி விருதஞ்செய்யென்ன
யிருவருந்தர்க்கித்துச் சிசந்துமேதன்னிட
தருமாங்கதன்ராசை தையலாள்கேட்க
தருகுதேனென்று தர்மபல்வேளை
விறலினில்வெட்ட வாளையுமேந்த
வைகுந்தவாசனும் வாளையும் விலக்கி
வையகந்தன்னிலெ மகனிடராசை
வெட்டவேண்டாமென மேன்மையதாக
திட்டமாயசான்றுரிலகான் பொருத்து
வைகுந்தம்வாவென்று வாகுமெய்யுரைத்து

ஐயமில்லாமலே அரிநாரணரும்
கெருடவாகனனாய் காட்சியுங்கொடுத்து
விரைவினிலேயினை விஷ்ணுவின்சரிதை
கனமதாயிதனைக் கருத்தினில்வைத்து
அனைவருங்கேட்டு அகமகிழ்வீரே.

பாடினோர்விபரம்-நிந்தை.

சீர்பெருஞ்செந்தமிழ் சேருநன்னாட்டில்
பேர்கொண்டநற் புல்லைபுரியினில்மேவும்
மால்தனை வணங்கி மலரடிபோற்றி
வேல்குமரேசனை விண்ணப்பஞ்செய்து
பாலகோபாலனை பத்தியனாலும்
சாலவேமனதினில் சந்தோஷமாக
யின்பமாயர்ச்சனை யெழில்பெரச்செய்து
அன்புடன்போற்றி அநுதினம்வாழ்வோன்
ஆதிகாலத்தி லயனறனுமதாய்
திகிலலாவகயிலேயில் திருக்கொலுவிருக்க
சிவனயனுக்கு சிரசஞ்சதனால்
யிவரிருவர்களு மிப்படியாக
ஒன்றாயிருக்க வுமையவள்பார்த்து
யென்செயவெசிவ னிவரிருவரிலெவரோ
அரனென்றுயெப்படி அடிவணங்குவது
தெரியாமலெப்படி தொழுவதுசிவனை
யென்றுமேயிருந்தனள் யேக்கமதாக
ஒன்றானசிவனிதை உள்ளத்திலறிந்து
அயனிடசிறசொன்னா அரனெழுந்து
கொய்தனறவ்வேளை கிருபாகரனார்க்கு
கரமதிர்கபாலம் கயிலாமலேதான்
பிறம்மத்தைசூழ்ந்துமே பேயொடாடிக்கி
ஆங்கையேராட்சதன் ஆக்கிரமித்தெதிக்க
பங்கஞ்செய்தவன்மார்பை பத்தலாய்க்கிழித்து
காலெலும்பெடுத்துகடஞ்சிரெங்க திருவாய
தோல்காம்பெடுத்து தோணிகேழ்ப்பதாக
பம்பென்றுபேரிட்டு பதலமாமுடி
கும்மென்றுதம் கொட்டிவசர்க்கு
ஆரவொன்று ஆதிசிவனாறும்

வேர்வையெவழித்து மேனிவிறக்க
விழுந்தவேர்வையினில் மேன்மையதாக
மழுவேந்துஞ்சங்கரன் அம்பழமெடுக்க
மிருதாமரவாத்தியம் பம்பையும்முழங்க
வந்துறப்பவித்தமா சந்திரமூர்த்தி
வருசத்தில்வந்த மாணியாஞ்சுத்திரன்
மெய்மிஷ்டைகளுடன் மெய்லிங்கதாரி
விந்தைசேருங்கும்ப கோணமாம்பச்சை
கந்தசாமியார்மடக் குருக்களாச்சாரி
சுந்தரானந்தமகாரிஷி கோத்திரன்
சந்ததஞ்சிவபூசை தவிரா துரொத்திரன்
குருவப்பனீன்றிடுங் குமரன்வீரப்பன்
கிரிஜைமாநகருளுங் கிறத்திருக்மார்க்கன்
அரிவிருகந்தனை அன்புடன்செய்ய
கருத்தருதாகிய கலைகளும்வேதம்
பெரிதாயுணர்ந்த பெரியோர்தமக்கு
பலகலைநூல்களும் பஞ்சலட்சணமும்
கலைகளையுணர்ந்த கவிவாணர்தமக்கு
காரிகைநன்னூல் கற்றோர்தமக்கு
தாரியதாகவே தர்க்கசாஸ்திரமும்
யோகமுமஞானமும் யுணர்ந்திடுவோர்க்கு
ஆகம புராண மந்திரமசிந்த
செபதபம்வழுவாமல் செயதிடுவோர்க்கு
வபூவாசஞ்செய்கின்ற வுத்தமர்தமக்கு
அஞ்சலிசெய்துமே அவர்கள் தன்னடியை
தஞ்சமாய்சிரமதி தானுமேவைத்து
மைந்தனுஞ்செப்பினேன் வண்டமிழதனை
சிந்தையும்மகிழ்ந்து சேர்ந்துகொள்வீரே.

## தர்மாங்கதவிலாசம்.

### விக்கினேஸ்வரர்வந்தனம்தரு



திருபுடை-தாளம்ஜம்-ஆறடி.

பல்லவி.

சரணம் சரணம் ஆ
சரணம் சங்கரனருள் குமர
சரணம்சண்முகதமையனைக்கர    சரணம்வல்லபையாள்பனேசுர
சரணமடியேன்    கிருபாகர சரு

சரணங்கள்.

அப்பமோடவல்லடை    பயறொடு
முப்பழமொடுதொம்பை    சொப்பிடு
அப்பனையிச்சரிதை    மழவொடு
செப்பும்வார்த்தைதகிக    சொப்பிடும் சரு
தெண்டமென்றுமேதேவ    ரன்பாக
திணமுமுந்தனைதொழுவார்    முன்பாக
தொண்டர்களைதொழுவார்    நன்பாக
அதிசெய்தேனடியேனு    மன்பாக சரு
வேதவேதத்தோர்மிகவும்    நேத்திய
விதவிதமலர்சொய்து    சாத்திய
பாதத்தைநமபினேன்    பூர்த்திய
பதஅக்கநள்புரி    கீர்த்தியாய் சரு
வல்லபையிடப்பாக    நேசனே
வானவர்முதல்மகி    மூலசனே
அல்லும்பகலுமைதொழுதேனே    னேசனே
ஆறுமுகமருள்    பிரகாசனே சரு

விக்கினேஸ்வரன், விருத்தம்-பொது.

மதிநதிசடையில்வைத்த மயேஸ்வரனீன்றபாலன்
மதகரிவதனந்தன்னில்வாருடனிறணிந்து
சதங்கையுந்தண்டை மிஞ்சிதாளினிலொலிக்கவேதான்
சதிருடன்சபையில்வந்தார் தரணிபுகழ்ந்தானே.

வசனம்.

அகோ கேளுங்கள் சபையோர்களே கிரிஜாபுரியாளப்பட்ட உருக்க மாங்கதருஜனுடைய கீர்த்திபிரதாபங்களை சாங்கோப சாங்கமாய் ஏகாதசி விரதமுதல் காட்சிவரைக்கும்விலாசமாய்செய்து ஆடுகிறதற்கு விக்கினேஸ்வரர் வருகிறவிதங்காண்க.

விக்கினேஸ்வரர்-வருகிற-தரு-ஆதி.

மட்டியம்-ராகம்-தோடி.

பல்லவி.

கணபதிவந்தார் (கெஜமுக)
கணபதிவந்தார்.

அநுபல்லவி.

கணபதிவந்தார் கல்விதர(நல்ல)
குணமகுருமெகொடுத்து புத்திசொல்ல கண

கணபதி.

சரணங்கள்.

வல்லபைபெண்மணவாளர்நல்ல கல்விதருக்கிருபையாளர்
தொல்லுலகோர்தொழும்செல்வவிநாயகர்
தெளிவாகியமறையோதுனர்பெரியோர்களுக்குறவானவர் கண

கணபதி.

முக்கணன்னீன்றபாலன்நல்ல மோவிகடீதெறும்லோலன்
திகலெல்லாம்புகழும்விக்கினேசுபரன்
திருமால்மருகன்முருகன் பரிவாரபணியும்பெரியன்

கணபதி.

அங்குசபாசமெடுத்து (கையில்) அரைபில்பீதாம்பரமுடித்து
மங்கையோர்பாகனீன்றபாலன்

வடியார்க்கருள் தருவார்ககிருபை கரிமாமுகன்மகிழ் கொண்டிதே
கணபதி.

காலில்சிலம்புகுலுங்க மணிக்) கழுத்தில்மார்பிலிலங்க
ஆலமுருண்டோ வின்றசேயன்
அரிமைக்குமரன்தேடி கருமாகொலுவில்பாடி ௧௭

பொதுதேவர்கள்-வெண்பா.

விக்கினவிநாயகனை வேலவனை சங்கரனை
மைக்கோல்நல்விழியாளை வாணிதனையிக்கதையை
ஆவலுடன்செய்யுதற்கு அடிபணிந்தேன் எந்தனிடம்
நாவில்விருந்தருள்நயந்து.



உருக்குமாங்கதன்கொலு அலங்கிர்தஞ்செய்ய
கட்டியன்வருகிற-பொதுவிருத்தம்

தருமம்பெருநெல்நெறவணி தன்னரசாண்டிருக்கும்
பெரிமைசோகங்காநாட் புரியாளருக்மாங்கதருஜன்
அரமனைவாசல்தன்னை அன்புடன்காத்திருக்கும்
விறைவினில்கட்டியக்காரன் விதூஷகன் வருகின்றானே.

கட்டியன்வருகிற-விருத்தம்.

தட்டிசல்லடமுங்கட்டி சாலுபோல்வயருங்கொண்டு
பட்டநாமமுள்சாத்தி பாங்கொருவகையில்தின்டு
வெட்டிதிக்கெங்கும்போற்றும் மிருஜருக்மாங்கன்வாசல்
கட்டியக்காரன்வந்து கவிரியில்தோன்றினானே

## கட்டியக்காரன்வருகிற-தரு-அடதாளம்.

### பல்லவி.

அதிவிதரணமுடன் அறமனேகார்க்கின்ற
ஆஸ்தானசந்தோஷி வந்தானேயா.

### அநுபல்லவி.

சதுர்பெருஞ்சபைதனில் சந்துசத்தென்றுமே
சற்குண ஆஸ்தான சந்தோஷிவந்தான்

### சரணங்கள்.

அதிலங்கள் விலைகொண்ட ஆபரணம்பூட்டி
ஆஸ்தானசந்தோஷி வந்தானேயா
சகலவைபோகத்தரசன் வாசல்காக்கும்
சபாத்துள்ள ஆஸ்தான சந்தோஷி அதி

ஏவலதிகஞ்செய்யும் பிருஜாராஜாக்களெல்லாம்
யெழில்பெருஆஸ்தான சந்தோஷிவந்தான
குராஜப்ருனென்றுதொப்பை மசந்திட
தரைமுன்னே ஆஸ்தானசந்தோஷி அதி

வீரபராக்கிரமன் வெகுவிதட்பேசியே
விதூஷக ஆஸ்தான சந்தோ
காத்திலச்சமில்லாமல் கதம்பிகதம்பிகொண்டு
கணமுபொருஆஸ்தான சந்தோஷி அதி

பெருத்தசபைதனில் பிலாஅரிபாடியெ
யெலமுள்ள ஆஸ்தானசந்தோ அதி

### கட்டியன் கூரல்.

பராருஜாவந்து மிகவிரசந்திடும் சமூகந்தன்னில் பராக்குபராக்கென்னவெ
பாரவேந்தாவருகின்றவேளையில்படடுவரபாடிபார்த்திபவென்னவெ
இலவென்றெட்போதுப்எழில்பெற்றமாதர்களிறஞ்சிசலாமென்னவெ
இருஜாராஜெகூபாரானதிற்மின்துபோற்றிபிரத்னமகுடனிதுன்னவெ
சரியாகவேதூரிமுழங்கவெபேரிகை தாமதாமதாமென்னவெ
சங்கீதமேளங்கள்டம்பட்டம்டங்காதளத்துக்கு முன்னாகவே

அவனிதனிலுள்ளவர்கள் அரசன்வருகின்றதென அதிகசம்பிரமமென்ன
அரசர்கள்புடை சூழமந்திரிமாருடன் அதிபதிருக்மாங்கதன்வாரானே

கட்டியன்விருத்தம்.

கிரிஜாதர்ப்புரந்தையாளுங் கொடிகொள்ருக்மாங்கதராஜன்
சிரசில்பொன்மகுடம்பூண்டு சிங்காரமாகவேதான்
அரசர்கள்சூழ்ந்துமுன் பின்னணியாகவேதான்
திருச்சபைதனிலேவாரார் ஜெனங்களேயெச்சரிக்கை,

வசனம்.

அகோதெப்படியென்றால் ராஜாதிராசன் ராஜமார்த்தண்டன் ராஜகோலாகலன் ராஜகம்பீரன் ருக்மாங்கமகாராஜன்கொலுவுக்குவருகுறார்சந்தடி செய்யாமலயிருங்கள் ஜெனங்களே,

ருக்குமாங்கத மகாராஜன்-வருகிற-தரு.

திரிபுடைதாளம்-இ-ம்-மத்தியமாவதி-

தத்திமிதிமிசகசணுகசெம்தரிகிட தகதாங்க செம்பரி தருக்த
ருகாசதரிதாகிணமதகசேருசெமதரி தக்கிடகிட தரிகிடகிட
தகதாதாகிட சேகிட செம்தரிதா தகிட சேகிட செயதா
தத்திமகரு தகத்திங்கிண தோமெண.

பல்லவி,

ராஜராஜர்க்கதிபதி கிரிஜாஸ்துகமாங்கத
மகாராஜன் வந்தானே,

அநுபல்லவி,

தேசதேசாதிருமருபெருயாச ரில்வர்
தீரவிரபராக்ரமனெனவெகபிரகுரசெங்கதிர்குலமெனமகா
ராஜராசர்கதிபதிகிரிஜா

சரணங்கள்,

மாகில்லாநவரத்ன மணிமுடிமகிழும்நற்பிரகாச
முன்னபூகராமகறவோத மாதகிழுபுரங்கவரிவீச
மதிக்சமுடன்மதிமந்திரியுக்திதரு கெரிமூறைகள்பேசா
விசுவாசவொரிந்திரு புகழும்

பொதுவிருத்தம்-மத்தியமாவதி-

குருமன்னர்வெகுசா தாவிவீசா
திங்கள்கதிர்நிறைபோல் குடைபிடிக்க
செயமதிரச்செய பேரிகையடிக்க
மங்கையருலாத்தி ஏந்த
மாதரபிநயங்காட்டவெ ழுந்தா
சங்கீதங்கள்பாட நல்ல
சற்குணவிணைக கொண்டாட
தகத்துக்கதிபதியா யிருந்து
அகத்துக்கரசவிக்கிட தெரிந்து
தனதுயமென பன்வகைமுடியே
மனதுடன்மத்தியமாவதி பாடியே ௨௩

அரிசிங்கினன்பத்தாறு அவித்துராசசொல்லால்
வரிசையாய்கொலுமுன்பாக வந்தடிபணிந்திறகு
கருட்டிசாமரைநாளாகி தோகையர்கவரிவீச
கிரிஜைமாணகருன் துக்பாலாதனுமெ வருகின்றுரே.



மந்திரி



இராஜன்

## இராஜன்வருகிறதரு-ஆதி-மத்தியமாவதி

பல்லவி,

ராசருக்மாங்கதராசன்வந்தான் கொலுவினில்
ராசருக்மாங்கத ராசன்வந்தான்

அநுபல்லவி,

ராசருக்மாங்கதரும் காணிலத்தரசரும்
கரகெஜசேனைரும் காதலுரைத்திட
முரசுகள்டக்காபேரி யதிர்ந்திட ராஜ

சரணங்கள்,

சந்திரஆராமுயின்னவே வைபோகத்தில்
சற்குண இந்திர னென்னவே
மந்திரிகளிருபுரம் வந்துநின்றைந்திட
சிந்தைமகிழ்ந்துமெ திருகொலுவிருந்திட ராஜ

சிரசில்பொன்மகுடந்தரித்து புசந்தனிலே
திகழும்வலகிரமும் விரித்து
அரசர்கள்முன் பின்னனியனியாகவெ
அந்தணர்வாழ்த்திடவே அடவுடனேகவெ ராஜ

மாதபத்தோர்கள்தினம் யேற்றி
புகழ்ந்துதொழும்வள்ளல் கேசவன்பதம்போற்றி
காதகிதமுடன் நங்கையராடவே
நட்டகர்மதநியாவதியுமே பாடவே ராஜ

## ராஜன்விருத்தம்-மத்தியமாவதி

அரியிட கிருபையினாலே அவனில்மும்மாரிபெய்து
அரியிட கிருபையினாலே அதிகமாய்பயிர்விளைந்து
அரியிட கிருபையாலெந்தன் அரசுமேமிகசெழித்து
அரியிட கிருபையினாலே அனைவரும்வாழ்க்தானே

## முதல்மந்திரிவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

வேங்கருக்கரசேபோற்றி விரணபிருத்தலைவப்போற்றி
சாந்தமாகியபொன்மேரு தன்னிற்க்கரசேபோற்றி

பூந்துடைமாமிலைகுர் புனிதனேபோற்றிவைவேலை
யேந்திடுங்கையாபோற்றி யிறவனேபோற்றிபோற்றி,

௨-வது-மந்திரிவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

கதிர்குலத்தரசேபோற்றி ஈனகலைவபோகாபோற்றி
நதிவளஞ்சூழ்நாட்டை நடத்தும்நல்லரசேபோற்றி
எதிர்த்தவர்தம்மையெல்லாம் மிறவனைவென்றான்போற்றி
அதிபதிஅரசர்க்கெல்லாம் அரசருக்கரசாபோற்றி

கட்டியவன்-விருத்தம்,

சூரவுத்தண்டாபோற்றி துஷ்டநிக்கிரகனேபோற்றி
வீரமார்த்தண்டாபோற்றி வெகுபராக்கிரமனேபோற்றி
சீருண்டவுலகமாண்ட திருபர்கள்கண்டாபோற்றி
தாரண்டபுயமேகொண்டா தலைவனேபோற்றிபோற்றி,

தரு - கூறல்

ராசாதிராசனென ராசமார்த்தண்டனே ராசனேவெகுபராக்கு
குருதிருசேவித்த ர்கன் பிரண்டனே துறைசிரோமணியராக்கு
பாருலகமன்னனெடபண மன்னவர்க்கரசனெபார்த்திபாவெகுபராக்கு
தாரணிகொண்டமார்பனே சத்தியசம்பன்னனெசக்கிரேசுபராக்கு




திருவுறைகிறீஜா புரீஸ்தளத்தினில்பூசை
செவ்வையாய் நடந்துவருதா மந்திரி

முதல்மந்திரிகூறல்,

தேவாலயத்தினில் திருகாலமும் பூசை
செவ்வையாய் நடந்துவருது ராஜனே

ராஜன்சொல்,

ஜெகதலமுழுதிலும் குறையில்லாமல்மாரி
சிறப்பதாய்பெய்ந்து வருதா மந்திரி

இரண்டாவது மந்திரிசொல்.

திங்கள்மும்மாரியும் பெய்து பயிர்ப்பச்சை
செழிமையாய் விளையுதய்யா

ராஜன் சொல்,

பேர்கொண்டமன்னர்கள் செலுத்திவரும்பகுதியும்
பிரியமாய்சேர்கின்றதா மந்திரி

முதல் மந்திரிசொல்

திருதிறஉடதாக்குபடி தப்பாது
செலுத்தியே வருகிறார்கள்

ராஜன் சொல்

அந்தணர்களனுதினம் ஆசாரகீர்த்தியாய்
அனுஷ்டானம் செய்யுறாரா

இரண்டாவது மந்திரிசொல்

சந்ததம்வழுவாமல் சந்தியனுஷ்டானம்
ஜபதபம் நடந்துவருது

ராஜன் சொல்

அவனிதனில்பயிர்செய்யும் குடித்தனக்காரர்
பக்குஆறிலொன்றீயுறாரா

முதல்மந்திரி,

அதர்ம்மமொன்றில்லாமல் அரசனே விளையுறதில்
ஆறிலொன்றீயுறார்கள்

ராஜன் சொல்.

குறையென்றுமில்லாமல் தர்மஞ்செய்வதில்
மனம்குறைந்துமே இருக்கின்றதோ

இரண்டாவது மந்திரிசொல்,

குறையில்லாதிறையவே பொக்குழும்நிறைந்து
குவித்துவைத்திருக்கிறார்கள் ராஜனே.



வசிஷ்டர்வருகிற-பொதுவிருத்தம்

அந்தகல்வேளைதன்னில் லருந்தவசிரேஷ்டமானோர்
சுக்கிரமானமெய்யிற் றூளிதமணிந்துக்கொண்டு
சிரசைதயுமகிழ்ந்துமென்மேல் சிவத்தியானஞ்செய்துக்கொண்டு
வந்தனர்வசிஷ்டர்தானும் மகராஜன்சபைக்குத்தானே

வசனம்.

அகோவெத்தப்படியென்றால் அந்தசொற்கமத்திய பாதாள மென்னும்சொலலும்படியாகிய திரிலோகங்களும் ஒருநொடிக்குள்ளே திரியும்பிரம்மரிஷியாகிய வசிஷ்ட மகாமுனி சபைக்கு வருகிறவிதங்காண்க.

வசிஷ்டர்-வருகிறதரு-தாளம்-மட்டியம்,

தாம்ததக்கிணஜேகிணஜெம்தரிஜெம்தரிஙாக்தரி
தத்தரி கு குந்த தகுர்த் ததிமித ஆசேனுத்தகு
திக தகுத்த தகு தகு திகுததிகுத்த திகு திகு
தபோதனர்வந்தார் மஹாமுனி தபோதனர்வந்தார்

கபாலபுகபர் எரிந்து வெல்லாமசோதித்து
மிகத்தெரிந்த (தபோதனர்வந்தார்)
புலித்தோலிடை யில்போற்றி மெய்யில்
போதவெண்ணீறாத்தி லலிதமந்திரம்
ஓதத்தியான தவவசிஷ்ட (மூர்த்திதபோதனா)
ஆறாறாகமும்கணித்துமெய்யுங்கலா உழும்வினைகளும்
போக்குகொருனலக்கூறிப்புக்கதிபெறவுமதி
உண்டாக்கி (தபோதனர்வந்தார்)
கமண்டலம் தண்டெடுத்து வல்லகலைகளையும்
வடித்துவமைமெய்யார்பாகனையடுத்தருளுகமவ்வா
விலாயகனியானையேடுத்து (தபோதனர்)

வசிஷ்டர்விருத்தம்-இ-ம-மத்தியமாவதி-

கதிர்க்குலத்தரசருக்கு குலகுருவாய்விளங்கும்
வசிஷ்டமாமுனிவர்தாமும் வாசலில்வந்தாரென்று
அதிபதிருக்மாங்கத ராசனுக்கறிக்கையிட்டு
விதரணைகட்டியக்கார வேகமாய்வருகுவாயே

வசனம்.

ஆமடா அடா ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரா சீக்கிரமாய் ருக்ஜனிடத்திலேபோய் வசிஷ்டமகாமுனி ஆசாரவாசலில்வந்து இருக்கிறாரென்றுசொல்லிவாரும் பிள்ளாய்,

கட்டியன்வசனம்

அப்படியே மகாபாக்கியமையாசுவாமி,

கட்டியன்விருத்தம்-இ-ம்-ஜோருபதி,

மன்னவர்மன்னனுகை வாழ்ருக்மாங்கதனே போற்றி
பொன்னிலைகசமுகசன்னில பூம்பெருவசிஷ்டருனோர்
உன்னையுமழைத்துக் கொண்டு வொருகோடிக்குலனே நாளை
என்னையும் வரச்சொன்னார் இக்ஷணம் வருகுவீரே,

வசனம்.

சருணம் சருணம் மன்னமன்னவருக்கெல்லாம் மன்னனாயிருக்கப்பட்ட ருக்மாங்கத மகாராசனே வெகுபெரியவராகிய ஆசாரவாசலில் வசிஷ்டமகாமுனிவந்து உம்மையழைத்துக் கொண்டு என்னையும் வரச்சொன்னார் சுவாமி,

ருசன்-விருத்தம்-மத்தியமாவதி,

கட்டியன்சொன்னச்சொல்லை காதினிற்கேட்டபோதே
போட்டெனவெழுந்திருந்து பெருந்தவரிஷியைக்காண
கட்டிகைலாய்ப்புதைத்து கதிபெறவழிகாட்டென்ன
திட்டமதாகருசன் திருவடிபோற்றலாருன்

ருசன் தரு-திருபுடை-தாளம்.

பல்லவி,

சரணம் சரணம்-ஐயனே
உந்தன்தாள் பணிகுவேன் மெய்யனே

அநுபல்லவி,

சரணம்வசிஷ்டமாமுனிவரே சரணம்சகலசற்குணதிடரே
சரணம்மேன்குல குருவுமெனபோமே
சரணமடியேன்தபோதரே சரணம்

சரணங்கள்,

புனிதமாய்சடைமுடி தரித்தவர்
புசத்தினில்கஷாயம் விரித்தவர்
பனிநீடன்ஜெபமாலை பெருகதவ
யென்னையாள்கொண்டரும் கறத்தவா சர

ஆதாரவேத சாஸ்திர
மதையறிந்ததிலிருக்கும் சூஸ்திர
சாமிநுவென்சுவாமி தோத்திர
ஜயத்தில்செய்யும் நற்பாத்திர சர

திங்களணிசெஞ்சடை யோகேதினம்
தியானஞ்செய்டவர் தியக்கியமனம்
யின்கைவந்துயான் செய்தவகணம்
யிரர்கம்சூரபோடி வந்தனம் சர

இருஜன் விருத்தம்-மத்தியமாவதி.

தவனிலையதின்றுசெய்யும் தபோதனரிக்குவந்தா
அவனியிலடியேன்செய்த அதஷ்டமேவரிகிலேன்
பவமதுவொழிந்துநல்ல பாக்கியம்பெருகபெத்றேன்
மவுனமாதவரேயுந்தன மலரடிபோற்றிபோற்றி,

வசிஷ்டர்வாழ்த்து கவி

தரணியையாளவல்ல தாள்நடிவாழிவாழி

இராசன்-விருத்தம்,

நன்னயமிகுந்தகாலம நான்செய்ததவத்தாலுங்கள்
பொன்னடிக்கணைப்பெறறேன் பொரிந்திவினைஅடைந்து
யென்னருகுருவத்தோவில்லா மிசையுநற்கதிசிற்சேர
வுன்னிதவிருத்தமொனறு வுமுதியாய்சொல்வீர்சுவாமி

வசனம்,

சறுணஞ்சறுணசுவாமி யெங்கள் பூருசத்தாரெல்லாம்நற்கதிசேரு கதாகநலகாலமனைத்து சேரிட்டதாஸல் சேவீருடைய பொன்னடிக் காணப்பெற்றேன் இனகபாவடிவேனுக்கு நல்லவிருத்தமொன்று அநுசரிக் கும்படியாய் சொல்லுபசுவாமி,

வசிஷ்டர் விருத்தம்,

விருத்தமென்றுரைத்தமன்னு மேதினிதனிலேநீரும்
அறநகல்லாண்டிருந்து அகமகிழ்ந்தெப்போதிந்நும்
பெரிமையாயிருப்பதற்கோ பேரின்பமபெருவதற்கோ
குறித்திக்கவிருத்தமென்று கொப்பனசொல்லாயப்பா

வசனம்.

கேளும்ராசனே சூரியசந்திரருள்ளவரைக்கும் நவகண்டஜம்புதீவுக மெல்லாம் அரசாண்டு தேவேந்திரபோகத்திலும் குபேரசம்பத்திலும் அ திகமாயிருப்பதற்கோ அல்லதுபேரின்பமாய்கைவேசீசகி நறுமலங்களும ஞ்நதவஞ்செய்து மோட்சசாம்பிராசியம் பெருவதற்கோயென்று வி ருத்தம்கேட்டதுவிபரமாய் சொல்லுமகாராசனே,

ராஜன் திபிதை,

அய்யனேகேளும் அடியேனும்மென்றும்
வையகமதனில் மரணமில்லாமல்
புத்திரமித்திர களத்திரருடனே
பெத்துமேயிருந்து போகபாக்கியமதாய்
அகமகிழ்ந்தெப்போதும் ஐசுவரியத்துடனே
சகலசம்பத்துசந்தோஷமேலும்
பெருமேயென்றென்ற பெரிமையுமடைந்து

குதகேலாதிருந்து குபேரனுக்கொப்பாக
சோபிதமாகவே தயவொன்றில்லாமல்
பாபமுமறுகாமல் பறவனைவினைத்து
௰ நீஷனைத்துக்கல்லிருந்து செயகடத்திடனே
மோட்சமேயடைய முயர்ச்சியானனக்கு
விருதமொன்றிப்போதுவிளம்புவிருளுல்
வுருதியாய்செயவேண்டுயர்ந்தவமுனியே

வசனம்-

சறுணைச்சறுணைமையாசுவாமி அடியேன் மோட்சசாம்பிராச்சியம டையவேனுமென்றுபெண்மனதில்எண்ணங்கொண்டிருக்கிறேன் அதற்கு தக்கவிருதமொன்று அருள்தரவேனுமசுவாமி,

வதஷ்டர்விருத்தம்

திரணிதன்னையாளும் தார்வேந்தாகேளிச்சேர
யாரணியேகாதசி பதகேவிருதமொன்று
பூரணமாகவிந்தபுவியினில்செய்தியானால்
சீரணிமோக்ஷசாம்ராச்சியமே பெருவாயே

வசனம்,

சேறுநேப்ருஜனேகேளிவிஷ்ணுபக்தியானகையால் அரிவிருதமென்றுறயே காதசிவிருதம அனுசரித்தேயுண்டானால் மோட்சசாம்பிராச்சியம் அடைய வாய்மகாருசனே

ருசன்-விருத்தம்,

அரியிட விருதமொன்றிதடியே னப்படியேசெய்வேன்
பரிவுடனேகாதசியாரணியனுசரித்து
முறைமையாயிதற்குமுன்னே மோட்சமாரடைந்தாரையா
விரகுடனெனக்கு விபரமாயுரைசெய்வீரே,

வசனம்

சறுணைச்சறுணைமையாமுனிவரெயிதற்குமுன்னுக யேகாதெசிவிருத மனுசரித்துயார் அந்தவிஷ்ணுவினுடையபாதாரவிந்தப்தெரிசனஞ்செய்தா ர்களோ அவர்களைபெல்லாம அடியேனுக்குவிபரமாய் சொல்லுஞ்சுவாமி,

வதஷ்டர்-தரு-ஆதி-ருசட-னுக்னுபக்கிரியை;

பல்லவி,

ஏகாதசிவிருதமிருப்பவர்க்கே சொர்க்கம்

மென்பதேபவனேகதசி மன்று

அநுபல்லவி,

வாசாயநிவிருதமடுப்பவர்க்கே வலன்
வைகுந்தமென்பதேனேகாதசி மன்று

சரணங்கள்;

நாத்தெட்டிருப்பதி தேவஸ்தலங்களிலும்
கிலசண்டிருக்கும் ஏகாதசி மன்று
சாத்திரமறையோரும் சதுர்மறையோர்களும்
சகலரும்செய்யும் ஏகாதசி மன்று
சாலோகசாமீப சாரூபசாயுச்சிய
சதுர்பதவியு மேகாதசி மன்று
பாலாழிசயனனெபத்தியாது இப்பேர்க்கு
பரமபதமே யேகாதசி மன்று
வலிமையிகுத்திடும் மாபாவம்போக்கிடும
மரிபதஞ்சேர்க்கு மேகாதசி மன்று
அலையாழிதன்னிலே அமுதக்கடையும்போது
அன்றுபிறந்த யேகாதசி மன்று
பாரணிதன்னிலே பஞ்சாவமுர்தமும்
பங்கிட்டுகொண்ட யேகாதசி மன்று
ஆரணன்முதல் முனிவோர்களும்தேவரும்
அனுசரித்த யேகாதசி மன்று
வேதாந்தமுனிவரும் விஷ்ணுவின்விருதத்தை
விளக்கச்செய்யுவார் யேகாதசி மன்று
மாதவன்மலர்ப்பதம்நாதநாமக்கிரியையில்வணங்கிவிளம்பினேகாதசி

வசிஷ்டர்விருத்தம்

நாரதர்கண்வர்வியாசர்கற்த்தலசவுனகாதி
பார்த்துவாசர்பருசரபரமபாகவதரின்னம்
டார்த்தனர்புகழ் பெற்றோங்கும் பிறகளாதனுமிவ்விருத
சாரமுமறிந்துமோக்ஷச்சாம்பிராச்சியமுமடைந்தார

வசனம்,

ஆ, ஆகேளும்ருக்குமாங்கதமகாருசனே யேகாதேசிவிருதமனுசரித்த

துயாரார்கதியடைந்தாரென்றல்லோகேழ்க்குறுய்ஸ்ரீதர் வியாசர்கண்ணுவர்வால்மீகர்சவுனகாசர்பருசர்பார்த்துவாசர்கவுதமர் காசிபர்பிரகலாதனன் அருச்சுனன் இன்னம்அனேகம்பாகவதாள் அந்தவிஷ்ணுவினுடையதிருவடிதுசரித்துமோட்சசாம்பிராச்சியமடைந்தார்களாருசனே.

ருஜன்-விருத்தம்;

அங்கணர்சூர்னியேயுந்தன் தூயமலர்பாதம்போற்றி
இங்ஙகவந்தெனக்குசொன்ன விவ்விதவிருதங்கன்றாய்
சங்கையில்லாமல்செய்து சாயுச்சியபதவிசேர
பொங்கமாவிவிமேல்மாயன் பொன்னடிபோற்றுவேனே

வசனம்

கேளுஞ்சுவாமியெங்கள்வமுசத்தார்செய்த புண்யப்லத்தினுலேதேவரீருடைய பாததரிசனம் எனக்குகொடுத்தது அதினுனுடைய புண்ணியத்தால்யிவிமேல் நீங்கள்சொன்னவிருதத்தைநாடிநல்லகேதியடையும்படி ஸ்ரீமன்நாராயணரே தியானிப்பேன்சுவாமி.

வசிஷ்டர்-விருத்தம்

புவனமோர்க்குடையினாளும் புஜபெலபருக்மாமன்ன
அவனியில்விருதந்தன்னை அன்புடன்செய்தெயானல்
பவமொழிந்து மோமந்த பறந்தாமன்கிருபையேசெய்வார்
தவனிலைக்கேதமேனும் தடங்கலில்லாமல்தானே.

வசனம்.

கேளும்ருக்மாங்கதமகாருசனே நான்சொன்னயேகாதசி விருதம்அனுசரித்ததேயுண்டானல் ஸ்ரீமன்நாராயணர் பாதாரவிந்தஞ்சேரலாநான் போய்வருகுறேன்மகாருசனே,

ருஜன்-விருத்தம்.

செலவதுதருகச்சொன்ன செவதபமுனியேபோற்றி
வுலகினில்யாவும்போக வுயர்ந்தநல்விருதஞ்சொன்னீர்
நலமுடனதனைநாடி நறக்கெதியடையவேனையா
சலனிதுவெனக்குபோதும் போய்வாரும்போற்றிபோற்றி

வசனம்.

சறுணம் சறுணம் முனிநாததே அடியேன்செய்த பூர்வவினைப்பயனே

க்லாம்போய்கல்லமோட்சகதியடைய விருதஞ்சொன்னீர் அதுலேபோது
ம்போய்வாருஞ்சுவாமி,

பொது-விருத்தம்.

தவமுனிபோனபின்புசடிதிகட்டியனைகூவி
இவுக்கணயெழுந்திருந்து சுணைத்தினில்கொலுவினுக்கு
நவமணிமாலைபூண்டநரச் சந்தியாவொளியாள்தன்னை
கவையொன்றுயிருக்குதென்று கடுகிவிலழைக்கச்சொன்னார்

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக வசிஷ்டமகா முனிவர்
யேகாதசிவிரதஞ்சொன்னவுடனே விதூஷகனுடனேதன்தேவி சந்தியா
வொளியையழைத்துக்கொண்டு வரச்சொல்லுகிறவிதங்காண்க,

ராஜன்-விருத்தம்

யேவல்கட்டியனேகேளா யாவுமேமயாலேருதும்
தேவியாளிடத்திற்சென்று திருவடிபோற்றிசெய்து
இவிரமாகராசன் சணத்திலழைத்துகொண்டு
வாவென்றுசொன்னுரென்று வனிதையேயழைத்துவாரீர்

வசனம்

ஆ ஆ வாரும் விதூஷகா யென்பிராண பதமானசந்தியாஒளியை அ
ழைத்துக்கொண்டு வரச்சொன்னேனென்று அழைத்துககொண்டுவாரு
மப்பாவிதூஷகா.

விதூஷகன்-வசனம்

அப்படியே அழைத்துக்கொண்டு வருகுறேன்சுவாமி

கட்டியன்-விருத்தம்,

அம்மணிதாயேயுன்றனடமிக்கையாயுனைப்பேன்கேளாய்
இம்மையில்முழுதுமாளும் பிருதிவல்லபனும்மை
செம்மையாய்கொலுவுக்கிப்போ சீக்கிரமாலாவேசொன்னார்
அம்மணிவருவாயுந்த னடிதனைபோற்றிபோற்றி

வசனம்.

சகுணம்சகுணம்மாதாயே எங்களுடையமகாராஜன் ஒருகொடிக்கு ள்ளே அழைத்துவரச்சொன்னார் வாருமம்மாதாயே.

சந்திரயாஒளி-விருத்தம்,

அழைத்துவாவென்றுசொன்ன அரசன்மூன்றுகத்தானே
குழைத்துசந்தனமும்பூசக்குயில்மொழிதாதிமாரோ
யிழைத்துசெம்பணிகள்பூண்டு யிருபுரங்கவரிவீச
தழைத்திடுங்கொலுவினுக்கு தானுமேவருகுவேனே

வசனம்

வாருமம்மாதோழிமார்களே என்பிராணனாயகர்யென்னை யழைத்து க்கொண்டு வரச்சொன்னபோதெ தடங்கலுண்டோ இதோ வருகுறேன் வாருமம்மா தோழிமார்களே

சந்திரயாவொளி-சேபத்தியம்

சந்திரன்போலவே சதியிட வதனமும்
சடபிலேவேணியில் தகதகென்ன
சந்திரமாய்நெத்தி சுட்டியில்முத்துகள்
அலங்கியெயாடிட திருவதனில்
சிந்தூரதிலர்தமும் செவியினில்குண்டலச்
திவ்வியமூக்குத்தியுந்தியங்கியாட
கந்தபரிமளங்கள் சவ்வாதுநூசியே
கையில்வளையலும் கங்கணமுமாட
சந்திரகாந்தசேலை சரிகையின்ன
சந்தமம்பணிகள் செய்தாதிகளுடனே
சந்திராவொளியெனும் தையலாளும்
சந்தோஷமாய்வந்தாள் சபைதனிலே.



சந்தியாவளியம்மன்.

சந்தியாவொளி-வருகுறதருவு

ஆதிதாளம்.ராகம்-மோகனம்;

பல்லவி.

அதிருபசவுந்தரிய வதிகுண வபினய
அருளவ சந்தியாவொளி வந்தாள்
அதிவிதரணகுணமுள்ள மதுரசமொழியெ-அரு
பதுமலர்வதன அதிக சற்குணபருவசந்தியாவொளி வந்தா

அநுபல்லவி,

நடையிலன்னப்பேடையும் மிடையுமின்னர்க்கொடியு
நாணையமாகச்சேவபூணும்பணிகளும் காணவேமங்கையர்ஞெண்டிடவே
நலமிலகியவபினயணவடிவழகி வுலகிலிலெவர்களுக்கிகரிலேனவே

சரணங்கள்,

சித்திரவர்ணசேலையும்
சிரபெருங்குழலினில்
மார்பினிலாரமும்

முத்துமணிமாலையும்
தரிநவமணி
மதாய்ரதி

சிருயிடை குலுங்கிட வணநடை நடந்து
சரணதண்டையுடன் சதங்கைகல்கலென்ன அதி
அருணனுதைகவொளி அருவைசந்தியாவொளி
ஆதரவாகவே மேதினியோர்களே
தீரக்கார்த்திகே மாதவனே
அவதினம் மறவாம லரிதனோ நாடியே
முறைமையாகதிவ்விய மோகனம்பாடியே அதி

சந்தியாளுளி·விருத்தம்·

இராகம்-ஆனந்தபைரவி

ஜெகமேழுமொருகுடைக்கீழ் சொங்கோலுசொலுத்துகின்ற
மருண்ணெயெந்தன் பிராண வல்லபாபோற்றிபோற்றி
அகமதிலிருக்தஎன்னை அழைத்தகாரியமுமிந்த
வகையென்றுசொல்லுமையா மன்னவாபோற்றிபோற்றி

வசனம்

சமுணம்சமுணம் மிந்தநவகண்டங்களை யெல்லாம் ஒருகுடையிலாள
ப்பட்ட யென்பிராணவல்லபா என்னையழைப்பித்த காரியம் தெரியச்சொ
ல்லும்சுவாமி.

ராஜன்-விருத்தம்-இ-ம-மத்தியமாவதி.

சந்திரவதனம்போன்ற தையலேசொல்லக்கேளாய்
விந்தையாயேகாதசி விரதமோயிருந்துநாமும்
சந்தோஷமாகவாழ்ந்து சாயுச்சியபதிசேர
சிந்தையில்மகிழ்ச்சிகொண்டேன் செய்வதோசொல்லும்பெண்ணே

வசனம்

வாரும்என்பிராணபதமானபெண்ணே சந்தியாளுளி நாமிந்தஉலகத்
தில் அரசாண்டு அனுத்தியகாலத்தில் மோட்சசாம்பிராச்சியம்பெரும்படி
நமது குலகுருவாகிய வசிஷ்டமகாமுனி ஒருவிருதஞ்சொன்னார் அந்தவிரு
தஞ் செய்யவுனக்கு சம்மதிதானோசொல்லும்பெண்ணே

சந்தியாளுளி-விருத்தம்-இ-ம-கேதாரிகௌளம்-.

சொல்லுமென்றெனக்குரைத்த சுடர்முடிமன்னனேகேளாய்

அல்லவை தலைத்தாமும் அரிவிருதமனுசரித்து
சல்லாபமாகனுமும் சாயுச்சியபதவிசேர்ந்தால்
நல்லதுசெய்புலமையா நானுமப்படியேநடப்பேன்

வசனம்.

கேளும்என்னுடைய பிராணநாதா தேவரீர்சொற்படிக்கி யேகாதசி விருதமனுசரித்து அனித்தியகாலத்தில் நல்ல கதியிற்சேருமபடியாய்நமது குருசொன்ன பிரகாரம் நடந்தால்எனக்கு சம்மதிதானேயாசுவாமி

இருசன்-விருத்தம்.

பெண்களுக்கருமிருக்கும் யினியகட்டியனேகேளாய்
தந்திமேலேத்திபேரி ஜெகமெலாமறிவதாக
விண்ணைசேரேகாதசி விருதமேஅனுசரித்து
வந்திடுவீர்களென்று வரிசையாயறைவிப்பாயே

வசனம்.

ஆமடா அடா ஆசாரவாசல்காக்கும் கட்டியக்காரனும் அரசுசெலுத் திவரப்பட்ட அன்பத்தாருதேசமும் யேகாதசிவிருதம் சகலஜீவாத்துமாக் களும்பசுசிசுமுதல்கொண்டு கிரமமாயிருக்கவேணுமென்று ஆனையின்மே ல்பேரியேத்தி அறைந்து வரச்சொல்லுமப்பா கட்டியக்காரா

கட்டியன்-வசனம்.

அப்படியே அறைந்துவரச் சொல்லுகிறேன்சுவாமி

கட்டியன் கூறல்?

திருவளர்சிரீஜாபுரிதனையாள்மன்னன் செம்புமாக்கினைபடிக்கி
தேவபிருமணர்க்ஷத்திரியர்வைசியசூத்திர சிசுபசுசிவர்க்களும்
தசமிநாள்வுபவாசம்ஸ்ரீஹரிபஜனையும்செய்துமேஜாகரமாய் (கு
துவாதசியில்ஸநானமும்ஜெபதபசிக்ஷையும்செய்துபின்பிருமணர்க்
கிருத்தமாய்பாலமுதுசோறுசோறுபசாரம்செய்துகிறமுதன்னைவும்
தேவதாபத்தியும்புத்தியுமுண்டாகி திரித்தமாசெய்யவேண்டும்
யெல்லோருமிப்படி யேகாதசிவிருதம் யிருந்துபோஜனஞ்செய்யவும்
யிதுதப்பிநடந்தோர்க்குயிவ்வுலகுதன்னிலேவருஜதண்டனை நடக்கும்

பொது-விருத்தம்

ஆதிகேசவனார்பாதம் அநுதினம்தியானஞ்செய்து

நீதொன்றுமில்லாமல்தான் செங்கோலுஞ்செலுத்தும்போது
மாதுமும்பத்துமாகி மங்கைசந்தியாவளியும்
போதுகாலங்கள்போவு பொருக்காமல்புலம்பவாருள்

வசனம்.

ஆகோதெப்படி என்றால் வசிஷ்டர்சொன்ன யேகாதசிவிரதம் வருக்குமாங்கதமகாராசன் தானரசாளப்பட்டவகண்டக்கரும்பேரியளைவித்தாவிஷ்ணுவிரதம் எல்லோருஞ்செய்து மரணமில்லாமல்சுகஜீவியாய்அரசாண்டு வருமளவில் சந்தியாவளி யமனுக்கு பூரணகெற்பமாய்போதுகாலங்கள்போவு பொருக்காமல் புலம்புகிறவிதம் எப்படி என்றால்

சந்தியாவளிவிருத்தம்-இ-ம்-முகாரி

யெந்தனுக்கினிமையாக யேவல்செய்தோழிகேளாய்
மைந்தனைபெருதல்வேண்டி மாதவஞ்செய்யுவார்கள்
பிந்தவேதனையின்கோரம் பெண்ணென்றுசொல்லுவேனம்மா
சிந்தைதான்கலங்குதென்று செய்குவென்கிட்டவாடி

வசனம்.

சேனடி யென்னுடைமைக் கினிமையாக யேவல்செய்யும் வராங்கிதர்புத்திரனாந்தைசயிருவெளுத்துசெய்துபின்னக்கோ பெரினேப்பாரகள் அவதகிணைக்கும்போதே யென்மனது கலக்குது யென்னசெய்வேன் இப்படிஎன்கிட்டவாடி தோழி

தோழி விருத்தம்-ஆனந்தபைரவி.

தார்குழ லழகாளென்னும் சந்தியாவளியேகேளாய்
பார்மிசைப்பெண் ஜென்மங்கள் படைத்துதித்த வர்கட்கெல்லாம்
சீர்பெருக்கனவரோடே சேர்தலுங்கெர்ப்பமாகி
யேர்பெருமைக்கர்தமை யீன்றிடல்கடமைதானே

வசனம்.

கேளுமம்மா சந்தியாவளித்தாயே பூமியில் பெண் ஜென்மங்களாய்ப் பிறந்தபேர்களெல்லாம் புருஷனைக்கூடியின்பாவநுபவிக்க அடைந்து அதனாலேயின் பிள்ளைபேருகுறதும் சகிக்கியமாயிருக்குறதுதானே அதைக் குறித்து விசனப்படாதே அம்மாதாயே

சந்தியாஒளி தருவு-ஆதி-ராகம்-தன்னியாசி

பல்லவி.

சகியேஎப்படி யினிதாளேனடியம்மா யிந்தவகைமோசம்
வருமென்றறியேனடி யம்மா

அனுபல்லவி,

அகமீதினிலெப்படி அசீனவயர்குளிகுளிக்க
வுகனையாய்இதற்கொரு வுபாயமுமிருக்காதோ சகியே

சரணங்கள்.

யிருந்தாப்போலிருந்தெனக்கு யிடுப்பைநோகுதேஅம்மா
யிங்கிருந்து அடிவயத்தி லெட்டிபாயுதே
அரிஅரியில்வகையாக அமைக்குமென்றறிந்தென்றால்
அய்யோஅவ்வாசனை அணைத்துக்கொள்ளேனடி சகியே

கணவனையினிமேல்நானுங் கினவிலுஞ்சேரேன் யிந்த
காரணம்வருமென்றறிந்தால் கண்ணாலேபாரேன்
துணிவுகொண்டேன்புருஷன் புணரவந்தபோதினும்
அதிசெய்துதாளாதனே அடவேண்டாமென்றுவேன் சகியே

முன்னாள்செய்தவினையே முடுக்காகனேதானம்மா
யின்னாளில்வேதைப்பட யெழுத்தோவெனக்கம்மா
அன்னமேயடிவிசேடி ஆதரவாகநீகூடி
யென்னைரக்ஷிப்பவடி தன்னியாசிருகம்பாடி சகியே

சந்தியாஒளிவிருத்தம்-இ-ங்-முகாரி,

அன்பிலியயர்ந்தசந்தன் அமுருள்ளசகியேகேளாய்
யின்பம்போல்வந்தகொப்பம் யெனக்குதிறந்தகாலே
யென்பதிக்குடைப்பாய் ஊகவேர்கீடுமநத்துவச்சிலேனடும்
பின்பெருவலிதான்கண்டால் பேதைநானென்னசெய்வேன்.

வசனம்.

கேளாய் என்பிராணபதமான சகியே யெனக்காலுல் போது காலம்

கிரந் தவருது கெர்ப்பவேதனையெடுத்துபிறாவிக்காமுன்னம
ராசனுக்குசொல்லிகைகதேர்ந்தமருத்துவச்சியை அழைத்துவாருக்களம்மா

தோழி வசனம்

அப்படியேராஜனுக்குசொல்லி மருத்துவச்சியை அழைத்துவருகிறேன்

தோழிவிருத்தம்-மத்தியமாவதி

உலகெலாம்புகழுங்கீர்த்தி யுயருக்மாங்கதனேகேளாய்
மலர்கிசேர்முக்காளசந்திரா ஒளியெனுமுனதுதேவி
நலம்பெறுமகெற்பமாகி நாள்நிறைந்திருக்கமுத்தாள்
வலிபெறும்மருத்துவச்சியை வரச்செய்யவேணுமையா

கேளுநுஞ்சுவாமி வுமது பிராணபதமாகிய சந்திராவொளியம்மா பூரணகெற்பமானதால் மருத்துவச்சியை அழைத்துக்கொண்டு வரச்சொன்னாள்

இராஜன்விருத்தம்-ராகம்நாட்டை

ஆசாரவாசல்காக்கும் அரியகட்டியனேகேளாய்
பாசமாமெனதுதேவி பதிகிறாள்கெற்பவேதை
கூசாமல்மருத்துவஞ்செய் குறிதெரிகிழவிதன்னை
நீசோம்பலிறாமற்சென்று நிமிஷத்திலழைத்துவாடா

வசனம்

ஆரடா அடா ஆஜாரவாசல்காக்கும் விதூஷகா யென்பிராணப்தமானசந்திராவொளி கெற்பவேதனைபடுகிறாள் நீசோம்பலாயிராமல் சீக்கிரமாய் போய் மருத்துவச்சியைஅழைத்துக்கொண்டு வாருமப்பாவிதூஷக

கட்டியன் வசனம்.

அப்படியேஅழைத்துவருகிறேனையாசுவாமி

பொதுவிருத்தம்

தலையதுநரைத்துகூனு தடியொருகையிலூன்றி
முலையதுமுழம்நீண்டு முன்னுமபின்னுமடிக்கொண்டு
வுலகினில்மாதர்க்கெற்ப நோயதையொழிப்பேனென்று
வலிமையும்பேசிக்கொண்டு மருத்துவகிழவிவந்தாள்

வசனம்

அகோதெப்படியென்றால் நரைத்தலையும் கூனுமுதுகும் நீகண்ட கொங்கையும் தடிக்கைகயில் கோலூன்றி சந்திராவொளியம்மனிடத்தில் மருத்துவகிழவி வருகிறவிதங்காண்க



மந்திரசானிவருகிற-தருவு அடதாளம்

மந்திரசானிவந்தனள் கெற்பவதிக்கு மந்திரசானிவந்தனள்
ஒருக்கால்கெற்பவேளைதயாக் கொடிக்குள்தாய்சிசுவையும்
தாதிறத்தால்வேறே தனாககாணச்செய்வேனென்று மந்திர
யெடுத்தடிவைக்குமுன்னே யினைத்தினைத்தூரடிக்கி
யெதிரினிதூரமென்று யெண்ணிச்சொன்டுயோடிக்கி மந்திர
கொழுத்தபெண்டுகள்கள்ளப பிளைவாங்கிமெள்ள
பிழைக்கஉட்டார்களென்னை பிள்ளைவெளிதள்ள மந்திரசானி
வழக்கமாகநீ வறவேணுமென்றதேட
அழைக்கவவர்களெழுநுகலியாணபாட மந்திர

மந்திரசானி-வசனம்

அம்மாசந்தியாவொளிவுனக்கு யெப்படிதானிருக்குது சொல்லடியம்மா

சந்தியாவொளி-விருத்தம் புன்னுகவராளி

நாணமேவிடுதேசொல்ல ஒன்னைசொல்வேனம்மா
சாணல்லோவயிறென்பார்கள் சதுர்முகனளித்தவாறு
காணும்பிண்டம்நின்று கலக்குதே அடிவயத்தை
வீணல்லோபெண்ஜென்மந்தான் வேதிலிக கெக்காதம்மா

வசனம்

ஐயையோபிர்மதேவன் கட்டளைப்படியே யென்சாணுள்ளமனிதருக்கு ஒருசாண்வயறென்று சொல்லுவார்கள் அதில் நான்படுகிறகோரத்தை யெ னனென்றுசொல்வேனடி வயத்திலநின்று அந்தப்பிண்டங் கலக்குதே ஐ னென்ன செய்வேனடி தோழி

சந்தியாவொளிதருவு-ஆதிதாளம் இராகம்-நாதநாமக்கிரியை

பல்லவி

ஜென்மஜென்மத்திற்குபுருஷன் யினிவேண்டாமம்மா ஜென்மஜென்ம

ஜென்மம்ஜென்ம ஸ்ரீ ஜெனனமெழாகிலும்
மன்மதனிகரொத்த மணவாளனாகிலும் ஜென்மஜென்மத்திற்குபுருஷன்
பூர்வஞ்செய்வினையிப் புவிதனிலிப்படி
பெண்ணெனஜெனித்தது போதுமினிப்படி ஜென்மஜென்மத்திற்கு
ஜெனனமேபெண்ணாய் ஜெனித்திடலாகாது
ஜெனித்தாலும்புருஷனை சேர்ந்திடலாகாது ஜென்மஜென்மத்திற்கு
கர்மமோமுன்செய் காரணமதனால்
பிரம்மனுந்தலையினில் மர்மமவர்தெழுதினன சென்ம சென்மத்திற்கு
அண்டர்முனிவர்தொழும் வினைபிரினாளால்
கண்டமுந்தப்பியிப் பிண்டமுமதுவெளிகண்டால் சென்ம சென்மத்திற்கு
கண்டமுந்தப்பியிப் பிண்டமும்வெளிகண்டால்
கொண்டபுருஷனிட அண்டையிலபடுக்கேனுன் சென்ம சென்ம
காதலாய்காகத்தேனை கைதொழுதேற்றினேன்
நாதநாமக்கிரிகை முகத்தில்போற்றினேன் ஜென்மஜென்ம

சந்தியாவொளிவிருத்தம இராகம்-புன்னாகவராளி

மருத்துவமாதேயெந்தன் வருத்தமார்க்குண்டோவம்மா
பொருத்திடலாகாதிப்போ பிறகுசேவையத்தில்பிண்டம்
கருந்தென்மேல்வைத்துயித்த கருவெளியாகச்செய்தால்
வருத்தமாய்ஞானணிந்த வுடமைகளுனக்குத்தாறேன்

வசனம்

அடியம்மா யிருந்திருந்து அடிவயத்தைகளெருகுதே யிரண்டுபக்கமும் வலித்துது நடக்காக்கால்பின்னிக்கொண்டுபோகுது யிந்தவருத்தம யெவாகளுக்குமிருக்காது ஆகையாலிந்த கருவெளியாகச்செய்தால் ஞானணிந்திருக்கிற வுடமையெல்லாம வுனக்குத்தருகிறேனம்மா

சந்தியாவொளி கருவு-ஆதி இருகம்பயிறவி

தாளயென்னலாகாதாகாது தையலேமானே தாளயென்னலாகாதாகாது
தாளயென்னலாகாது தனல்வெதுப்பாகுது
திரேகமும்வேர்க்குது சகிக்கவுமுடியாது தாளயென்னலாகாதாகாது
துடித்துமாருனோக்கிது துடைகள்ரெண்டுநேருகுது
கோதியேயிதற்கொரு சூட்சம்நீசொல்லாயோ
யிடுப்பும்விட்டுப்போகுது யிளைப்புமிகவாகுது
யின்னமும்பொருத்திட யென்னலாகாதாகாது தாளயென்னலா
அடிவயிறேருகுதம்மா ஆதரவாறம்மா
அன்னியர்போலென்னை அவனியிலென்னுதே
பிடியுங்களிடுப்பமமா பெருமூச்சுவாங்குதம்மா
பேதைமனதாளென்று பிரியமுமிருக்காதோ தாளயென்னலாகாதாகாது
யெங்குமேநேருகுதம்மா இடையித்துபோகுதம்மா
வுங்களாலேபாதி வுடம்புமுரியுதம்மா

சங்கரனேவேண்டி சகிகளெனுடுக்கடி
பொங்கமாய்ப்பிறவி புகழ்பெரபாடுங்கடி தாளமெடென்றலாசாதாகாது

சந்தியாவொளி-விருத்தம்-ராகம்-முகாரி

யெப்படிபயப்படாமல் யிருப்பதென்செயவேனம்மா
குப்புறகவிழொண்ணாது குனித்து மேனிமெருண்ணாது
தப்பிலாகைகள்சோர்ந்தது தளருதேகனுவுலர்ந்து
செப்பமாய்நிற்கவொணாது திரண்டிதோவருகுதம்மா

வசனம்

அடியம்மா யெப்படிபொருப்பேன்நிமிமறவுங்கூடாது குனியவும் கூடாது அடிவயர்திறண்டுவருகுதே யெப்படிபொருபபேன்பாட்டி

பொது விருத்தம்,

வலிமையில்மிகுத்தபிள்ளை வயதுநீண்டிருக்கும்பிள்ளை
தலைமையாயிருக்கும்பிள்ளை சவுந்தரியமுடையபிள்ளை
கவியிலுயர்ந்தபிள்ளை காரிழைதனக்குபிள்ளை
வுலகெலாம்ஆள்வதற்கு ஒருபிள்ளைபிறந்ததன்றே




பொதுவுதருவு-மட்டியம்-இராகம்-பந்துவராளி

பல்லவி

குளிருளித்தாள்சந்தியவொளி குளிகுளித்தாள்
வளம்பெருங்கிரிஜாநகர்மேவிய மன்னன்ருக்மாங்கன்மனைவிசந்தியாவொளி

குளிகுளித்தாள்

அநுபல்லவி

பக்தர்சித்தர்நித்திய தத்துவத்தோர் தொழும்கர்த்தனரிபதம் பத்தியதா
கவேநீசித்தத்தில்வைத்திடும்பத்தினியாள்தால்பத்துமாதருசுமந்துமேபு

த்திரனை

## குளிகுளித்தாள்

பெண்ணுக்குள்பெண்ணை வேறானதுபோலவே வள்ளல்தருளாலே சன்
னொன்றில்லாமல்-ரீ- சல்லாபிலாமலேவுள்ளங்களிக்கவே
தென்றுமணிபெண் பிள்ளையைக்ன்றாக குளிகுளித்தாள்
மண்டலாதிபர்மகுடவர்த்தனரும் தொண்டுசெய்துகொண்டு தெண்டனி
டுக்கொள்ளும்-ரீ- பெண்டிகைசயாளும் பிறவனூக்மாங்கதன் பெண்டுசெ
பிள்ளையேவிண்டுவினருளால் குளிகுளித்தாள்
திதிவாரம்திங்கள் சுபஞையோகம்நல் ஜென்மலக்கினம்மீனம்
சுக்குறம்புதன்பத்தில்ரீ சத்ருடன்சந்திரன் வியாழனஞ்சொன்பதில
சந்திக்கபந்துவ ஏளியெடுத்ததில் குளிகுளித்தாள

## பொதுவிருத்தம்

வருமவினைகொடியருக்கும் மனத்துயறகத்துதற்கு
தருமகேஜெயமென்றென்னி தற்பறன்தன்னைககாண
அரிமையாய்கவமிருந்து அரிதனைபூசைசெய்து
ஒருமையாய்பயன்றெடுத்தாள் வுத்தமிமகனைத்தானே

## தோழிவிருத்தம்-ஆனந்தபயிறவி

மன்னர்கள்மன்னுபோற்றி மனவியாயுளக்குவாய்த்த
மனுதேன்மொழியாள்சந்தியா வொளிகெற்பதுயரம்நீக்கி
பொன்னுலகாளுமிந்திரனை புகழ்ந்திடும்புதல்திரன்தன்னை
மின்னிலமகிழப்பெற்று ளினையடிபோற்றிபோற்றி

## வசனம்

கேளுமராஜராஜேஸ்வரானுனது பத்தினியாகியசந்தியாவொளி யம்மன் கெற்பவேதனைநீங்கி பூலோகமெல்லாம்ஒருகுடையின் கீழாளத் தக்கதா ப்புத்திரனை பெத்தாளையாசுவாமி

## இராஜன்-வசனம்

அப்படியா மகாபாக்கியம் சந்தோஷம்ஆண்சிங்கத்தைப்போலே நம கு ஒருபுத்திரன்பிறந்தானமந்திரி

## இராஜன்விருத்தம்-இராகம்-நாட்டை

காரியமறிந்துபேசுங் கரித்துள்ளமந்திரிகேளாய்
தார்ப்பெருமெனக்குபுத்திர சந்தானமுண்டாச்சென்று
சீர்பொரச்சொன்னுளிந்த சேயிழைக்க கனேகரத்ன
ஆரமும்பணிகள்வஸ்திரம் அடவுடன்கொடுத்திடாயே

## வசனம்

கேளுமப்பாமந்திரி பகவத்கடாக்ஷத்தினாலே யெனக்குபுத்தி ரொச்ச ம் வுண்டாச்சென்றுவந்து சொன்னதோழிபெண்ணுக்கு அனேகபூஷண வஸ்திரம் கொடுத்து அனுப்பு மந்திரி

பொதுவிருத்தம்

பொன்மணிவஸ்திரபாணம் பூதானங்கோதானங்கள்
தன்னையமுடனேயீந்து ராஜருக்மாங்கமன்னன்
தன்னிலேமகிழ்ச்சியானார் மைதயலார்கள்நீருட்டி
பொன்மணிதொட்டிலேத்த புதல்வனைக்கொடுவந்தாளே

வசனம்

இந்தபிறகாரமாக ருக்மாங்கராஜன் புத்திரன்பிறந்த சந்தோஷத்தினாலே சகலதானங்களும் வழங்கி மகிழ்ச்சியடைந்திருக்க அப்பால் அங்குள்ளதோழிப்பெண்கள் அந்தப்பிள்ளைக்கு திருமஞ்சனமாட்டி சர்வாலங்காரத்துடனே நவரத்னகசிதமான தொட்டிலேத்தி தாலாட்டுகிறவிதமெப்படியென்றால்

தாலாட்டுகிறதருவு இராகம்-நீலாம்பரி

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
தாரார்கதிர் குலத்தில் தவமேயனுபவமே
தேனூறல்பாயும் செழுமாங்கனியமுதே
வானோர்புகழவந்த வள்ளலேகண்வளரீ ஆராரோ ஆராரோ
செங்கரும்பின்பாகும் செழுமாமலர்த்தேனும்
பொங்கும்பசும்பாலி லிடும்பூத்தமுதேகண்வளரீ ஆராரோ
பத்தரைமாத்துள்ள தங்கம் பதுமைமிகச்சிறந்த
சித்திரைப்பொற்கொட்டிலிலே சிராசகனேகண்வளரீ ஆராரோ
துங்கருக்மாங்கமன்னன் சுதனாய்விளங்கவந்த
பெங்கள்கலிதீர்க்கவந்த விலஞ்சியமேகண்வளரீ ஆராரோ
சீரார்ருக்மாங்கமன்னன் சிந்தைமகிழ்வந்தவனே
பேராய்நீலாம்பரியில புண்ணியனேகண்வளரீ ஆராரோ

இராசன்-விருத்தம்

கார்குழல்வனிதையென்னும் சந்தியாவொளியுமீன்ற
யார்க்கரில்லாபிள்ளை யாண்பிள்ளையானதாலே
பேரென்னவென்றுகேட்டீர் புவியுள்ளோரறியத்தானே
தாரணியாளவந்த தருமாங்கதனென்பீரே

வசனம்

கேளுங்கள்மந்திரிமார்களே யெனக்குபிள்ளைபிறந்தது உங்களுக்கு சந்தோஷந்தானே ஆகையாலவனுக்கு நாமகரணம்மிந்தவுலகமெல்லாம் ஆளவந்துதித்தபிள்ளை யின்பேர் தருமாங்கதனென்று அழையுங்களப்பா மந்திரிமார்களே

பொது-விருத்தம்

திக்கமாயிந்தவாறு ஜெகமெல்லாம்விருதம்நல்ல
மார்க்கமாய்செய்துமாலின் பலாடிபோற்றுமந்நாளில்
மூாககயாயேமராசன் மூவுலகோர்கணக்கும்
பார்க்கவேசேனையோடு பன்புள்ளகொலுவில்வாரான்

வசனம்

அகோதெப்படியென்றால் கிரிஜாபுறம் ஆளப்பட்ட றுக்மங்காத மகாராஜன் அன்பததாருதேசமும் யேகாதசிவிருதம் சகலசீவராசிகளேயும் கிரமமாய்ச்செய்யச்சொல்லி தாமுமக்தவிருதம அனுசரிக்க யிறப்பில்லாமல் பிறப்பதிகமாய் யிருக்கும்நாளில் ஒருநாள் யெமதர்மருஜன் பூமியந்தர சொர்க்கமெண்கிற யிம்மூன்றுலோகத்திலுமுள்ள சிருஷ்டிதிதி சம்மாரம்யிதுகளிலுடைய கணக்குவழக்குகளைபார்க்கவேணுமென்று ஆடம்பறத்துடனேமுதல் கட்டியன்வருகிறவிதம் யெப்படியென்றால்

யெமக்கட்டியன்-விருத்தம்

சந்ததச்சீவுகட்கு தண்டனைசெய்யுகின்ற
தெந்திசைசக்கதிபன்வாசல் திரமுடன்காத்திருக்கும்
தந்திரயிகதிரஜாலம் சமத்துகளனேகம்பேசி
சுந்திரகட்டியகாரன் சுபமுடன்வருகின்றானே

வசனம்

அகோதெப்படியென்றால் ராஜாதிராஜன் ருஜமார்த்தாண்டன் யெமதர்மராசன அரசாட்சிர்குள்ளாகிய பூமியந்தரபாதாள யிந்தமூன்றுலோகத்திலுமுள்ள சகலசீவராசிகளுடைய கணக்குகளைபாரக்க வருகிறபடியால் சபாறஞ்சிதம்செய்ய கட்டியகாரன்வருகிற விதம்யெப்படியென்றால்

கட்டியன்வருகிற-தரு-ஆதிதாளம்

கட்டியக்காரனும்வந்தானே சமைத்துபேசி கெட்டிகாரனென்றானே
பட்டணமமிட்டுக்கொண்டு பாங்கொறுகையினில்திண்டு
திட்டமதாய்செய்யுந்தொண்டு தீரன்மனைக்கண்டு
தட்டியேகைகளைரெண்டு சண்டைக்கிவிவன்மீண்டு
கட்டியனையாப்புக்கண்டு பட்டபாடுமெத்தவுண்டுகட்டியர்
தந்திறமனேகம்பேசி சந்தனம்புனுகுபூசி விந்தையாக்கைவீசி
வேடிக்கையுடனேதாசி சுந்திறத்துடனேபேசி சிலவுக்குப்பரித்துகாசி
தந்தாள்மகருசியென்று தாசிக்கநுக்கூலம்பேசிகட்டியக்காரனும்

பொதுவிருத்தம்

திருவுணாகிரிஜையாளும் செயங்கொள்றுக்மாங்கராஜன்
அரிவிருதமொன்றசெய்ய அதினலேசீவுகட்கு
நரகவேதனையில்லாமல் நற்கதியடையும்போது
பறவியுஞ்சிறைதனைந்து வருகின்றார்கொலுவில்தானே



எமன்வருகிற-தரு-ஆதிதாளம்

இராகம்-நாட்டை

கண்ணிகள்

யெங்கெங்கும்கொடிகொண்டவர் கிடாவிலேறி
யெமதர்மராஜன்வந்தனர்
கிங்கிலியர்கிடுகிடென்னவே எமதர்மராஜன கொக்கரித்து ஆர்பரிக்கவே
பாசசூலங்கையிலேந்தியே எமதர்மராஜன் பாலபிண்டி வாளுமேந்தியே
வாசமாம்தெந்திசைக்கதிபன் எமதர்மராசன் மறுமொழிமூவாமல்விதிபன்
சூரியகுலத்துவேந்தன் எமதர்மராசன் சொல்லுக்குகிதகுண பாத்திரன்
காரியர்கடனமாடவே எமதர்மராசன நாட்டகர்சகிதம்பாடவே நாடடினி
க்சிவுகள்தேடியே எமதர்மராசன் நாட்டைராகத்தையும்பாடியே

எமக்கட்டியன் கூறல்

மகுடமொமெகுடமுடியுடைய வேதளதளென்ன
வணிகணிகளபளபளென்னவே
மருதேசமன்னவாகள்வணங்கியடிபோற்றிட மயிடமிதனிலேறியே
வாகுடனவரவர்கள் வருகிறவேளையில பயமுடனெச்சரிக்கை
மதப்பட்டகுஞ்சிறம்போலவே தூதர்கள்வான்தண்டுசூலமோதி
மந்திரிகள்தந்தசபிறதானிகள் மனுநீதிமறவியெனவே
யெங்குமேகிங்கிலியர் யீட்டிகளேந்தியேயிறஞ்சியடித்தாடவே
யெவ்வுயர்க்கதிபதி தெந்திசைநமனுமே யிறதகெஜதுரகபதாதிகளுடனே
குறையொன்றுமில்லாமல் வமாவர்செயபாவகுலபாதகமனைத்தும்
கோஷ்டமிடதூதர்கள் யாக்கினைப்படிசெய்ய கொத்தவன்கொலுவினிற்க
சோலம.யவருகுளூர் கும்பிட்டுகைகட்டிகொள்ளுங்கள்யெச்சரிக்கைக

### எமன்போற்றி - கவி.

தர்மமேதர்மமிந்த தாரணிதழைக்கவேணும்
தர்மமும்மாரிபெய்த்து சதுர்காலமாகவேணும்
தர்மமேயெனதுசெங்கோல் தாழ்விலாதிருக்கவேணும்
தர்மமேபெருகவேணுஞ் சங்கருபோற்றிபோற்றி

### பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக எமதர்மராஜன் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து பூமியந்தரசொர்க்கமென்கிற இம்மூன்றுலோகத்திலுள்ளசிருஷ்டிதிதிசம்மாரம் இதுகளினுடைய கணக்குகளைபார்க்கும்போது யெந்தஜீவசெந்துகளும் தன்னுடைய ஆக்கினைக்கிவருந்தபடியினால் நரகம் பாழாயிருக்கிறபடியால் இது யென்னவாச்சரியம் யிதனாலே நம்முடைய அரசுசெங்கோல் யெனக்கிட்டுபோச்சுதென்று மனதில் வியாக்கூலப்பட்டுக்கொண்டு ஆரை விசாரிக்கலாமென்றுயோசனைபண்ணிக்கொண்டிருக்கும்போது நாரதபகவான் யெமதருமராசனிடத்துக்கு வருகிற விதங்காண்க.



நாரதர் வருகிற-தரு-மட்டியம்-இ-ம்-கலியாணி.

நாரதர்வந்தார் மகாமுனி நாரதர்வந்தார்

காரணக்கரியங் கண்டறியோக்கியர் (நாரத)
காத்தன்பதத்தைக் கருதிருசிலாக்கிய

பரந்தசடைகள்யிலங்க நீறு பத்திநெத்தியிற்றுலங்க
விரிந்தமார்பினில்காஷாயகந்தை விரித்துதரித்துவுரத்திற்பொருந்த
கமண்டலந்தன்னையெடுத்துவீணை கரந்தனிலேபிடித்து
தமதுளத்துளத்தினில்சச்சுதானந்தனை தியானித்துகீதம்விநோதத்துட
(ன்செய்யும் (நாரத)

மேதினிமாய்கையொழித்து நல்ல மெய்த்தவத்தினில்செழித்து
வேதனுலுமுழுதும்னுடி விண்டுமகிழ்கலியாணிருகம்பாடி (நார)

எமன்நாரதரைப் போற்றிகவி,

வேதனுயகனேபோற்றி விண்ணவர்க்கரசேபோற்றி
நாதனுயகனேபோற்றி நாரதமுனியேபோற்றி

நாரதர்வாழ்த்துகவி

இந்தமானகரில் யெல்லோரும்நீங்கள்
சந்தோஷமாக சதிருடன்வாழிவாழி

எமன்-விருத்தம்,

பாரினில்வாழ்வோரிட்ட பயிரொலாஞ்செழித்துப்பின்பு
சூரியன்கானிற்பட்டு சுருண்டதுவாடும்போது
மாரிவந்ததுபோல்வந்த மாதவமுனியேதானும்
கோரியபடியேநீருங் கூடவந்ததுவேபோதும்

வசனம்,

சாணம்சரணம் நாரதபகவானே வுலகினில்வாழ்வோரிட்ட பயிரொ லாஞ்செழுமையாய்வந்தபுன்பு சூரியன்கானிற்பட்டு வாடியிருக்கும் போது மாரிவந்தாப்போல்வந்த மகானுபாவரே யென்னுடைய வெ ண்ணம்போல்வந்தீரே அதுவேபோதும் யென்னுடையக்ஷேமத்தை என்னென்றுசொல்வேன் நாரதபகவானே,

நாரதர்-விருத்தம்,

யெழில்பெருமந்திரிமாரே டென்னேடுங்கோலுவில்நின்று
அழகதாயசருக்கு மந்தநாயென்னைநீரும்
வழிதனைப்பார்த்திருக்க வந்தகாரணமுமேது
கழருவீரெந்தனேடே காரியமாகத்தானே,

வசனம்.

கேளும் எமதர்மராசனே யென்னை வழிபார்த்துக்கொண்டிருக் கும்படியாய் வந்தகாரணமென்ன சொல்லும் எமா.

எமன்-தரு-அடதாளம்-இ-ம்-புன்னுகவராளி,

மண்புவியினைசவிட்டு மாதவம்புரியும்முனிநாதரே தபோதரேயிந்த மானிலத்திலுள்ளபேர்கள்மரவியிடஞ்சேர்வோமென்றதில்லையேபயம் மதகரியபையமிடவந்துகாட்சிதந்தருளும் வாசனே அதிகேசனே.

மானிடர்முதலாயினனமற்றுமுள்ளஜீவுமனவரதமும்அனவரதமும்
பவ்மொழிந்துவகாதசிபலன்பெறலாமென்றெண்ணியே பரிவுடன்நல்
லஅறிவும். பாரணிவுபவாசமும்பஜனையும்செய்யுமளவும்பசித்துமேபி
ன்பு பொசித்துமே, இவ்விதவிரதத்தாலே யெவ்வயாரிபதத்தில்சோ
வேகளிகூரவே, யேவினதூதர்களாலேயெவ்வுபாசகப்படாமல் யிறை
யவேமனமுரியவே,யெமப்புரியின்னுய்நரிகள்யென்குமுலாவியேயிரை
யுமேதஓடித்திரியுதே, யெக்கையும்வேலையில்லாமல் இங்கியர்தூதர்
களும் யேங்குறார்குந்தினூங்குறார், பாவிகளனேகம்பேர்கள் பாதவி
க்கும்நரகமும்பாழாச்சுதேவிணுச்சதே. பாம்புசெய்யான்தேன்கொ
ளவிப்பதைக்கபாவிகளைத்தின் றிளப்பாறுமேயிளப்பாறுமே, என்று
ருமரிதனைனூடிப்புன்னுகவாளிபாடி யேகுறார் சுபமாகுறார்.

எமன்-விருத்தம்.

விபரீதமாய்ச்செனங்கள் விண்டுவைதனைத்துதித்து
சுபமாகவாழ்ந்தெல்லோரும் தெந்திசைக்கேகாத்தாலே
அபலமாயிருக்குதிப்போ யான்செய்யமரசுக்கிப்போ
வுபமொன்றுசொல்வீரையா வுயர்தவமுனிவல்லோரே.

வசனம்.

சரணம்சரணம் நாரதப்கவானே ருக்மாங்கதர்செய் விரதத்தாலே
பூலோகத்திலுள்ள ஆயுளெல்லாம் எமலோகம்வருதபடிக்கிராகம்பர
ழாய் நான்செய்யும்அரசு அபலமாயிருக்குது யிதற்கு ஒருவுபாயஞ்
சொல்லுஞ்சுவாமி,

நாரதர்-தரு-இ-ம்-சங்கராபரணம்.

ஓம்நமோநாராயணவென்று நாள்தோறும் நமனே — தினம்
ஓதுவர்க்குலகினில் ஒருதாழ்வுமுண்டோசொல் நமனே

ஆமென்றகாரியம் அரியேநினைந்துசெய்தால் நமனே — அது
ஆகாமல்போகுமோ அவனியில்யாருக்கும் நமனே

அரிஅரியென்றவர் அடிதொழுதார்க்குமே நமனே — ஒரு
ஆபத்தைவந்தவரவ்வதுமுண்டோசொல் நமனே

தாமோதரனென்று தானைத்துதிப்போர்க்கு நமனே — ஒரு
தாழ்வுகள்வருவது தரணியிலுண்டோசொல் நமனே

சங்கையில்லாமல்யேகாதசிவிரதத்தை நமனே — யாரும்
தப்பாதேசங்கரா பரணத்தில்சொல்லினேன் நமனே

நாரதர்-எமனுக்குச்சொல்-திபிதை.

தெந்திசையாநேந்திரனேகேளாய் வுந்தனுலாவதுஒன்றுமேயில்லை
தாரணிதன்னைத்தாளினுலளந்த நாரணன்தன்னைநம்பினபேர்க்கு

குனைபொன் றமுண்டோருவலயந்தன்னில் மறலியென்கிற பயபடனிரு
ருக்கேது, ஆகையால்நீயும்அதிசீக்கிரமாக வேகமாயோடிவிண்டுவுமீ
ன்ற, இவ்விடிகர்த்தாவானதிசைமுகனடியை யிஷ்டமாய்போற்றியெழு
ந்துகைகட்டி. யெமப்புரியிருக்கின்றயிருப்பையுஞ்சொல்லிஎமக்கென
னதொழிலுமிருக்குதுயென்று, சொல்லியேஅவருடன் இலவுமேபெ
ற்று நல்லதினத்துடன்நகர்க்குமேவருவாய்.

வசனம்

கேளும் எமதர்மராசனே அரிபத்திஐயத்தடுக்கஆருலேயாகும்அது
சரியல்ல நீர்பிர்மாவிடத்துக்குப்போய் எமபுரியிருக்கின்ற யிருப்பை
யுஞ்சொல்லி என்னுடைய அரசயிப்படியிருக்குதென்று சொலலிவாரு
ரும் யெமதர்மராசனே.

எமன்-விருத்தம்.

அருந்தவந்தனிலுயர்ந்த அருமறைப்பொருளேபோற்றி
திருகொன்றுஞ்சொல்வதில்லை செப்பியபடிக்கொனும்
ஒருவனுப்போனத்தாலே ஒன்றுமேதோணுதிப்போ
யிருவரும்போவோம்வாரீர் யெழில்திசைமுகன்சபைக்கி

வசனம்,

கேளும் நாரதபகவானே அந்தபிர்மாவுக்கு அடியேன்ஒருவனுப்
போய்சொன்னத்தினலே பயனில்லேஆகையால் தேவரீர் யென்னுட
ன்கூடத்தானேவாருங்கள் நாமிருவரும்போய்எமபுரியிருக்கும் க்ஷே
மத்தை சொல்லிவாரும் சுவாமி,

நாரதர்-விருத்தம்.

நல்லதுசொன்னுயெமா நானுமப்படிநினைத்தேன்
வல்லமாயனைத்துதித்து மாணமொன்றில்லாதாலே
சல்லாபமாகநாமும் சதுர்முகனிடத்திற்சென்று
சொல்லியேவருவோம்நீருஞ் சுருக்கினில்வருகுவீரே.

வசனம்

கேளும் யெமதர்மாசனே வுன்மனதின்படியே நாமிருவரும் அந்
தபிர்மாவிடத்துக்குப் போய் யெமபுரி சேதி சொல்லிவருவோம் வா
ரும் யெமா.

நாரதர்-தரு-திரிபுடைதாளம்-இ-ம்-அசாவேரி,

போய்வருவோம் நமனே சேதிசொல்லி
போற்றிடுவம் பூமனே

போயரசுதனில் பூமனுமிருக்க
புகழ்ந்துயெமப்புரி புதுமைகளுரைக்க (போய்)

திருணமாகவிருக்கின்றது நல்ல
யிரணியகறுப்பனே டிதுவெல்லாஞ்சொல்ல (போய்)

வுந்திபூத்தோனே வுகழ்ந்திருவருமே
வந்தனஞ்செய்து ஞம்வருவமே (போய்)

புலவர்களிட வுளமகிழ்ந்திடும்
கலைமகளிட கணவனுரிடப் (போய்)

திசைமுகனிருப்பிடமும் தேடியே
யிசையஅசாவேரி ருகம்பாடியே (போய்)

கட்டியக்காரன்-விருத்தம்.

நாரதர்யேமருஜ நான்முகனிடத்திற்சென்று
சீரணியெமப்புரிபாழ் சேதியைச்சொல்வோமென்று
நேராதாய்வருகும்போது நிலம்படைத்தோனுமங்கே
காரணமேதேசவென்று கஞ்சனும்வருகின்றனே.

பொது-வசனம்.

ஆகோதெப்படியென்றால் நாரதர் எமதர்மராஜனிவர்க ளிரண்டு பேரும் பிர்மலோகத்துக்குப்போய் பிர்மாவிடத்தில் யெமப்புரி சேதி சொல்லிவருவோமென்று வருகும்போது பிர்மா யிதையறிந்து கொலுவுக்கு வருகிற விதங்காண்க.



பிர்மதேவன்வருகிற-தரு-மட்டியம்-இ-ம்-தன்னுசி

பல்லவி,

சதுர்முகப்பிர்மாவந்தாரிதோ அன்னத்திலேரி

அநுபல்லவி,

மதுரசமெனமொழியாள்வெண்டாமரையாளுடனெழுந்து [ழ்ந்திடும்
மண்டரண்டர்கண்டமுழுமண்டிடும் விண்டுவினடியைகொண்டுமகிழ்

சரணங்கள்,

சென்னியில்மகுடந்துலங்கவே காதிலணிந்த சிறந்தகுண்டலங்களில
ங்கவே-மார்பிலணிந்த, மின்னியமுன்னூலும் விளங்கும் பணிகளும்
மேவியமார்பினிலாசமுந்துன்னவே, தன்னிகருக்கிணையொருவரில்லை
யென்று தக்கிடகிடதகததிங்கணத்தோமென (சதுர்),

தேவர்முனிவர்கள்கூடவேசித்தர்கள்தொழ தெரிவை ரம்பையர்கள்
பாடவேமிகமகிழ்ந்து,பாவலர்கூடக்கொண்டாடிமகிழ்ந்துளம்பத்திய
தாகவேயெத்திசையோர்களுந், தாவிவருவதில்கண்டுமேபார்த்திடத
க்கிடகிடதகததிங்கிணதோமென (சதுர்)

விதியெவ்வுயிர்கட்குவிதிப்போனந்தமுடனே விளங்கவேயாவையு
ம்விதிப்போனநுதினமும்கதியென்றமே பருக்கருளருள்மூலக்காரண
னென்றவர்கண்டுமகிழ்ந்திட ததியிற்கலியாணிருகம்புகழ்ந்திட தக்கி
டகிடதகததிங்கிணதோமென (சதுர்),

எமன்-விருத்தம்.

எண்டிசைபடைத்தாய்போற்றி யெங்கினுநிறைந்தாய்போற்றி
கண்டனைபுரிவாய்போற்றி கஞ்சனைப்போற்றிபோற்றி
வுண்டியிலுதித்தாய்ப்போற்றி ஒளிமலர்பிசையாபோற்றி
பண்டிதர்நாவில்வாழும் பாரதிகேள்வாபோற்றி

வசனம்.

சரணம் சரணமையாசுவாமிவேதநாதனே அஷ்டதிக்கையும் அண்டபிண்டாதி சர்வமும்படைத்தவரேபோற்றி யெங்கினுநிறைந்து சகலபுண்ணிய பாவங்களையும் நிர்ணயிக்கப்பட்ட கடவுளே போற்றி ஸ்ரீஅரியின்வுந்தி தாமரையிலுதித்தவரேபோற்றி வித்தியாதனர்கலாபண்டிதர் நாவில்வாழ்கின்ற சரஸ்வதி மணவாளனே போற்றி,

பிர்மா-விருத்தம்.

யாகத்தனஞ்செய்யவந்த மாபெலமன்னரோடுந்
தெந்திசைக்கதிபனுகி திங்கொன்றுமில்லாமற்றுன்
அந்தமாபாசளிக்கு மலவலைவிட்டுயிங்கே
வந்தகாரியமுமேது வழுத்துவீரெந்தனோடே,

எமன்-விருத்தம்,

உந்தியிலுதித்தாய்ப்போற்றி வுயர்திசைமுகனேபோற்றி
அந்தமாயுலகுதன்னி லனைத்தையும்படைத்தாய்போற்றி
சுந்தரவதனுள்வாணி துணைவனேயெந்தனுக்கு
வந்தனுலாசசெய்ய வுபாயமொன்றுரைசெய்வீரே

பிர்மா-விருத்தம்,

எதுதான்சொல்வீர்நீங்க ளிருவருந்திரேகம்வேர்க்க
வாதையும்பட்டுநீங்கள் வந்தகாரணமுமேது
பூதலந்தனிலேதாகில் பொல்லாங்குவிளைந்ததுண்டோ
சேதியுமிதுதானென்று தெரிந்திடவுரைசெய்வீரோ,

வசனம்

கேளுங்கள்நாரதபகவானே யெமதர்மருஜனே நீங்களிருவரும் என்னிடத்திற்குவந்த காரணத்தைதெரியச்சொல்லுங்கள் நாரதரே

எமன்-விருத்தம்.

அண்டமும்புவனமாழி அனைத்தையுமொன்றாய்சேர்த்து
வுண்டவருந்திதன்னி லுதித்தனன்முகனேபோற்றி
யெண்டிசைதனிலுள்ளோர்கள் யாவரும்யெமபுரிக்கி
அண்டிவந்திடுவதில்லை ஆதலாலறையவந்தோம்

பிர்மா-விருத்தம்.

அறையவேவந்தோமென்ற அனைத்துயர்க்கதிபனனை
மறலியேசொல்லக்கேளாய் மானிடர்பாவஞ்செய்தால்
நரகமேவாறுதானல் நானிலந்தன்னிலேதான்
அரசுமேசெய்துவேறோர் அந்தகனிருக்கின்றானே.

வசனம்.

கேளும் யெமதர்மராசனே ஜம்புசீவமுதலான வுலகத்தில் புண்ணியபாவஞ்செய்த ஜீவாத்துமாக்கள் வுன்னுக்கினைக்குள் ளகப்படாமல் வேறோர் நமனிருந்து யிந்தவுலகத்தில் அரசு செய்துக்கொண்டிருக்கிறான.அந்த யெமனிடத்துக்கு போகுமாறு சொல்லு எமா.

எமன்திபிதை-இ-ம்-முகாரி.

அய்யனேகேளுமதிசயமொன்று வையகமதனில்மனுநீதியுடனே
இரிஜைமாநகராஜங்கீர்த்திருக்மாங்கதன்அரிபக்திநேசன்ஆசாரபுருசன்
ஏகாதசிவிரதம்யாவருமன்பாய் வாகாகசெய்துமேவாருங்களென்று
தேசமெங்கினுமேஜெயபேரிபறையநேசமாய்நேமநிஷ்டைகளுடனே
அரிவிரதமொன்றுஅதிபக்தியாக நெரியுடன்செய்யநிலத்திலெல்லோ

ளும்,பயமொன்றுமில்லாமல்பரமபதத்தில்செயமதையடைந்துசுவர்க்
கலோகத்தில், சகலசவுக்யமாய்சாயுச்சியமென்னும் மோட்சத்திலே
கழுகுந்தனூரவர்க்கு, காட்சியுந்தந்திடக்கருடவாகனரும்அமைந்திட
யெவர்க்கும்அம்புவிதனிலே யெமபுரியிருக்குதென் றெண்ணமேயில்
லெபாசகுலமுங்கந்திபாற்குகளெல்லாம், தூசகளைடந்து துலக்கமில்
லாமல் இருப்பதுபிடித்துதொடுத்திடும்வுறையில்யிருப்பதுமல்லாமல்
யிந்ததூதர்களும் தூங்குறூர்சோம்பலாய்த்தொழிலொன்றுமில்லை யே
ங்குறூர்கிங்கிலியர்யிருந்திடந்தனிலே சித்திரபுத்திரன் நிரித்தியென்
றனும் யெத்திசைகணக்குகள்யெழுதினதெல்லாம் சிரிச்செல்லரிச்
சியேசில்லிகளாச்சி, நரகம்பாழாச்சிநகைத்திடலாச்சி யினியென்னை
மப்புரியினியென்ன அரசு, யினியென்னசெங்கோல்யினியென்ன தண்
டனையினியென்னகண்டன், யினியென்னஆயுதம் யிந்தாஅங்காலபாச
மூன்றுகூலம்,வந்தனிடத்திலொப்பித்தேனெல்லாம் எந்தனுக்கினிமேல
எமப்புரிவேண்டேன், சிஷ்டிக்கும்பிர்மதேவரோவுமக்கு யிஷ்டமாய
யாருக்காகிலுமீந்திடும், வந்தனமடியேனவலவுக்கேகிடுவேன் யெந்த
னக்கோர்புத்தியம்பிடுமையா.

பிர்மா-திபிலத,

மாலியேயென்னிடவார்த்தையைக்கேளாய் அரிபூசைதவிர்த்திட ஆரு
லையாரும், ருமாவென்றெருதிறங்கொனினால்பலதினம்பூமியிலென்று
னும்போற்றினேர்க்கெல்லாம், தீமைசெய்வினைகளும் தீவினைப்பழிக
ளும் யேமவாதைகளும்பெவ்வகைப்பிணிகளும், பிறவியில்விகளும்பி
ல்லிசூன்னியங்களும்கர்மதீவினைகளும்கெங்குன்மரோக்களும் அல்ல
லேர்து அனுஷ்டமில்லாமல் கல்லவில்லாமல்சுடங்கெளெல்லாம் முகு
ந்தனாருனால்முபர்ச்சியதாக சகலமுந்தீர்ந்துசந்தோஷமீந்து. நரக
மொழிந்துகற்கதியடைந்து யிருப்பார்களுமாவென் றெண்ணுங்க
ளென்று,தேவதங்களிலும்விளக்கவுமிலையோ காதினில்நீயதைகேட்ட
துமிலையோ, வீணப்பவீணப்பவிருதமாழிப்பசா தோனுது யெனக்
கொன் அருட்சமூஞ்சொலவேன், நேமநிஷ்டைகள்பூசை நித்யனுஷ்
டானம்பூமியிலசெபதபபுனிதருக்கெல்லாம் அழகானஸ்ரீகளாலமூர்த்தி
டவேண்டும் வழியிதுவல்லாமல்கேவிஸ்ரீறன்றில்லை ஆகையால்காலுயதி
சீக்கிரமாக மோகினிபெண்ணும்மேதினிதனிலே சிருஷ்டித்ததுப்பி
ரேபசிங்காசமாக யிஷ்டமாய்விளையாடியிருந்திடுயென்று அனிப்பியே
விரதத்தையழித்திடச்செய்வேன் யினிமேலுமுன்னிடயெமப்புரிக்கே
கி, செங்கோல்செலுத்தியே தியககமில்லாமல் சிங்காரமாகநீ திருக்
கொலுவிருப்பாய்,

எமன்-விருத்தம்,

போய்வாருமென்றுயென்னை புகழ்ந்துசெய்தேவாபோற்றி
தய்விலாதுமக்குவேலை யுகழ்ந்துமெயிருக்குமையா
காயெனும்சொன்னவார்த்தை நயந்துநின்மனதில்வைத்து
நேயமாய்செய்விரையா நின்னடிபோற்றியோற்றி

வசனம்,

சரணம்சரணமையா நான்முகதேவனே தேவரீருக்குதய்வில்லாமல் அனேகஅலுவல்யிருக்கும் அடியேன்பேரில்கிருபைவைத்து அரசுசெய்யும்படியாய் தயவுவையும் சுவாமி.

பொதுவிருத்தம்,

மாவியும்போனபின்பு வளர்நகரழிவதாக
காடிசென்றுய்கள்மாறும் காட்டானைபன்றிசிங்கம்
சிறுபுலியாளிவேங்கை துஷ்டமிருகங்களெல்லாம்
சிருஷ்டித்தான்பிர்மதேவன் க்ஷணத்தினில்சிருஷ்டித்தானே.

வசனம்,

அந்த சமயத்தில் நான்முகப் பிர்மாவாகப்பட்டவர் கிரிஜாபுரியாளப்பட்ட உருக்குமாங்கத மகாராஜன் அன்பத்தாறு தேசத்திலிருக்கப்பட்ட குடிகள் செய்யப்பட்ட பயிர் மரங்கள் கனிவர்க்கங்கள் பூஞ்செடிகள் இன்னும் பலபல விருட்சங்களைப்பிடுங்கி பதம்பண்ணி யழிப்பதற்கு காடி சென்றுய் காட்டானை பன்றி சிறுபுலி இன்னம் அனேக துஷ்டமிருகங்களையெல்லாம் சிருஷ்டித்தார்,

பிர்மா-திபிதை.

சிருஷ்டனெந்தன் சிருஷ்டியில்வந்த
மிருகங்களேநீர் மேருவைச்சேர்ந்து
உருக்குமாங்கதனுடைய இராச்சியமெல்லாம்
மிருகவேடயர்மேய்ந்து விளைச்சல்களெல்லாம்,

அதமாக்கிஅருந்த அரிகளையெல்லாம்
சக்கிரியேசீக்கிரமாய் ஊர்தனுக்கேகி
பிளைமுக்கடைமுருங்கை பிலாச்செடி மஞ்சள்
பழக்கனிகாய்களை பரித்துவேரோடே.

பிடுங்கியேபூஞ்செடி புஷ்பங்களெல்லாம்
மல்லிகைமல்லிசெண்பகம் கோங்குமந்தாரையும்
பரித்துயேபாழாக்கி பலசேதமாக்கி
திருஷ்டனுடன்வருகுவீர் சிக்கிரமதாக.

மிருகங்கள்-பரணி.

அப்படிதானே அருளியபடியே
இப்பவேயோடி யெழில்பெரும்பயிரை
துப்பாமேய்ந்து தொழிசசிகாலாலே
கொப்பெனவருவம் கொலுவினில்தானே.

மிருகங்கள்வருகிற-தரு-மட்டியம்-இ-ம்-சங்கராபரணம்.

மிருகக்கூட்டம்வருகைப்பாரராய் மேன்மையாகவே
காடியானைக்காண்டாமிருகம் கெளித்தியானையும்

இருத்ணதசென்னுயாளிசிங்கம் கோணன்கூடவே
பெருத்தவேங்கைபன்றி மான்கள்பிரபல்மாகவே

இரிணைமுழுதும்விளைத்தவிளைச்சல் கீழ்மேலாகவே
வரிசையாகவாழமாத்தை மடக்கிதள்ளியே

அருக்தஅரியேயெடுத்தெரிஞ்சி அகமதாகவே
வருத்தப்பட்டுசம்சாரிகள் வந்துசொல்லவே

அரசனோடேசொல்வோமென்று ஆண்மையாகவே
பொர்சலிட்டுகூட்டமாக யெதிரில்வந்தாரே

பொது-விருத்தம்.

இரச்சிநீர்பாடுபட்டு விட்டதோர்பயிரையெல்லாம்
மெரிச்சிமேய்ந்திட்டுமான்கள் மிருபலமிருகமெல்லாம்
முரிச்சியேவிளைவையெல்லாம் முழுதிலுமழிக்குதென்று
அரசனேடுறைப்போமென்று அனைவரும்புறப்பட்டாரே.

வசனம்-அதோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரமாக பிர்மதேவன்விடுத்த மிருகங்களெல்லாம் உருக்குமாங்கதமகாராசன் தேசமெல்லாம் பயிர்பச்சை பூஞ்செடி புஷ்பங்களெல்லாம் நாசஞ் செய்கிறபோது அத்தேசத்திலிருக்கப்பட்ட குடித்தனக்காரர் அரசனோடே சொல்ல வருகிற விதங்காண்க,

குடிகள்வருகிற-தரு-மட்டியம்-இ-ம்-பூபாளம்,

பல்லவி.

குடிகள்வந்தாரே பயிரிடுங் குடிகள்வந்தாரே

அநுபல்லவி.

குடிகள்வந்தாரே அடவடனகவே திடமுடன்ராஜன் முன்
சேதிகள்சொல்லவே (குடிகள்)

காருங்கலப்பைபயெடுத்துக்கொண்டு கையில்
கோலுங்குடிவைபிடித்துக்கொண்டு

வாரங்குடுக்கமாட்டோமென்று விளைந்த
விளைச்சல்போச்சுதென்று (குடிகள்)

பரவைகள்மிகசெழித்துதென்று
பயிர்களெல்லாம் அழிச்சுதென்று
முறையாயிகவுமிடுவோமென்று முழுதும்
மூழ்கிப்போச்சுதென்று (குடிகள்)

மாதுளம்மாங்கனி வாழைப்பிலாமரம்
மஞ்சள்செடிமுதல் இஞ்சிதயில்லாமல்
சேதமாகிப்போச்சுதென்று சொல்லிட்டோமடியே
கல்வியாணிபாடியே (குடிகள்)

குடிகள்-விருத்தம்.

அரசருக்கரசேபோற்றி அவனியாள்மன்னுபோற்றி
விரைமலர்மார்பாபோற்றி விரவிக்ரமனேபோற்றி
பரிவுடனெங்களுக்கும் பாதுகாத்தவனேபோற்றி
கிரிதனையாதகரையாளும் கீர்த்திசம்பன்னுபோற்றி.

இராஜன்-விருத்தம்.

போற்றிடுங்குடிகளேகேள் புவிதனில்புகழ்ரியாக
பேத்தியபயிர்களெல்லாம் வெள்ளமாயிருக்குதப்பா
யேத்தமுமிறப்புமுண்டோ யேரிபாச்சலுமுமேமா
பூர்த்தியாய்பாயுதாசீர் புகலுவீரெங்களுக்கே,

வசனம்-வாருங்களப்பா குடித்தனக்காரர்களே நீங்கள் வத்திய பயிர் விளைமாயிருக்குது ஏரிப்பாய்ச்சல் ஏற்பாயுதா ஏப்பு யேதா கிலுமுண்டோ சொல்லும் அப்பா,

குடிகள்-விருத்தம்.

உங்களாதரவால்நாங்கள் ஓங்கிசெய்பயிர்களெல்லாம்
பங்கமாய்யிருந்ததாலே பலசேதமாகுதையா
சங்கடமதுவேயன்றி தாழ்வதெங்களுக்கும்
எங்களுக்கில்லையப்பா யிறைவனேபோற்றிபோற்றி.

வசனம்-கேளும் ராஜபரமேஸ்வரா உங்களுடைய ஆதரவுனாலே எங்களுக்கு ஒரு தாழ்வுமில்லை நாங்கள்செய்த பயிர்களெல்லாம் பி ரளங்களாலே நாசமாய் நஷ்டப்பட்டு ஆகிலொருகடமை தங்களுக் குவாரங்குடுக்கிறதும் தவிர அடங்கலும் குடுத்தபோதிலும் தங்கள் வாரத்துக்கு சரிப்படாது இராஜனே,

இராஜன்-விருத்தம்.

சேதமாய்போச்சுதென்று செப்பியகுடிகளேயிப்
போதெனுள்வனத்தில்சென்று பொல்லாதயிருகத்தன் ...

தீதாவேட்டையாடி சேதமேசெய்துவாரேன்
மாதவனருளைசெய்வார் மனைக்குமேயேகுவீரே.

வ-ம்-வாருங்களப்பா குடித்தனக்காரர்களே நீங்களிடப்பட்ட பயிர்களெல்லாம் மிருகங்களாலே சேதமாய்ப்போகுதென்று என்னுடன் நீங்கள் சொன்னபோதே நான் மனம்பொருந்தியிருப்பது இந்தட்சணம் மிருகங்கள்பேரில் வேட்டையாடிமிருகங்களைஜெயித்துசம்பாசஞ் செய்துவருகிறேன் நீங்கள் சுகமாய் போய்வாருங்கள்குடிகளே.

இராஜன்-விருத்தம்.

மதியினிலுயர்ந்தமந்திரி மார்களேசொல்லக்கேளீர்
பதிதனக்கேகிபத்தினி பாவையாளுடனேசொல்லும்
அதிபதிராஜனும்மை அழைத்திடச்சொன்னானென்று
சதிருடன்தாதியோடே தான்வரச்சொல்லுவாயே,

வ-ம்-வாருமப்பா மந்திரிமார்களே எனது பத்தினியாகிய சந்தியாவொளியை நான் அழைத்துவரச் சொன்னேனென்று சொல்லி அழைத்துவாருங்களப்பா.

மந்திரி-பாணி.

கட்டியகாரா கடுகனவோடி
அட்டியில்லாமல் அரண்மனைச்செல்லு
சட்டமாசந்தியா வொளியெனுந்தாயே
பொட்டெனயழைத்து புறப்படுவாரீர்

கட்டியன்-பாணி,

அந்தமதாக ஆசிர்மந்தன்னில்
சுந்தரமாக துலங்கிடுகின்ற
சந்தியாவொளியெனும் தையலேராஜன்
வந்திடச்சொன்னார் வாருமம்மணியே.

சந்தியா வொளி-பாணி,

அரசனும்மழைக்க அட்டிசெய்வேனோ
பிரப்பிடுமப்பா போய்வருவோமே.

சந்தியாவொளி-பாணி.

ஏதுகாரியத்தா லெம்மையழைத்திர்
ஓதுவீரெனக்கு வுகந்துநடப்பேன்

வ-ம்-சரணம் சரணம் என் பிராணவல்லபா அடியாளை அழைத்ததென்ன தெரியச்சொல்லும் அந்தப்படி நடக்கிறேன் சுவாமி.

இராஜன்-விருத்தம்

அன்னமேநீகளாயுன்னை அழைத்ததன்றுசேதிசொல்வேன்
மன்னியநமதுநாட்டில் மதித்தநேர்மிருகத்தாலே

பன்னியபயிர்களெல்லாம் பாழாகிபோகுதென்று
சொன்னதால்வேட்டையாட சுருக்கில்போய்வாரேன்பெண்ணே,

வ-ம்-கேளும் பெண்ணே சந்தியாவொளி நமது நாட்டில் பயிர் செய்யுங் குடித்தனக்காரரெல்லாம் காட்டுமிருகங்களாலே அவாளிடப்பட்ட பயிர்களெல்லாம் பல சேதமாகுதென்று சொல்லுகிற படியால் நான் காட்டுக்குப்போய் வேட்டையாடி மிருகங்களைசெயித்து வருகிறேன் பெண்ணே,

இராஜன்-விருத்தம்,

மேதினில்வாழ்வோரிட்ட விளைவெலாம்மிருகத்தாலே
சேதமாய்போகுதென்று தியங்குரார்குடிகளானோர்
ஆதலால்மிருகவேட்டை யாடினான்வருகவேனும்
சீதள்வதனினாளே நீசிலவுதந்தனுப்புவாயே,

வ-ம்-கேளும் பெண்ணே சந்தியாவொளி லோகத்திலே குடித்தனக்கார் மிருகங்களினாலே பயிர் சேதமாய் போகுதென்று அசவுக்கியமடையுரோமென்று சொல்கிறபடியால் அதை நாம்கேட்டு சும்மாயிருப்பது சரியல்ல ஆதலால் வேட்டையாடி மிருகங்களை செயித்து சம்மாரஞ்செய்து வருகிறேன் பெண்ணே சிலவுதாரும்,

சந்தியாவொளி-விருத்தம்,

செலவுதருகச்சொன்ன செங்கதிர்மன்னாபோற்றி
வுலகினில்விஷ்ணுபத்தர் வுயிர்வதைசெய்யுவாரோ
வலுமையுமிருக்குநீபோய் வனத்தினில்வேட்டையாட
நலமிலாவென்றுவேதநான்கிலுமுரைக்குதையா,

வ-ம்-கேளும் என்பிராணநாயகா லோகத்திலே விஷ்ணுபக்தர்களாயிருக்கப்பட்டவர்கள் ஜீவவதை செய்வது தகாதென்று நாலு வேதத்திலும் சொல்லுமே என்பிராணநாயகா,

இராஜன்-விருத்தம்,

நலமிலாவென்றுசொன்னாய் நாள்தோறுங்குடிகள்செய்யும்
உலகினில்பயிர்சேதம்செய் கோடியமிருகந்தன்னை
கொல்லையுமேலத்தியேனான் சங்கரிக்காமல்போனால்
தலமையாயுலகையாளும் தார்வேந்தனென்றெண்ணுவாரோ,

வ-ம்-கேளும் பெண்ணே சந்தியாவொளி உலகத்திலே அரசாக்ஷிசெய்யப்பட்டவர் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்யாவிட்டால் நம்மை தலைமையாய் அரசாக்ஷிசெய்யப்பட்ட அரசனென்று சொல்லுவார்களா சொல்லும்பெண்ணே,

பொது-வசனம்,

அகோ தெப்படியென்றால் இந்தப் பிரகாரமாக உருக்குமாங்கத மகாராசன் தன் தேவியாகிய சந்தியாவொளியிடத்தில் வேட்டைக்குப்போக சிலவு வாங்கிக்கொண்டு போகிற சமயத்தில் பிர்மலோகத்தில் பிர்மா வுருக்குமாங்கதன்செய்யும் ஏகாதசி விருதம் பங்கப்படுத்தப்படி ஒரு மோகினி பெண்வுருவு சிவந்ததளிர்போலே பாதங்களும் முத்துகள் புதைத்த பவளககணைகள்போலே விரல்களும் இலவங்கிளைப்போல முழங்கால்களும் இளவாழைகளைப்போல தொடைகளும் உடுக்கைப்போல யிடையும் நீர்சுழியைப்போல தொப்புளும் எரும்புத் தாரையைவிட்டார்போல ரோமரேகையும் பத்தரமாத்து தங்கத்தைப்போல கலசங்கள்போல் ஸ்தனங்களும் காந்தப்பூவைப்போல கைகளும் சங்கைப்போல கழுத்தும் செந்தாமரையிதழ்களைப்போல கண்களும் சிங்காணி வில்லுகளைப்போல புருவங்களும் வள்ளத்தண்டுகள்போல காதுகளும் மூன்றாம் பிறைபோல நெத்தியும் வண்டோடிபோல தலைமயிரும் குமிழம்பூவைப்போல நாசியும் கோவைப்பழம்போல அதரமும் நட்சத்திரங்கள்போல பற்களும் பூரண சந்திரனைப்போல் முகமும் நாறுமாத்து அபரஞ்சிப்போலமேனியும் உடையவள் சித்திரப்பதுமைபோல விளங்கப்பட்டவள் நடைகளிலே அன்னத்தைப்பழித்த நடையும் வார்த்தையாம் குயில்களையும் கிளிகளையும் நகைத்தவள் நகையிலே மின்னலை செயித்தவளாய் பிர்மதேவன் ஒரு மோகினியை சிருஷ்டித்து அம் மோகினிக்கு போதிக்கிற விதம் எப்படியென்றால்,

பிர்மா-மோகினிக்கு-சொல்-திவிதை,

மைபார்க்கு குழலிமாதுமோகினிகேள்
வையகமதினில் வளம்பெருங்கிரிராஜ
ஆளும்ருக்மாங்கன் அரிபக்திநிபுணன்
காளைபாமவனுங் கதிர்குலத்தரசன்
ஏகாதசிவிரதம் கழில்பெறச்செய்து
வாகாகபவனியில் வாழ்வதாலெவரும்
மரணமேயில்லாமல் மானிடரெல்லாம்
இருக்கிறதென்று சுமதுரைப்பதனால்
வானவர்புகழும் வடிவுள்ளமாதே
கானகமேனி கந்தபுஷ்பக்கள்
பரித்துமேனியொடி பாங்குடனிருப்பாய்
பெருத்தகதோருமே புலிசிங்கமபன்றி
காட்டினில்மிருகங்கள் கனத்திருப்பதினால்
வேட்டைக்கிராசன் விருடன்வருவான்
வந்தவனுன்னிடம் வ[illegible]பிரோக கண்டு
கந்தப்பன்கணையிலுள் கலைத்துமேயவனும்
விரதமேமெகாண்டு பிருமயலாகி
மருங்கிணைச்சொல்லிவான் வனிதையேனியம்
வுன்வசமாகிடவுரிதியதாக

மன்மதகிரிடியை வாகுடன்செய்து
இரவிலும்பகலிலும் எந்தவேளையிலும்
மருவியேயிருமென்று மன்னனுக்கு
சத்தியஞ்செய்துமே தழுவியணைந்தபின்
வுத்தமனவனும் வுரிதியாய்செய்யும்
விருதமழித்து மெல்லியேநீயும்
விரகுடன்வருவாய் மேன்மையதாக

மோகினி-பாணி, வரவெனச்சொன்ன வல்லசேபோற்றி
கிரிஜையாள்ராஜனை கைவசமாக்கி
மருவியணைந்து மன்னவனவன்செய்
விருதமழித்துமே விரகுடன்வருவேன்

வ-ம்-கேளும் என்னை சிருஷ்டித்தகர்த்தாவாகிய என்பிதாவை எப்படியாவது உருக்குமாங்கதன் விருதத்தையழித்துவருகிறேன்சுவாமி,

மோகினி வருகிற-சிசபத்தியம்,

திருமுகவபிரயவதிகுணமிலகிய சிலைநுதர்சிந்துரமெபாட்டுமிட்டு சுரிகுழல்சிக்காசிப்பிட்டுசீவியே சடையில்கேருச்சுடன் திகழ்வதாக குரிவேருசாமந்திகோங்குசெண்பகமல்லி கோதிமுடித்துமேபெருளிர்ச்சியாக, பரிமளஞ்சவ்வாதுபன்னீரணிந்துமே பட்டாடையரையில் விப்பளபளென்ன:

பெருமைசேர்மோகினி பெண்ணுமந்த
கிரிதனைதேடியே சீர்த்தியாக
கிரிஜைவாழரசனைகூடிமருவி
விருதமழித்திட வந்தன்வேசமாக



மோகினிவருகிற-தரு-ஆதி-இராகம்-சுத்தசாவேரி,

பல்லவி,

திங்களொளிவதனமுடையாள மோகினியும்வந்தா
ளன்னநடையாள

அநுபல்லவி

எங்கெங்கும்புகழ்திருக்குபாந்தலங்காரி
எழில்கண்டாசர்கண்டேங்குஞ்சிங்காரி — திங்க

சரணங்கள்,

கண்களிரண்டுஞ்சேர்க்கெண்டை கருங்
கடலைபழிக்குமிவள்கொண்டை

அண்டம்வாழமாரும் ஆச்சரியப்படவே
அருந்தவத்தோரிவளை அடுத்துபின்றுடரவே — திங்க

கிடத்துடன்வனத்தில்வாழ்மானே-நல்ல
சித்திப்பதிகமானதேனே

படம்போர்க்கண்ணுடியல்குல் பார்க்ககிடையாது
பவழக்காலிரண்டுளந்துடைவாழைபோர்க்காது — திங்க

மேருக்கொப்பாய்திரண்டகொங்கை-வுலகை
விலையிடும்மேசதிரசெங்கை

கூருமொழிக்குயிலோசையதுபோல
கொத்தவனைத்தேடிசுத்தசாவேரிபாடி — திங்க

பொது-விருத்தம்,

குத்துமாமுலையாள்வள்ளி கொடியெனுமிடையாள்கூர்வேல்
அத்திரவிழியாள்செய்ய வம்புயமுகத்தாள்திட்டுஞ்
சித்திரனுதலாள்கூந்தல் சிவியேசிக்கருத்த
முத்துபோல்மொழியாள்நல்ல மோகினிபெண்வந்தாளே.

இதுவும் மோகினி-வருகிற-தரு-ஆதி-இராகம்-பைரவி,

பல்லவி,

வந்தாள்மோகினிவேகமாக மன்னனைநாடி
மந்தரகிரிக்கிபோகதாகி

அநுபல்லவி,

சந்தனக்குழம்பு சவ்வாதுகதம்பம்பூசி
பந்துமுலையசையவிக்கைதயாய்கைவீசி — வந்தா

இடையில்தங்கவொட்டியாணமாட்டி பிருதெசவியில்
பிசையங்கர்க்குண்டலக்கள் [illegible]

திசைவெட்டும்விலைபெறும் செம்பொன்பணிகள் துன்ன
அசைவில்லாமார்பினில் ரத்னஆபரணங்கள்மின்ன — வந்தா

சித்திலமிட்டரத்னசுட்டி-திகதிகன்ன
நெத்தியில்மின்னிடவேகட்டி
சித்தஜன்கண்டிவளை தொடர்ந்துபின்னொருகவே
யெத்திசையோர்களும் சித்தமுருகவே — வந்தா

மோகினி-விருத்தம்.

மன்னன்ருக்மாங்கராசன் வனவேட்டைவருகும்போது
பன்னியபிர்மன்சொன்ன படிதிரவோரவேண்டி
மன்னியசிகரப்போன்ற மந்திரகிரியைநாடி
கன்னியாள்விருதமோங்க கடவுளைத்துதிக்கின்றாளே.

மோகினி-தரு-ஆதி-பல்லவி,

யெப்போவருவாரோ யென்தன்கலிதீர
யிப்பெரியகானகத்தில் யெழில்பெற்றராசனும் — யெ

அநுபல்லவி,

அஞ்சம்போவரிக்கிலேதுணை சமபாரியாபூங்கணை
பஞ்சபாணனெய்குமுன் பரந்தாமமன்னனிங்கை — யெப்

சரணங்கள்,

மாருதம்மனலாய்தாவ மாக்குயில்யெதிர்கூவ
தீருமோயிம்மோகதாபம் தெய்வசகாயமாக — யெப்
தந்தைசொன்னசொற்படியே தழுவியெனைக்கூடியே
விந்தையாய்ருக்மாங்கராசன் விரகங்கொண்டென்னைசேர — யெப்
கன்னல்மன்மதன்பாவி கணைகளெய்குமுன்தாவி
மன்னனுமென்தனைநாடி வருகுவாரோதேடி — யெப்
நாட்டைபாள்மகராசன் நானிலம்புகழ்போஜன்
காட்டினில்வேட்டையாடி களியாணிதாகப்பாடி — யெப்

மோகினி-தரு-மட்டியம்.

தெய்வலோகபிர்மதேவன் சொன்னவகாதசிவிருதமுமேயழிக்க
வையகம்வந்தேனேமாபாவிநானிந்த மானிலத்தோர்களெல்லைபழிக்க
நீதிநெறிவழுவாமலரசாண்டுநெஞ்சிலரிஸ்துதிசெய்பவரும்(மிட்டவரு
காதல்கொண்டென்தனைசேரொன்று சொல்வாரோகட்டிகொண்டுமுத்த
மன்றனும்வேந்தர்களின்மிடும்பத்திரிமார்களைநூறுபேரைக்கொண்டு
மணம்புரிந்தமன்னனும்யென்தன்மேல்மையலுங்கொள்வாரோநான்
(லைக்கண்டு

எண்டிசையோர்தொழும்பிரானவனுமேகாதசிவிருதமுமேயழிந்து
விண்டுவைதுதிக்கும்வேந்தனும் எந்தன்மேல்விரகங்கொள்வாரோ
(...

மோகினி-விருத்தம்,

மதுரசமொழியாயென்றன் மனக்குறிப்பறிந்துரைக்கும்
இதமெடுத்துரைக்கவல்ல வேந்திழையாளேகேளாய்
அதிபெருங்கிரிஜையாளும் துரைசிரோன்மணியுமென்னு
அதிபனைச்சேருவேனோ அரிவையேவுரைசெய்வாயே.

வ-ம் அடியேன் பிராணபக்ஷமா செளந்தரவல்லி அந்த கிரிஜை ம
ஹனை சேருவேனோ அவர் இந்த வனத்துக்கு எப்போ வருவாரோ
அவரை நினைத்தமாத்திரத்திலே காமம்பெரிகி மனமுருகுது யிதக
கென்னசெய்யலா மம்மா.

தோழி-விருத்தம்,

மன்னனுன்வடிவைக்கண்டு மகிழ்வாமோகினியேகேளாய்
கன்னிகையரசேநீதான் காமத்தால்மெலியலாமோ
துன்னிகரில்லாயேக சக்ராபதியுமைந்தா
மன்னவர்வேட்டையாட வருகுவார்பொருத்திடாயே.

வ-ம் கேளுமம்மா மோகினி வுங்கள் பிர்ம தேவன்சொன்ன கி
ரிஜையாளப்பட்ட ருக்மாங்கத மன்னன் வேட்டையாட வருகா மு
ஹூர்த்தம் அவரை நினைத்து விரகமானால் பார்த்தபேர்கள் பரியாசம் பண்
ணுவார்கள் அது மகா வெட்கம் உன்னிஷ்ட பிரகாரம் நடக்கு
சும்மா யிருமம்மா மோகினி.

மோகினி-விருத்தம்,

எப்படியம்மாதோழி எனக்கொருநல்லகாலம்
தப்பாமேவருமோதெய்வ சகாயமுமெனக்குண்டாமோ
பொர்ப்பெனகொங்கையாமென் பொங்கியநேசமெல்லாம
இப்புவிக்கொப்பித்தேனுன் யெப்படியிருப்பேனம்மா.

வ-ம் அம்மா தோழி எனக்கொரு நல்லகாலம் வருமா அந்த தெ
ய்வத்திற்கு என்பேரில் தயவு உண்டாகுமா என்பருவமெல்லாம் இப்
பூமியில் வீணாய்போகுதே நானென்னசெய்வேன் தோழி,

தோழி- விருத்தம்,

வையகமதனில்நீயும் மாதுமோகினியேகேளாய்
மையலுங்கொண்டுநீயும் மலையமாருதத்தினாலும்
தையலேவிரகமேறி தளர்ந்திடாதிருப்பாயம்மா
தெய்வமும்சகாயமாகும் சீக்கிரமாகத்தானே.

பொது-வசனம்,

அகோ தெப்படியென்றால் யிந்தப்பிரகாரமாக தோழியுடன் செ
ல்வி விரகதாபத்துடன் யிருக்கும்போது கிரிஜாபுரியாளப்பட்ட ருக்
மாங்கத மகாராஜன் வேட்டைக்குவருகிற விதங்காண்க,



இராஜன் வேட்டைக்குப்போகிற-விருத்தம்.

அடுத்துநம்மருகில்நிற்கும் அதியுக்திமந்திரிமாரே
படைத்தலைவர்களுடனானை பரிவாரஞ்சேனையோடு
நடத்தியேவனத்துக்கேகி நால்வகைஜீவன்மீதில்
திடத்துடன்வேட்டையாடி சீக்கிரமாய்வருகுவோமே.

வசனம்-வாருங்களப்பா மந்திரிமார்களே நாமெல்லோரும் ஆனைசேனை பரிவாரத்தோடு வனத்துக்கேகி மிருகவேட்டையாடி வருவோம் வாருங்களப்பா மந்திரிமார்களே.

மந்திரி-விருத்தம்.

சூரியன்மரபில்வந்த சுடர்முடிமன்னனேகேளாய்
வீரியசேனையோடு மேவியேகானகத்தில்
காரியமாகத்தானே காலாளர்சேனையோடு
பாரிவேட்டையாடப் புறப்படுஞ்சீக்கிரமாக.

வசனம் அப்படியே தங்களிஷ்டப்பிரகாரம் காட்டுக்குப்போய் வேட்டையாடி வருவோம் வாரும் ராஜனே.

இராஜன்-விருத்தம்.

மதிமந்திரிகேளாய்நாமும் வனத்தினில்வேட்டையாட
அதிதுரிதமதாய்நீயும் அம்புவில்வலையுங்கொண்டு
எதிரிடும்மிருகந்தன்னை எய்துமேவருவதற்கு
சதிருடன்வேடர்தன்னை க்ஷணத்தினிலழைத்துவாராய்

வ-ம் கா.துவோய மந்திரிமார்களே நாம் வேட்டையாட வேட்கி லியனை யழைப்பியுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி-பாணி, வாட்டமதாக வாழுங்காட்டியனே
காட்டினில்வேட்டைக் காவலுடை
கட்டியவலைகள் நிமிஷத்திற்கொண்டு
வேட்டைக்காரரே விருதழைப்பாய்,

கட்டியன்-பாணி,

அலைவேடுவரே சலிதியதாக
வலைகளைக்கொண்டு வாருங்களோடி.

வேட்டைக்காரர்-வருகிற-தரு-கல்யாணி-மட்டியம்,

காட்டில்வேட்டையாடக் கெட்டிவேட்டைக்காரர்வந்தார்
நாட்டியாககாட்டில் வேட்டையாடத்தொடர்ந்தார்

காட்டைவிளைத்துலுட்டையதந்தெய்கூட்டம்பன்றியேலூட்டிவிட்டவே
கூட்டமாகவலக்கைகொண்டு காட்டுமான்களைகப்படவே காட்டி.

வெள்கிகட்டுநாய்களுடன் விட்டோடவேகையில்
வில்லுமம் கேசர்த்தாபிடித்துவிட்டிக்கடவே

மெள்ளபதுங்கி பள்ளமிறக்குங்கள்ளப்புலிகள்துள்ளிசகலும்
சல்லென்றெறும்புமெவள்ளைநாயனைதமெள்ளவிட்டுகொள்ளையகவே

இருப்புவலைகள்கொண்டுமேலே பலமாவீசியே
மானையிலவிடுவதில்லையென்று விருதுபேசியே

பொருப்பின்மேலிருந்தொருமுசல் புதரினில்விழுந்தாலுங்கொன்று
நெரிப்பிலதனைபோட்டுபொசிக்கிகிழவிலிருந்துதின்போமென்று கா

வள்ளலென்னொருவர்தம்மை வந்துயடுத்தே-கலி
மன்னுகல்யாணிபதமாகத்தொடுத்தே-கொள்வி

சொன்னதைந்சொன்னலுங்கூ காமெவன்றேநமென்றும்
கள்ளர்போலேவிரிடும்பன்றியே கதருக்கியேதிரிஞ்சென்றுங்காட்டி.

வேட்டைக்காரர்-இராஜனைக்காணுதல்-விருத்தம்.

தரணிமன்னவர்கள்போற்றும் தகைபெருங்கதிர்குலத்தில்
அரியகின்மணிபோல்வந்த அரசருக்கரசனே மெய்மை
பெருமைசேர்சபையில்வீப்போ பிரியமாயழைத்ததென்ன
தெரியவேயுரைப்பீரையா திருவடிபோற்றிபோற்றி

வ-ம் கேளும் மகாராசனே நாங்கள் வேடுவர்கூட்டம் ஆயுத ஜெம்பத்துடன் வந்தோம் எங்களுக்கு விதித்த ஆக்கினை யென்ன தெரியச்சொல்லுஞ் சுவாமி.

இராஜன்-விருத்தம்.

வேடரோநாமெல்லோரும் வேடிக்கையாகத்தானே
காடுகள்தனிலேசென்று கரடிசிங்கத்தின்மேலே
நாடிநம்வேட்டையாடி யகந்தனும்வருகவேணும்
தேடியேவருவீரப்பா யொருமித்துக்கூடத்தானே.

வ-ம் வாருங்கள் வேட்டைக்காரர்களே வேடரேவில்வீரரே மந்திரிகளே தந்திரிகளே நாமெல்லோரும் வேடிக்கையாக மிருகவேட்டையாடவேணும் நீங்களெல்லோரும் யென்னுடன் கூடத்தானே வாருங்கள்.

இராஜன்-வேட்டையாடுகிற-தரு-திரிபுடை.

வனத்தில்வேட்டைநாமாடிவருகுவோம் வாருமந்திரிமார்களே
கனத்தபன்றியேயானையாவெய்தியே கடுகவருவோம்சூரரே (சே
சினத்தவேங்கைகளையெய்த்துனுமிகேத கானத்தில்வருகுவோமவீர
புனத்திலேலாவித்துக்கொண்டிருக்கும்புலிகளை யெழுப்பிச்சொல்லு
(வோம்சூரரே

எழுப்பிபுலிகளைசட்டியால்குத்தி யிறக்கச்செய்குவோம்சூர
கொழுத்தபன்றிகள்கூட்டமிட்டிடும் கொன்றுவரவேணும்சூரரே
முருக்கும்வலைக்குள்ளேமுசல்கூட்டங்களை முன்னேமடக்கியேசூரரே
குருக்கேவைத்திடும்அதில்விழாமலேநெரிக்கிவோட்டுங்கள்சூரரே

இராஜன்-விருத்தம்.

இந்தநல்வனத்திலுள்ள யெழில்பெறவேட்டையாடி
அந்தமாய்வருகும்போது அதிவேகமாகத்தானே
வந்திடும்மானின்பின்னே விடாமலேபின்தொடர்ந்து
யெந்தன்கையம்பாலத்தை யெய்துனுன்வருகுவேனே,

வ-ம் வாருங்களப்பா வேட்டைக்காரர்களே இந்தவனத்திலே வேட்டையாடி வருகும்போது நமக்கு முன்பாக ஓடிவருகிற மானினுடைய வேகத்தைப் பார்த்தீரா வாய்வேகமாய்வருகுது ஆகையாலெப்படியாவது ஒருகணையினாலே விழுத்தள்ளி வருகிறேன் என்னுடன் கூடத்தானே வாருங்களப்பா,

இராஜன்வேட்டை-தரு-ஆதி.

குதித்துமானிதோவனத்திலோடுதுபார் கணையாலதை
பதைத்தாவிழுந்திட விடுத்தெரியுறேன்பார்
வதைத்திடமானையும் வாருங்கள்சூரரே
ஒளித்திடுமிங்கையும்பாருங்கள்சூரரே (குதித்து

வலைதனைக்கொண்டுமே மாட்டெதிர்போட்டிடுங்கள்
ஓடவொட்டாமல் மடக்கியேமான்களை வலைதனுக்கோட்டிடுங்கள்
எலைத்துமேமானிதோயேங்கியேவாடுது
யெனைத்தகைதண்டு யெதிரிலேவாடுது (குதித்து

பரித்தநீ வன்னையும்சிறுத்த காடியுமேய வருகிறதை
பதிங்கி யேவருங்கள் ஒதுங்கியேயொருபுறமே
முருந்து வலையைக்கொண்டு முன்னேகட்டடாகல்ல
வுரிக்கவருததகதோ பன்றிமந்தொன் றுமல்ல குதித்து

எடுத்த கணை பிறையெய்யு மோன்மானையுமே
நீக்கமெல்லோரும்மெதிரிலேயடியேயெடுத்துமே
காணிபுமே குடுகுடென்றோடியே கொக்கரித்தேவாருங்கள்
கூடி கலிபாணி பாடி ஓரிட்டுந்நேசருங்கள் குதித்து

இராஜன்-கொச்சகம்,

ஓடியேவந்தமா னு ஒளித்தது புதரினுள்ளே
தேடியேபார்ப்போமென்றால் தேகமும்வேர்த்துகாது
மூடியேவடக்குதிப்போ முன்னேநூர்வனத்தினுள்ளே
தேடியேபார்ப்பிறப்ப ஜெலமிருப்பிடமுந்தானே

வ-ம். கேளுநம் மந்திரியார்களே நாமெல்லோரும் தேடிவந்தமானு னது யிந்த புதரினுள்ளே நுழைந்தது ஆகையால் அதை தேடவே னுமென்றால் வெகு நாழியாகும் யெனக்கு தாகமிடாவா யிருக்குது ஜெலம் யிருக்கிறயிடம் தேடிப்பாருங்களப்பா,

மந்திரி-விருத்தம்

போமிந்தசெடிக்கிநேருப் புகழ்பெருஞ்சோலையொன்று
காமிதக்குயிலும்பூவைக் கிளியுடனிருந்துகொஞ்சும்
பூமலர்த்தழைதாக புன்னைசெண்பகத்தருக்கள்
தாமரைத்தடாகம்நன்றாய் ஜலமுமேயிருக்குதையா

வ-ம் கேளும் மகாராஜனே சுமத் தருதாமை யிதோயிருக்கிறபுதரு க்குநேருப் தாமரைத் தடாகமும் சந்தனச்சோலைகளும் இருக்குது அவ்விடத்துக்குப்போனால் நல்ல ஜலம் யிருக்கும்போல தோணுது ஆகையால் அவ்விடத்துக்குப் போகலாம் சுவாமி.

இராஜன்-விருத்தம்,

சல்லிசீராய்கள்நல்ல தருநிபாவலைகளம்பு
துங்கவில்தடியுங்கொண்டு துடிக்குள்ளவேடரோனும்
மிந்துன்னமிருககூட்டம் யாவையும்வதைத்தோம்சத்தை
தங்குவீர்நிழலுக்குள்ளே ஜலமருவுண்டுவாரோன்,

வ-ம் கேளுங்கள் மந்திரிகளே வேடர்களே வேட்டைநாய்கள் வ லைகள் அம்புகள் வில்லுகள் யிது முதலானதுகள்கொண்டு உங்கள்ப லத்தினால் யிங்குள்ள மிருகக்கூட்டங்களையெல்லாம் அதோ யெதியா சமுக்கரித்தோம் நீங்கள் சற்றுநேரம் யிந்தசோலை நிழலில் யிற்றிரு ங்களுப்பா நான் தாகசாந்தி செய்துவருகிறேன்,

33

பொது-விருத்தம்-கலிப்பா.

மன்னன்ருக்மாங்கதனும் வனவேட்டையாடியபின்
தன்னருஞ்சூழ்சேனைகளும் தருவினிழலிலிருக்க
முன்னுநிசைமுகனளித்த மோகினிமேருவினருகே
புன்னைமல்லியிருவாட்சி பூபறிக்க வருகின்றளே,

வ-ம் யிதப்பிரகாரமாய் ருக்மாங்கதமகாராசன் வனவேட்டையாடி ஜலமிருக்கிற யிடந்தேடி வரும்போது இதற்குமுன் பிர்மதேவச்சிருஷ்டித்து அனுப்பிவித்த மோகினியானவள் தன் தோழியுடன் கூட மகமேருகிரி யருகில் நந்தவனத்தில் பூபறிக்க வருகிற விதங் காண்க;

மோகினி-விருத்தம்,

எந்தனுக்கிசைந்ததோழி யிந்தநல்வனத்திலுள்ள
சந்தனபாரிஜாதம் சம்பங்கிகோங்குமுல்லை
விந்தையாயிருப்பதாலே விதவிதமாகக்கொய்து
கொந்தலவமலரெடுத்து கொண்டையிற்சூடுவோமே

வ-ம் வாருமம்மா தோழி யிந்த மகமேருகிரியினருகே யிருக்கப்பட்ட புஷ்பமெல்லாம் பரித்து கொண்டையில் சூடி வருவோம்வாருமம்மா தோழி,

தோழி-விருத்தம்,

மாதரசேயிந்த மாவனந்தன்னிலுள்ள
பாதிரிபாரிஜாதம் பவழமல்லிகையுமுல்லை
ஜாதியிலுயர்ந்தநல்ல சம்பங்கிபரித்துக்கூந்தல்
சோதிசேயமுடிப்போம்முழுங் கொப்பெனவாருமம்மா

வ-ம் கேளும் என்னரசே அப்படியே தங்கள் இஷ்டப்பிரகாரம் பூங்காவனத்தில் சென்று ஜாதியானமலரெடுத்து கொண்டையில் சூடி வருவோம் வாருமம்மா

மோகினிபூபறிக்க தோழியையழைக்கிற-தரு-பட்டியம்,

பல்லவி.

வாருமே-வாருமே-வாருமென்னிடசேடியே

அனுபல்லவி,

பாருமிந்தநந்தவனத்தினிலுள்ள-பாதிரிபுன்னை
செண்பகமாதளை பூத்திருக்கும்வனம் (வாரு)

மல்லிகைமுல்லிகை மருவுடன்மருக்கொழுந்துகள்
நல்லமலர்களிருக்கும் வனத்திலே
ஞெவ்வாவாடிடும் கூடிமலர்தேடிவர (வாரு)

வனமதிற்புனல்பெறும் மடுவினில்நீருடுவோம்
மனநின்படியேனுடி வனமதிலேனும்சேடி
புனந்தனிலேநீராட போய்வருவோம்கூட (வாரு)

வாருசேர்புல்லாம் பாகையில்மேவிய
யோகவேலர்பதம் துதித்துனுடி.
யெங்கும்புகழ்பொங்கமாக சங்கராபரணம்பாடி (வாரு)

மோகினியும்-தோழியும்-பூபரிக்கிற-தரு-அடதாளம்
இராகம்-கலியாணி.

பூபரித்தெடுப்போம்வனத்திலுள்ள புஷ்பமெல்லாம்யெடுப்போம்
புன்னைமலருடனேகொண்டையினில் பூவையேனுமுடிப்போம்
பூங்காவினிற்சென்றே மல்லிகைமுல்லை பூஞ்செடியிற்றேடுவோம்
போதமலரெடுத்துமயிர்பின்னி போர்ச்சுட்டியிரச்சூடுவோம்(பூப)

மந்தாரைசெண்பகமும் மல்லிகைமுல்லைமருவுந்தவனமுமாய்
செந்தாமரைதுளசி ஜாதிபுஷ்பம் சேர்ந்துனுங்கொய்வோமா
செடிகள்நிரந்திருக்கும் புஷ்பமெல்லாம் சிறுகனும்சேர்ப்போம்
கொடமல்லிகொன்றையுடன் சரமாககூடவேனும்சேர்ப்போம்(பூப).

வடிவழகாளேநல்லபுல்லை நகர்வாழ்குமரானுடி
இடமிருபுஷ்பமெல்லாமவர்கென்றுசேர்ப்போம்கலியாணிபாடி (பூப

பொதுவிருத்தம்.

பரித்தநல்புஷ்பமெல்லாம் பாங்கியுந்தானுமாக
விரித்தகூந்தலையுஞ்சீவி மேன்மையாய்மலர்முடித்து
அரித்தியாயிருக்கும்போது அரசருக்பாங்கராஜன்
பெரித்தபோர்பரிகில்வந்த பூஞ்சோலைத்தனைக்கண்டானே.

வ-ம் அதோ தெப்படியென்றால் இந்தபிறகாரமாக மோகினி தோழி சவுந்தரவதனியுமாய் பூங்காவனத்தில் புஷ்பமெல்லாம் யெடுத்து கூந்தல்வாரி பூமுடித்துஅழகாகயிருக்கும்போது வருக்குமாங்கத மகாராஜன் வேட்டையாடி ஜலம் விருப்பிடக்தேடி வரும்போது மத்தம்மேருகிரி யரிகில்யிருக்கப்பட்ட தடாகத்தில் தாகசாந்திசெய்து காதவனத்தைக்கண்டு புகழ்கிற விதம்யெப்படி யென்றால்.

இராஜன்-கொச்சகம்.

செந்தாமரைத்தடமும் செய்பகருபூந்தடமும்
கொந்தார்க்குளிர்சுனையும் குங்குமப்பூசோலைகளும்
மந்தாரையுந்தழைக்கும் மாமலைதானர்பலேயோ
இந்தாவுலகுதனில் யான்கண்டறிகிலேனே.

வ-ம் ஆஆ யிந்த செந்தாமரைபுஷ்பித்திருக்கிற தடாகத்தினுடைய நேர்த்தியேநேர்த்தி வாசனைவீசப்படாநின்ற பூஞ்சோலையினுடைய அழகே அழகு மணம்பொருந்தி யிருக்கப்படாநின்ற யிந்த சுனையினுடைய

குளிர்ச்சியேகுளிர்ச்சி இப்படி அழகுபொருந்திய சோலைகள் சூழ்ந்த மலையோகாணெங்குங்கண்டதில்லை ஆகிலும்இந்ததடாகத்தில் தாகசாந்திசெய்து முழுதிலும் சுத்திப்பார்ப்போம்,

இராஜன்-கலிப்பா.

மாதவத்தோர்வாழிடமோ மாலின்லீலையினிடமோ
காதலுடன்வள்ளியரைக் கந்தர்கலந்திடமோ
சோதிதரும்நான்முகனார் சிஷ்டிப்புக்கிவ்விடமோ
யாதுமறிகிலனேயார்வாழுமிடமென்றே

வ-ம் ஆஆ யிக்கயிடம்அப்பு தேய்வு வாய்வு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களையும் நிலைநிறுத்தி சத்தம் பரிசம் ரூபம் ரசம் கெந்தம் என்னும் பஞ்சேந்திரியநவ துவாரங்களையும் அடக்கி சரீரத்தை யொடுக்கி தபஞ்செய்யப்பட்ட தபோதனர்களிடமோ ஆ ஆ யிந்த யிடத்திலே தானோ பதனாயிறங் கோப ஸ்திரிகளுடனே கிஷ்டன் லீலை செய்த யிடமோ அல்லது சுப்பிரமணியர் வள்ளியம்மாளைக் கலந்து காமக்கிரீட்டி செய்த யிடமோ ஆ ஆ சதுர்முகபிர்மா சகலஜீவாத்துமாக்களையும் யி[..]குளிர்ச்சியான யிடத்திலே தானோ சிரிஷ்டிப்பு செய்வது போலே தோணுதே யிது ஆர் வாசஞ் செய்யப்பட்ட யிடமென்றறிகிலேனே அரி அரி




வ-ம் ஆ-ஆ-ஆ-ஆ-இதுயென்ன ஆச்சரியமென்று மூர்ச்சித்து எழுந்து சொல்லுகிற விதங்காண்க. (இராஜன்சீசபத்தியம்)

தேவர்கள்மங்கையோ திருமாலின்தங்கையோ
ஜெகஜ்சோதிபோல்நின்ற ஜீவரத்னம்
பூவில்வாழ்வாணியோ புகழ்சித்திரரேகையோ
புடமிட்டசொர்ணமோ புகலுபூமி

தேவியோதிரைகடல் ஜெனிக்குஞ்சிதேவியோ
திகழ்ரத்னதீபமோ திவ்வியமாது
காவிரீத்தேவியோ கன்னியிந்திராணியோ
கந்தர்வஸ்ரீயெனக்கருதலாமே

மின்னர்க்கொடியின்டையெனமேனியெல்லாம்
சொர்ன்னமயவிருபா வடிவமாக
அன்னநடையுடனே அலவழகதாக
இன்னிலத்திலிருப்பதென்னவகையோ .

வ-ம் ஆ ஆ தெய்வலோகத்திலே வாசஞ்செய்யப்பட்ட தேவஸ்திரியோ திருமாலினுடைய தங்கையோ அல்லது பிர்மதேவனுடைய மனைவி சரஸ்வதியோ திருப்பாற் கடலில் பிறந்த மகா லட்சுமியோ தேவேந்திரன்தேவியாகிய இந்திராணியோ அல்லது யிந்தவனத்தில் யிருக்கப்பட்ட வனதேவதையோ அல்லது ஆகாசத்தில் பாக்கப்பட்டகெந்தர்வஸ்திரீயோ யிக்குளிர்ச்சிக்கிவந்து நிற்கின்றதோ ஜெகஜ்ஜோதியாபிரகாசிக்கானின்ற ஜீவாத்மாவோ சோதிமின்னலோ சொர்ன்னபதுமையோ ரத்தினதீபமோ ஆ ஆ யிவளுடைய சவுந்திரியத்தையென்னென்று சொல்வேன் ஆ-ஆ.

இராஜன்-தரு-ஆதி-இராகம்-கலியாணி.

பல்லவி.

சந்திரத்துக்கிணையாவரோ-புவிதோகைகளில்
பார்விகருவரிந்த சந்திரத்துக்கிணையாவரோ

அநுபல்லவி,

சோதினுதல்குழவிதழ் விழிகலைமதியோ
முகிலோ துவரோமலரோ அறிகிலேன்
நடையும்நடையும் இடையுந்தொடையும்
தொடையும்அணியுங்காமுந்தனமும்

சொல்லுலகில்கண்டால் கருங்கல்லுமுருகுமேயெந்தன்
மெல்லிடையெனுங்கண்ணாட்டிசெல்வமாகியமதனு சந்

பல்லவி,

மெல்லியிவட்கிணையாவரோ யிந்தமேதினியில்
மாதர்களெவருகிலும் மெல்லியிவட்கிணையாவரோ

அநுபல்லவி.

மின்னு மதிவதனுத லிதழ்கலைவிழியோ கனியோ
குழலோ முகிலோ அறிகிலேன் மெழிலும் மொழியும்
குயிலும்ஒயிலும்முலையும்அணியுங்கலையும்பணியும்(ராகம்பாடும்(மே
மூலகமும்முழிதிலும்கிலையிடுமழகெனசிலைமதனுராவாடும்கலியாணி

## இராஜன்சிசபத்தியம்.

பெண்கட்குள்மேட்டியோ புஷ்பாசன்கிரீட்டியோ
பேடையனமோநடை பூவையாட்கு
கண்களிரண்டும்வண்டோ கனியிதழ்கற்கண்டோ
கதலியடிதுடைகாம பீடமல்குல்

தண்டாளமோதந்தம் சந்திரனோமுகபிம்பம்
தங்குடமோகொங்கை தையலாட்கு
துண்டமதன்ரதிதேவி தியங்கிபிரமைத்திட
திரேகமேனியோ சொர்ணம்சொகுசிவட்கு

துங்கவில்லோபுருவம் தோகையாட்கு
மங்கைபருவம்நல்ல வயதனில்
சிங்காரிவட்குநான் சொல்லவல்லனோ
இங்கையும்வந்தது யான்செய்பாக்கியம்.

## மோகினி-விருத்தம்.

எந்தனுக்கிருந்து யேவல்செய்தோழிகேளாய்
முந்தியென்தந்தைசொன்ன மொழிப்படியாகத்தானே
இந்தநல்வனத்தினுள்ளே யெழில்பெறவேட்டையாடி
வந்தவர்கிரிஜையாரும் மன்னன்போல்தோணுதம்மா

௯-ம் கேளடியம்மா நவநீதம் ஆதியில் என்தந்தைசொன்னது மந்திரகிரிசாரலிலே நீபோயிருந்தால் யிந்த உலகமெல்லாம் ஒருகுடையினாளப்பட்ட தர்மாங்கதமகாராசன் வேட்டைக்கிவந்து உன்னைக் கண்டு மோகித்து கூடியணைவானென்று சொன்னரே ஆகையால்யிவர் தான் போல் காணுதடியம்மா நவநீதம்,

## தோழிவிருத்தம்,

அவனியில்மன்னர்வேட்டைக் கனேகம்பேர்வருவதுண்டு
இவரென்றுகிரீஜமன்னன் யெப்படியுரைப்பதம்மா
கவலைகொண்டேநீகமாககாமத்தால்மெலியாதம்மா
அவர்சொல்நல்மொழியினாலேஅரியலாமின்னுமென்றே.

௰-ம் கேளுமம்மாதாயே இந்தபூலோகத்திலிருக்கப்பட்ட இராஜாக்கள் அனேகம்பேர்வேட்டைக்கிவருவதுண்டுருக்மாங்கதமகாராஜன் இவரென்றுயெப்படிசொல்வது இன்னம்அனைநாழியிலே இன்னாரென்று அரியலாம் நீசும்மாயிரும்மம்மா மோகினி.

## இராஜன்-தரு-அடதாளம்.

பல்லவி

ஆடியிந்த அடவிக்குள்ளேதனித்து
அருவையேன் வந்தாய்நீகூறடி.

அநுபல்லவி.

தார்குழலாளேயுன் தாய்தந்தைபேரென்ன
தளைத்தாயிக்காட்டினில் தங்கவேண்டியதென்ன (ஆ)

சரணம்.

மதிமுகசந்திர வடிவழகியிந்த
வனப்பூஞ்சோலையுலவியலர் கொய்திடவும்வந்த (ஆ)

மருவுமல்லிகையிருவாட்சி செண்பகக்குடி
மகம்மேருகிரியினில் வந்தாயாரைத்தேடி (ஆ)

திரண்டபருவமான நாரிசிரோன்மணிமாதே
தேன்மொழியாளே நீ திருவாய்திறவிப்போதே (ஆ)

உத்தமிமாதேநீ வதித்ததுமெங்குமோ
பெத்ததாய்தந்தை யுனைக்கிட்டதுமென்னமோ (ஆ)

தாவிப்பூஞ்சோலையில் தனியேதேடிசுத்த
சாவேரிசகம்பாத தளிர்கொய்யத்தா[illegible]வைத்த (ஆ)

இராஜன்-கலிப்பா,

அன்னநடையாளே யழகுதொல்லாணிமுத்தே
பின்னர்க்கொடியிடையாளே பிருந்தவடிவழகாளே
வர்ணமயிலாளே வாய்திறந்து பேசாமல்
இன்னிலத்தின்மென்சும்மா யிருக்கிறாய்நீயெந்திழையே

வ-ம் டியோடி அன்னநடைப் பெண்ணே அழகுப் பெண்மயிலே குயிலே நாரி சிரோன்மணியே அடி பெண்ணே பலவிதமா யுன்னை கெஞ்சி கேட்டபோதிலும் வாய்திறந்து பேசாமல் யிருப்பதென்ன பெண்ணே,

மோகினி-தரு-ஆதி-இராகம்-மத்தியமாவதி,

பல்லவி.

சகிமணியிவளாரடி-மெத்த
சமத்தெல்லாம்பேசுகிறாள்பாரடி.

அநுபல்லவி,

மகிதலத்தன்னையாரும் மன்னன்போல்காணுது
மையல்மாறுதவர்போல் தையலேதோணுது சகி

சரணங்கள்.

சொந்தவுடைதுவென்றும் வந்தபாடேதுவென்றும்
சொல்லிகேட்டுங்கை வல்லியாவந்திங்கை
சிந்தையுருகுதென்றும் வந்துமருகுமென்றும்
செப்புகிறார்கல்வி அப்புரம்போசச்சொல்

திருமைபல்பெரிதியே மிருமனதுரிதியே
அரிமையாய்சொரிதியங்கடவுகள்பெரிதியே
தெரியுடனெதிரினிலே திரினில்வருகிர-பரிவுட-
னெனையரிவுடனிதோபரிகிர — சகி

பத்துவிதஞ்சொன்னாலும் ஒத்துயிருமல்மேலும்
சத்திக்காலிட்டுறவாம சேரவந்தடிக்கடி
நத்திநத்தியெந்தனை யெத்துவார்போலதோணுது
ஞாயமல்லடி சகிநீயாகிலுஞ்சொல்லடி

கலமிலகியதிருவல கொருகுடையாளும்
தலைவனைப்போலுமென் கலவிதுருந்தது
கிலைநையிலேந்தி யிக்குலவிபுமரிதியாய்
குலவியேயணையென குணமுடன்க்ருதிய — சகி

யெங்கும்புகழ்பெருகும் பங்கையநருமும
பொங்கயிரும்புல்லாம் புரியினிலேயெல்லாளும்
தங்கும்ஞதைபுசி யிங்கிதம்போகம்மென்னை
தானரியாதசேதி யானுமுண்டோநீதி

தாகமதாகயெனைகவிதத்துரவாசவு
மெனையனுபோகமுன்செய்யென
[illegible]கமதாய்குரவசத்தேயெப்படி
சோகமகத்தியனுகம்ப த்நிபமாவதி — சகி

மோகினி-கொச்சகம்.

மன்னவனோசிவசுப்பிர மண்ணியனோமன்மதனோ
கின்னரனோகாந்தருவ கேசவனோவாசவனோ
பின்னெவனோகுலமெவமோ பேரெனமோவூரெதுமோ
இன்னவனர்தன்னில்வந்திங் கிளைத்தவிதமரியேனே.

வ-ம், இங்ஙனம் மூர்ச்சித்திருப்பவர் மன்னர் மன்னனோ சுப்பிர மண்ணியனோ அனங்கனோ கின்னரனோ காந்தர்வனோ கேசவனாகிய மகாவிஷ்ணுவோ வாசவனாகிய யிந்திரனோ யாரோ எக்குலனோ யெத்தேசனோ யென்னபெயரோ யாதுமறியேன் தோழி.

இராஜன்-விருத்தம்.

மங்கையர்க்கரசேதேனே மாவனத்தனிலிப்போ
தங்கியேயிருப்பதென்ன தாய்தந்தையாருன்பேரும்
சங்கையில்லாமலிங்கை சவிஸ்தாரமாகயென்னோ
டிங்கிதமாயுரைப்பாய் யாதுக்குமஞ்சவேண்டாம்

வ-ம் கேளும் வுன்னைப்பார்த்தால் காம ரசவிலாச திரிலோக சுந்தரிபோலுந் தோற்றுகிறதே நீயார் வுன்தாய்தந்தையார் யிந்தமகாதிரகிரிசாரலிலே ஒண்டியாயிருப்பதென்ன சொல்லும்பெண்ணே.

மோகினி - தரு-கண்ணிகள்.

மன்னனேயென்னிட வரலாறைக்கேளாய்
பன்னகசயனன்சேதான் பராக்கிரமன் மாயன்
கன்னிடவுந்தி தாமரையினிலுதித்தோன்
யென்னிடை தந்தைபேர் யெழில்பிர்மதேவன்
அன்னையாமெனக்கு அருள்வாணியென்பார்
இன்னிலத்தில் தவம்யான் செய்யவந்தேன்
பொன்னின்முடிதரித்தபூபனேநன்றாய்
வுன்னிடவரலாறை வுரைத்திடச்செனக்கு

மோகினி-விருத்தம்.

தந்தைபேர்பிர்மதேவன் தாய்பெரும்வாணியென்பேர்
விந்தைசேர்மோகினியென்கன்னிகை விரும்பியபடியேனும்
இந்தநல்வனத்தினிப்போ யெழில்தவஞ்செய்யவந்தேன்
வந்தனூர்பேர்தாமென்று வுரைத்திடீர்வுண்மையாக

வடம் சேருமையா யிந்த பூமியின் கன்னியேலட மானிடஜென் மங்கள் அனைத்துமண்டு நீயாரோ யெனக்குதெரியவுரைநு யான் பிர்ம னுடைய புதல்வி என்பேரோ மோகினியென்றுச்சொல்வார்கள் மே லும்நான் யிக்கானகத்தில் தனியாயிருக்கும் காரணமியாதெனில் இத் தகர்மசடலத்தை யொழிக்கவும் நற்கெதிபெறவும் தேவாலயங்களை யடுத்து வூழியஞ்செய்ய வந்திருக்கிறேன் நீயாரோ தெரியச்சொல்லு (மையா

இராஜன் - தரு-கண்ணிகள்.

வனிதையேசொல்லுவேன்யான்யென்னுடைய
வரலாறைதெரிந்திடத்தான்

நரப்பெருங்கிரீடங்கள்ஒருநொடியில் காணியாயாளுவேன்யான்(ன் யென்பேர்ருக்மாங்கதராசன்யிவ்வுலகெங்குமெவர்களும்புகழும்போஜ சந்திரவதனியென்றும் மனைவியின்பேர்சந்தியாவொளியுமென்பார் மைந்தன் தருமாங்கதராசன்குலகுருபேர்மாதவவசிஷ்டமூர்த்தி(போல் எங்கும்புகழ்பெற்றிருப்போம் யிவ்வுலகினில் எவரையும்பாதுகாப் பிக்கும்காடியன்றிபயிர்பச்சைகள் சேதமாக்குதென்றுசொல்லி உரைத்தனர்குடிகள்வந்து என்னுடனேவுண்மையாசொல்லிநொந்து துரிதமாய்வேட்டையாடிஆயாசங்கொண்டுகளையரிகிலடி(ன்டேன் வந்துவுன்முகத்தைகண்டேன்பெண்ணேகண்ணேமையல்மிகவுங்கொ ண்டேன்வரலாறிதுதான் விரகந்தீரயெனக்கொருவகைசொல்லிடாய்

இராஜன்விருத்தம்.

தெரிவைபார்சசேயெந்தன் சேதிபைச்சொல்வேன்கேளாய்
இருவுணக்கிரீடையாளும் இருக்மாங்கதனென்பேர்
மருவுசந்திரசேகரிசந்தியா வொளியெனுமைந்தன்பேரும்
தருமாங்கதனென்பார்க்குதன் தலைபத்திரப்பாய்பெண்ணே.

வ-ம் கேளாய் யதிரூபலாவண்ணியமுள்ள மோகினி யென்னும் கிரிஜாபுரியாளும் ருக்மாங்கதனென்று சொல்வார்கள் யென்பனுக்கு சந்தியாவளிகுமாரன் தருமாங்கதன் என்குலமோ சூரியகுலம் நன்சுகந்தமுலாவும் நந்தவனங்களையும் இருடிகள்வசிக்கும் மடாலயங்களையும் தேவாலயங்களையும் தெரிசிக்கவேண்டி தனித்திருந்த மந்திரகிரி சாரலில் வந்தவிடத்தில் உன்னைக்கண்டு மோகித்தேன் நீ தயைசெய்து என்னை யாட்கொள்ளாவிடில் சகியேன்பிராணநாதமாய் நீ கருணைசெய்து என் விரகந்தீர்ப்பாய் பெண்ணே.

இராஜன் விருத்தம்.

சங்குபாகுமையாக ...சிந்திலின்றவளே
செக்கச்சிவந்தவளே தேனார்மொழியாளே
மைக்கோல்கல்விழியாளே மாமணியிலிழையாளே
சர்க்கரைவாய்தனைதிறந்து சரசமாய்ப்பேசாயோ

இராஜன்-தரு-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

பார்க்கபார்க்கவுன்னை பார்க்கபிரமிக்குதேபெண்ணே
பஞ்சவர்ணக்கிளியோ

ஓடிபதம்.

பன்னும்பொற்பதுமையோ பரிவாவமதிரொட்டு
பார்த்தாலென்னகோபமோ பாக்கியவதியே-யிந்த

பாதாளத்தினில்ஆகாசக்கிளிவேதாந்தத்தினில நாதாந்தக்கொடி
பந்து முலைகள்செண்டு விழிகள்வண்டு யிதழ்கற்கண்டு
மதனவிலாசம்பசப்புருள் கைபசக்குருளிந்ததிசைக்குள்ளே
யிவளாரெனவேசொல்லி காலிலேவிழுவேனே காரியமாயிவள்
சேருவளோ பளாபளா வெகுகெட்டிகாரி வெகுசமர்த்தி
யிவளென்னபத்மினியோ சிவசிவசித்தினியோயிவளென்னசங்கினியோ
யிவளென்ன அஸ்திநியோ யிதென்னவிந்தை பளிபளியென்று
குபிகுபியென்றுயிதோ பகலென்றுமின்னுதே-பவழமாணிக்க
கிடைநடுவே நீலக்கண்ணாடி பளிச்சென்றுமின்னுது
வெளிச்சம்போல் காணுது-ஆ-ஆ

வ-ம் ஆராடா அடா விதூஷகா பார்க்கயில்லை பார்க்கயில்லையென்றுசொல்லப்போகுறாய் யிதுபகல் வத்தி பிரகாசம்போல் பிரகாசிக்கிறதே யிது பசும்பொன்கட்டியோ என்னுசைக் கண்ணுட்டியோ காமக்கிளிட்டியோ ஆ-ஆ,

தரு-பைம்பொன்னுகமுமணி ஜம்புநசப்பழம்போல்
பளிரென்றுமின்னுது தளதளென்று தானுது
பறக்குதே நரம்பிசக்குதே யென்னுடையயிருதேலே

பரப்பிர்மனிடக்கட்டளையோ சிவனைச்சிறுவனிட சொற்படியோ
ஆயன்சர்ப்பனையோ மாயன்கர்ப்பனையோ யினியெப்படி எப்படி
இன்பம்பெறுங் காமபீறி அன்புதருமசாலிவரிபார்க்கபார்க்கவுஞ்

இராசன்-சீசபத்தியம்,

மதியென்றுமலரென்று வர்ணிப்பதல்லாமல்
வுன்முகம்வடிவினுக் கொப்பதாமோ
சேலென்றுமகமென்றும் செப்புவதல்லாமல்
அருமையேயுன்விழிக் கிணையதாமோ
பசேதனென்றும்செண்டென்றும் பகருவதல்லாமல்
உன்மெய்வர்ணமுலைகளுக்கொப்பதாமோ
கடிமென்றும்படமென்றும் சாற்றுவதல்லாமல்
அருமையுன் னல்குலுக்கிணையதாமோ
வுன்னைவகுத்திட்ட பிர்மனுக்கென்னசொல்வேன்
மனதுகளிகூர வாழ்த்துவேன்மாதரசே
மையல்சகியாது தாளாதுமனம்தில்லாது
மஞ்ஞியெனையாளடி வர்ணமயிலே

இராஜன்-தரு-ஆதிதாளம்-இராகம்-தோடி,

பல்லவி.

மதனசங்கீதகிரீட்டியேட்டனையேட்டி
மாதரசேகண்ணாட்டி.

அநுபல்லவி

நுதிசேர்சிதளமதிநுதலித்திலக சோதியெரித்ததொரு
வதனம்போல்தோணுதே

வ-ம் ஆ ஆ தொழுதாலும் பலந்தீருமோ நல்ல துணையானவழி யிடைக்குமோ ருசியெல்லாந்தெரியுதே தெரிந்தும் சுகமனுபவிக்க மனம்பிரியுதே.

தரு-தொல்லைநாலென்னநீதியோசோதித்தேன்தலைவிதியோ

சரணங்கள். மதனசங்கீத

வெள்ளிலைசுருள்மடிக்குறேன் யான்கடித்த
மீதியுனக்களிக்குறேன்
வுள்ளங்களிக்கபதம்படிக்க மனங்களிக்க
வுல்லாசசல்லாபவில்லாசமாயிருக்க

வ-ம் உனக்கும் எனக்குமல்லவோ எவ்வளவுகாலம் பிலத்யமிருந்து ஒத்துவந்தாலல்லோ அனுக்கூலம் ஒருமொழிசொல்லாயாயிப்படி என் முகமேபார்த்து நில்லாயா,

தரு-ஓ-ஓ-சரசமின்சிமோகன றஞ்சிதகொஞ்சிதழ்வஞ்சி மனசந்தித
கந்தமலர்குழலாளே முகதரிசனம் கண்டேதே-நல்ல-வேளை.
கந்தசெந்தப்புனுகு கதம்பச்சல்தாளிபூசி
காதலுடனேயிலட் காவிர்கலந்துபேசி

வ-ம் கரும்புத்தின்னவுங்கூலியா வுன்கருத்துக்குருக்கவேவியா இதிருல்கனமா ஆசிலும்யிப்பேர்ப்பட்டமனமா,

தரு-கன்னிபென்னுடிமற்மம் கபடமாமோடிதற்மம் (மதன)
வனத்தினில்வாழ்மானே மாமதுனாமானேநற்செந்தேனே
தினகரனுனைதயப்போல் செவியிர்குழையிலங்க
சித்தினியென்னுமேவுர்தன் சித்தமிதங்கலேயோ

வ-ம் இக்கரத் காவிற்கண்டேனே நான்தேடிய தெய்வமென்னொன்ணரிக்கொண்டேனே இவசிவா யிதைவிட தெரிசினம் வோவா தின்னெடுழுக்க பொர்க்குடத்தை அடவா,

தரு-செர்திருவானபெண்ணே சோமல்விடுவேனோகண்ணே மதன

இராசன்-சிசபத்தியம்.

மதனுபிஷேகமோ மதனுவைபோகமோ
மதனுகிரிட்டியோ மதனரதியோ
மதனுநகலாபமோ மதனுசலாபமோ
மதனுகிறாபமோ மதனசுகமோ
மதனுவிச்சித்திரமோ மதனுசரித்திரமோ
மதனகளத்திரமோ மதனநிதியோ
மதனுவிநோதமோ மதனுசங்கீதமோ
மதனுபிரசாதமோ மதனரசமோ
மதனகேளிவிலாசசன்மார்க்கநிபுண
மதனசீலஅனுக்கூல நிர்வாகதனமா
மதனகலியாணகுண பூரணுவாசமலரோ
மதனகுருபீடமோ பிந்தமாதரசே,

மோகினி-விருத்தம்,

வேதனுமெச்சன்தந்தை விளம்பினபடிவனத்தில்
நீதமாதவமேசெய்ய நெரியுடனிருக்கும்போது
காதல்கொண்டெர்தன்மீதில் கண்ணென்றுபெண்ணேயென்று
வாதுக்குவந்தாயோனி வாடிநீபோடியென்ருய்

வ-ம் மேதினியாய்கை நீக்கியிந்த கர்மசடலத்தை யொழித்து நர்க்கெதிபெறவும் தேவாலயங்களையடுத்து ஊழியஞ்செய்யவந்திருக்கிற வென்னைசற்பழியனுருவார்த்தையாடலாமா மகாராஜனே,

இராஜன்-விருத்தம்,

பருவத்தில்தவமேசெய்தால் பறகெதியடைவதர்க்கு
நெரிதப்பிபோகுமென்று நிலத்தினில்சொல்வாரந்த
அறிவுனக்கில்லையோதான் அடவியில்கூடியெந்தன்
விரகனேப்தீர்ப்பாய்பெண்ணே வீண்வார்த்தையாடவேண்டாம்

வ-ம் அடிபெண்ணே மோகினி யெவ்வர்ணகாலத்தில் பகவானைத்துதி செய்து பரகதியடையலாமென்று யோசித்தயேதெரியாயிருப்பாயா இது வுனக்கு தெரியாதபோனாலும்வுலகத்தார் சொல்லக்கேழ்க்கல்லையா இன்னங்கொஞ்சகாலம் போகவேணும் ஆகையால்சுகமாயென்னைக்கூடியென்விரகநோய்தீர்ப்பாய்பெண்ணே,

இராஜன்-தரு.

பல்லவி.

மோகலாகிரி மீருதே கண்ணடிமானே ஒருமுத்தந்
தந்தெனையாளடிசெந்தேனே,
வேகமாய்மதன் விடுகணையினால் நானேவுன்னை
விரும்பிமெலிந்துமிகமையல்கொண்டேனே

வ-ம் ஆஆபெண்ணேவேண்டவேண்ட பிகுவேருமா நீவெருத்தாலும்பெண்தயாருமா சவிதக்கமில்லையா யேமெடுத்துபார்க்கமனம்வல்லையா.

தரு-யினமொத்திட கனம்வைத்துனி மனமொத்திடு பெணபத்தினி மோகலாகிரி மீருதே.

யேருவை யொத்தகொங்கை தெருக்கும் மிதுவொளி
பெருகியமின்னலைப்பழிக்கும் யிடையுஞ்சிருக்கும்
கோரியேயென்மனதுருகுவாருக்கும்
குருக்கணையில்லாமல் கூடிநுமினை துள்ளம்பூரிக்கும்

வ-ம் கொஞ்சமாகிலும் சித்தம் யென்மேல்நாடாத கூசாமல் ஒருமொழி பகரக்கூடாதா யின்னஞ்சலமா நீயிதங்காவிட்டாலும்நலமா.

தரு-யிதமாகவே மனுவாய்மலர் துதவாய்ஒரு விதமாகிலும் மோ

மெள்ளமெள்ளவுன்னரிகினில்நான்வரவோ
வுந்தன்மேகலையினிட தாங்கிடகைதரவோ
கள்ளமேதுக்குயென்தன் மீதில்குரவோ
யித்தகடினத்தாலும் நீயென்ன பாக்கியம்பெறவோ

வ-ம் கல்லுங் கரையத் தோணுமே வுன் கருத்துக் கரையுமென்னொண்ணாக்காணமே உருத்தயில்லாமல் படியுமா ஒருமைப்படாமலும் முடியுமா.

தரு-உறவாகவே வருவாயுன தருவானது குறைவேனினி மோ

இனிமேலாகிலும் யெனக்காதிரும்படி
யிள-காமனுந்தன் யிர்தயமானதெய்வமிரும்படி
வனிதையேகனிவாகவிரும்படி
அரிதானவுன்னிதழ்வாய்மொழியினிதானகரும்படி

வ-ம் வாதிக்கவும் என்றால் தாமா வாஞ்சிய யென்னிலில்லாதகா மா அணைக்கடங்காமடையா நீஅணையிலேனுமென்றும் தடையா.

தரு-அன்பாகவேயென்பாலிரு ஆலாபிக்கவே நீலாம்பரி மோ

இராசன்-சீசபத்தியம்.

போகாதே நில்லடி புத்திதான்சொல்லடி
மோகதாபந்தீர முன்னேவாடி
வாகாருமன்மதன் பூவாளியால்கொந்து
வாடாமலின்னேரம் வாடிவாடி,

வேகமதாய்மதன்கணை விடுவதாலுந்தனை
விட்டுநான் பிரிவது விருதாவல்லடி
தோகையேயுன்றனை திருமல்விடுவனோ
சித்தமென் பாக்கியஞ் சேரவாடி

பெரியன்மேல்தயைவைத்து யின்பமாக
களிவுகொண்டென்னிட காதல்தீர
கிளிபோலவாய்திறந்து கொஞ்சிகொஞ்சி
குளிர்ச்சியாயொரு முத்தங்கொடுத்திடாயே,

மோகினி-விருத்தம்.

அடைக்கலமுனக்குநானென் றடவிக்குள்சேர்ந்தேனென்னை
யிடக்குகள்பேசுகின்றாய் யிச்சையுன்மேல்கொள்வேனோ
கடக்கநில்லெந்தனைநீர் கண்ணெனன்றும்பெண்ணேயென்றும்
மடக்கவுந்தருமோயிந்த வழிவிட்டுவிலகுவாயே,

வ-ம் கேளும் மகாராசனே நானுனக் கடைக்கலமென்றும் யென்னைச்சேர்ந்தும் யிந்தகாட்டில் தனித்து இடக்கான வார்த்தையாடினால் நானிச்சைகொள்வேனோ யிந்தவழிவிட்டு அப்புறம் விலகிபோம்இராஜனே,

இராஜனுக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-தரு,

இராகம்-கலியாணி-இராஜன்-கண்ணிகள்.

அந்தமுகில்குழல்மானே வுன்மேலாசைக்கொண்டுவந்தேனே
சிந்தைமகிழ்ந்தனிதேனே

சுந்திரமே வந்தோர்மொழி தந்தருளுமெந்தனக்கு அந்த

மோகினி-தரு,

எந்தவூர்காண்மன்னா நீரிப்படிசொல்வதுமென்ன
விந்தையதாகவேமுன்னா

வெகுவாதுகள் மிகவாடவும் தருமோசன மகாராஜனே யென்

இராஜன்-தரு,

ஆஜவடிவாளையாலேனுன் ராஜ்யபட்டேனுங்கன்மேலே
யோசனையதுக்கப்பாலே
மனிதனுருத்தாமலே வருந்தமது பொருத்தருளுங் கருத்துடனே ()

மோகினி-தரு.

கரித்திலச்சமன்னர்க்கேது கள்ளமில்லாமல்செய்கிறீர்குது
அத்தவருத்தமெனக்குசெல்லாது
மனதிலுனுபிக ஞானகமேல தோனுமிது விஞகவே   கரித்

இராஜன்-தரு.

வீமெனன் துவாயால்வெல்லாதே கூடவிட்டாலென்மனதில்லை
சாணத்தனங்கள்செய்யாதே   (தே
சரிபாகவு முறையாகவே மரிவோமன தர்த கவே   வீமென

மோகினி-தரு.

அருவரித்தேபுகல்வீரும் ஆருமறியாமல்ஞமிருவோரும்
மருவும்வகையேதுகூறும்
மகியாளுய ரதிகாரியே யிதுகோலமோ தநிகாலமோ   அரு

இராஜன்-தரு.

காலமிதுவே குணவதியேயுன் னைக்கண்டதுவும்நல்லதிதியே
கோலங்கொள்ளாதடிராதியே
கோளாயுனை வேளாவிடில் மீளாதடி பாணியது   கால

மோகினி-தரு

பாணிகொண்டிங்குவந்தாய் புல்லைநகருளுங்குமரனே தந்த
காலன்பதம்பணிபெத்த
வீல்லாகாலத்தினில் கலியாணியின் ராகத்தனை பாடெடுத்துறாய்(பாணி)

மோகினி-விருத்தம்,

தரணியில்பெண்களானோர் தவமதுசெய்யவந்தால்
அரசர்கள்காப்பதாண்டு அவையெல்லாம்விட்டுநீரும்
அருந்தவமழித்துயென்னை அணையவேவாருமென்றாய்
இருநிலத்தினிலேயுன்போல் எவரையுங்காணேன்மன்னா

வ-ம் கேளும் மகாராசனே வுலகத்தில் ஸ்திரிகள் தவஞ்செய்யவந்தால் அரசாளப்பட்டவர் அதற்கொரு பின்னம் வராமல் பாதுகாப்பதாண்டு அவையெல்லாம்விட்டு என்கற்பழிய கூடுயென்கிறுய் யிதுசரிதானு ராசனே,

இராசன்-விருத்தம்.

காமதுயழித்தேனென்றாய் தையலேமதனுமென்னை
சிவுக்கெனகணைகளெய்ய திரேகமுங்களைத்தேனெந்தன்
கவலைநீதீர்த்தேயானால் கனகசாம்பிராச்சியம்பெத்து
பவமதுவொழிந்துநன்றாய் பாகதியடைவாய்பெண்ணே,

வ-ம் கேளும் பெண்ணே மோகினி உன் திருவழகை கண்டவுடனே காயல்கணைகளால் தனிக்கிறேன் யென் காமக்களைதீர கட்டியணைத்து ஒருமுத்தந் தந்தால் நீசீக்கிரமாய் பரகெதியடைவாய் பெண்ணே மோகினி.

இராஜனுக்கும் மோகினிக்கும் தர்க்கம்-தரு
அடதாளம்-சங்கராபரணம்-இராஜன்-கண்ணிகள்,

விரகஞ்சகிக்கலொண்ணுதேயுன்னைவிட்டுபிரிருவேனென்றயென்னுதே
அருகைவையென்னைவாவென் றழைத்துசரசமாடி
அதரத்தேன்துளிதந்து அணைந்திடுவாய் (விரக)

மோகினி-தரு.

தரணியையாள்மகராச வெகு-சகலவைபோகமுடையதிபோஜ
அரசாளுமன்னர்கள் அரிவையர்களுடனே
பரியாசம்செய்வது மரியாதியோ (தர)

இராஜன்-தரு.

மாதரசேயின்னம் மோடிசெய்தால்மாரன்
கணைபாவெலந்தன்மனமிகளுடி
வேதினைப்படுவது வேணயறிந்துநீயும்
விச்சித்திரம்பேசுறாய்சித்திரக்கல்வி மாத

மோகினி-தரு.

யேதுக்கென்மேலிந்தவாதோ யிவளெதிரியா
நமக்கென்றுமேதெரியாதோ
காதல்கொண்டேனைக் கன்னியஸ்திரீகளுடனே
கலந்தணைவுமென்பது காரியமோ யேது

இராஜன்-தரு,

வுன்னைக்கண்ணில்கண்டபோதே-யென்
னுள்ளம்வெயில்மெழுகா யுருகுதேமாதே
கன்னியேநீயெந்தன்காமன்கணையைத்தீர்த்து
கட்டியணைத்துமுத்தமிட்டுக்கொள்வாய் வுன்னை

மோகினி-தரு.

தந்திரவார்த்தையாடாதே யிப்போ
தனித்திங்கேவந்துனி தழுவக்கூடாதே

விந்தையேன்பேசுகிறீர் விரைகயென்னுடன்
மந்திரத்தால்மாங்காய்விழுமோ (தா)

இராஜன் -தரு.

மாரன்கணையெய்யுறாண்டி யென்னை
மருவியணைத்துசந்தை-மையல்தீரேண்டி.
போராட்டம்செய்யாதே பொன்னின்குடஸ்தனத்தை
பிடித்துகனிவாயிதழ் கடித்திடவோ (மார)

மோகினி-தரு.

செங்கதிர்குலத்தில்வாழ் மன்னனேயென்னை
சேர்வதுமென்ன திசயமென்று
சங்கையில்லாமலே தரணியாளரசர்கள்
சங்கராபரணம்பாடி தழுவார்களோ (செங்)

இராஜனுக்கும்மோகினிக்கும்-தர்க்கம்-தரு.

அடதாளம்-மத்தியாவதி,

பல்லவி.

முத்துநேர்நகையன்னமேஎன்மீதில்பட்சம்
வைத்திலாதெனின்னமே.

அனுபல்லவி.

உத்தமிமனமேதுமுன்னாள் சித்திக்கவேனுமோவென்றால்
மெத்தவுஞ்சாலஞ்செய்யாதேகித்தியாசமுமென்னதேது(முத்)

சரணங்கள்,

மோகினி-தரு.

அச்சமில்லாமல்வேடுறீர் என்மீதில்பட்சம்
வைத்துரிகிவாடுறீர்.
இட்சணம்லீலைகொடுத்து உச்சிதசுகமுடித்து
மெச்சிவேர்மணம்செய்ய வேலைவைத்துக்கொண்டா
லென்னசெய்வேன்,ஆ (அச்ச)

இராஜன்-தரு,

மின்னிலிடைக்கன்னியே உனக்குநான்
சொன்னதென்னமுன்னமே-
உன்னையேமருவிக்கூட தென்னிடமனதாட
பின்னையோர்மணஞ்செய்தே னென்றுசின்னமோ
நீசொல்லுவது, ஆ (மின்)

மோகினி-தரு.

சொல்லுக்குசிங்காரமோ பின்னிட்டுயென்று
வல்லடிகள்நேருமே
கல்லுமென்னுமைக்கூடவும் தில்லும்பில்லும்கீர்த்தடவும்
அல்லல்படுவதுபாரு லும்மை வெல்லவல்லவளாவனோ ஆ(சொ)

இராஜன்-தரு.

வடிவழகுதையலே மதனுங்கணைவிடுவதினல்லையலே
கொடியிலுந்தான்தென்றலே
முடியவேண்டியதுன்றனேயுடனேநான்தழுவினேன்
கைவிடுவேனோவென்றெண்ணவேண்டாம், ஆ (வடி)

மோகினி-தரு.

பெண்ணினீயொருபின்னையும் விளையாடத்
தடைபண்ணுபோதினியென்னையும்
அன்னுபோச்சுதந்தூரவு யின்னுமுண்டோவுன்வுரவு
கண்ணாடனாரவென்று நின்னைத்தாலருமோ ஆ பெண்

இராஜன்-தரு.

சிதைமலர்திருசெல்வியே யித்தனிநாம்
ஓதுவதேன்கல்வியே
காதலாரவேயெனக்கு ஆதரித்தாலேவுனக்கு
வஞ்சனைசெய்வதில்லை தாதவிழ்மலர்கோதையே ஆ சிதை

மோகினி-தரு,

தாதவிழ்மலர்சோலைசூழ் புல்லாப்பாகையெனுந்
தன்னில்வாழ்
நீதவேள்குமரேசனை ஆதரவாகவேநன்றாய்
ஓதிமத்தியனகுபாடி-காதல்கொள்ளுய்நீவாடி ஆ தாத

இராசன்-விருத்தம்,

ஒவியமெழுதவொண்ணு வுருவமோகினிநீகேளாய்
மேவியரதிபோல்நூறு மெல்லியர்தமைமணந்து
தாவியம்புவியையாண்டு தனித்துமன்மதனுக்காளாய்
காவியங்கணிநின்மேற்கொள் காமன்தீர்த்தெனையிங்காள்வாய்,

வ-ம் செப்புதற்கரிய சிரோங்கிய சித்திரக்காரரால் யெழுதப்படாத திவ்வியசவுந்தரிய ஜெகன் மோகினியேகேளாய் நான்யிதுவரைக்கும் ரதிதேவிக்கொப்பாகிய அல்போடுங்கூடிய நூறு ஸ்திரீகளை கலியாணஞ்செய்துகொண்டு உலகையாண்டிருந்தேன் இப்போதிந்த திவ்ய சிங்காரவனங்களை காணவேண்டி வந்தயிடத்தில் வுன்னைக்கண்டுகாமங்கொண்டமையால் சாசாங்கித மடந்தையாகிய பயிலே நீதயவுசெய்து யான்கொண்ட விரகத்தைத்தனித்து ஆட்கொள்வையாகில் வுனக்கு புண்ணியமுண்டு மானே,

மோகினிவிருத்தம்.

காமத்தைதீர்க்கஓதுங் காவலர்மறையோர்சூழ
ஓமத்தைசெய்துக்கொண்ட ஒருவருபாகருக்கு
க்ஷேமத்தைதானுன்வேலைசெய்யவோவுழைத்திரந்த
நாமத்தைநினைக்கமாட்டேன் நம்பொருதுபதிப்பேர்மைச,

வ-ம் ஆ ஆ கேளும் மகாராஜனே நீர்கொண்டகாமத்தை தனிக்கும்பொருட்டு என்னையழைப்பதை யோசிக்கின் வலகின்கண் பூசுரர்களென்னும்மறையோர்கள் சூழ்ந்து விதிப்படிக்கி ஹோமத்தைவளர்த்திப்ரவிக்கிரகஞ்செய்துங்கொண்டதாருஸ்திரீகளுக்கும் யான் ஊழியஞ்செய்யவா என்னைவரச்சொல்கிறீர் போதும் போதும் நீர்வந்தவழியேபோம்இராஜனே,

இராஜன் தரு-அடதாளம்-இராகம்-சுருட்டி.

பல்லவி.

எதுக்கு அஞ்சுறாய்பெண்ணே-அடி
என்வார்த்தைகேளடிகண்ணே

அநுபல்லவி.

சூதுசெய்தூர்த்தனாதுஷித்திருப்பேனோ
சூரியர்சந்திரர்சாட்சியாய்சொன்னதைமறப்பேனோ (எது)

சரணங்கள்,

அண்டம்யிடிந்தாலும் அலைகடல்பிறண்டாலும்
அரசர்பொய்சொல்வாரோ அவனியிலென்றாலும். (எது)

செய்நன்றிமறந்திட்டால் தெய்வம்பொருத்தாலும்
செகதலம்பொருக்காது நிருகுலன்சொன்னாலும் (எது)

பூமிதேவியாகாயவாணி சாட்சிபெண்ணே
சொன்னேன்சுருட்டிராகம்யிதுவே தாட்சி யெது

இராஜன்-விருத்தம்,

ஊழியஞ்செய்யமாதருந்தனுக்கனந்தம்பேர்கள்
தோழிகளிருக்கின்றார்கள் தோகையேயுன்னைவிட்டோர்
நாழியும்பிரியேனின்னம் நம்பிக்கையெதுகேட்டாலும்
ஆழியம்புவியாகாய மரியனுன்தருவேன்பெண்ணே,

வ-ம் கேளாய் அதிரூபலாவண்ணியமுள்ள மயிலே நீயொருவருக்கு ஊழியஞ் செய்யத்தகுமா ஆ ஆ-உனக்கு ஊழியஞ்செய்ய அனந்தம் மாங்கிகளிருக்கின்றார்கள் உன்னை விட்டு ஒருக்கணம்போதிலும் பிரிந்திருக்கமாட்டேன் யின்னம் நீயென்னை என்ன நம்பிக்கை கேட்டபோதிலும் தருவேன் பெண்ணே மண்ணும் அலைகடலும் அறியசித்தமாயிருக்கிறேன் பெண்ணே,

மோகினி-விருத்தம்.

வடிவினில்மிகுத்தமன்ன வார்த்தையொன்றுரைப்பேன்கேளாய்
இடைவிடாதென்னிடத்தில் யெப்போதுயிருப்பேனென்று
திடமுடனெனக்குச்சத்தியம் செய்துநீர்கொடுத்திருனல்
அடவுடநாகநாமும் அணைகுவோம்ஒருமையாக

வ-ம் அரசே யன்பரிதாபந்திறக இணங்குவதற்கு நான் கேழ்க்கிரதெல்லாங் கொடுக்கும்படி சத்தியஞ்செய்து கொடுக்கிறதினால் நாமசேரலாம் இராஜனே,

## இராஜன்-விருத்தம்.

இப்படிசொன்னவார்த்தைக் கெதிர்வார்த்தைபேசுவேனோ
செப்பியபடிக்கியானும் சீராய்செய்வேன்பெண்ணே!
தப்பென்றும்வாராது தன்னையுமேயழைத்துக்கொண்டு
இப்பமேசெல்வேன்பெண்ணே யென்னிடநகர்க்குத்தானே,

வ-ம் கேளும்பெண்ணே மோகினி நீசொன்ன பிரகாரம் நடக்கிறதுதான் நடக்கல சொல்வேனோவுன்மனதின்படியழைத்து போவேன் வாரும்பெண்ணே,

## மோகினிவிருத்தம்.

வருந்தியேமனதைத்தேற்றும் மன்னவர்க்காசேகேளாய்
பொருந்தியேயென்னைச்சேர்த்து புணர்ந்துபின்விட்டுவிட்டு
பருந்தியேகூவியூர்க்கு பண்புடனழைத்துபோயி
பிரித்துநீவைத்திருந்தால் பின்புநானென்னசெய்வேன்

வ-ம் கேளும்மகாராஜனே உன் அக்கரைப்பட்டிலே என்னைக்கூட்டிக்கொண்டு மறிவீடுகளுக்கு அழைத்துப்போய் என்னைத்தனியே வைத்து உன்னிஷ்ட ஸ்திரீகளுடனே கூடிவிளையாடிக்கொண்டிருந்தால் நானென்னசெய்வேன்மகாராஜனே.

## இராஜன்-விருத்தம்.

மண்ணுலகாளும்மன்னர் மாதுமோகினியேகேளாய்
விண்ணுலகிடிந்திட்டாலும் மேருவும்சாய்ந்திட்டாலும்
தண்ணுருமதியும்தெற்கு தானதுமுளைத்திட்டாலும்
வெண்ணிலாபுகழ்சேர்மன்னர் இரண்டுசொல்பேசிடாரே,

வ-ம் கேளும் என்னுடைசகுந்த திரிலோகம்புகழும் சுந்தரமே ஆகாசமிடிந்தாலும் மகம்மேருகிரி சாய்ந்தாலும் சூரியர் சந்திராதியர் வடக்கு தெற்காக முளைத்தாலும் மகாகீர்த்தியைக்கொண்ட ராஜாக்கள்சொன்ன மொழிதவிர்த்து இரண்டுவார்த்தை யாடார்கள் உன்னிஷ்டபிரகாரம் கேளும் பெண்ணே மோகினி.

## மோகினி-விருத்தம்.

தருவரமெனக்குவுண்மையேயிந்த சன்னெறிமுன்னெதிர்நில்லுஞ்
சக்கதம்புட்பசெக்கதாம்பூலம் தரிக்கவுமிருக்கவேரிலும்
பருவமங்கையர்மைத்தொருவர்கள் முகத்தைபார்க்கவொண்ணுதென்னை
யல்லும், பகலுமிரகசியம்புகலுமங்கைவசியம் பண்ணிகொண்டென்
னையேபுல்லும்,

இருவருங்கூடியிருப்பதல்லால் வென்னிகழ்வணியைப்பல்லாண்மேல்
லும், வெத்தவேவிணையிலைதத்தேந்த்தி வதையுமிருவேகேனங்கை
சசொல்லும். பருவருமாதவிவாயத்தில்வாருபவன்னில்லைவிலனாச்சன்

லல்வில்லும், மலர்க்கணையைந்துவிலக்கிபின்னையென்னை மருவிமன்மத னையும்வெல்லும்,

வ-ம் கேளும் என்மனதுக்கிசைந்த ருக்மாங்கதமகாராசனே நீயிப் போதெனக்கு நம்பிக்கைதருவது நிச்சயமாகின் கடவுள் சன்னதிக்கு முன்வந்து நின்று யென்னுடனும் சந்தனபுஷ்பதாம்பூலம் கதம்ப கஸ் தூரிமுதலாகிய பரிமள வஸ்துக்களை தரிக்கவும் நாமிருவரும்தனியே யிருக்கவேவோர் நிலவறையும் யிதர ஸ்ரீமுகத்தை பாருமனும் யென்னே ரம் யென்னை புணர்ந்திருப்ப தன்றியும் யெனது அதரத்தையுமதுதந் தங்களிறு லுரிந்தி யானஞ்செய்யவும் யெந்தவேளை எதைக்கேட்ட போதிலும் தடையன்றி யுதவவும் நிங்கள் முடிவுகாலங்களிலுண்டா கும் மார விடாயத்தில் மனமகிழும்படி மரிவி சுகிக்கவும் சம்மதியா யின்னம் மண்ணும்விண்ணும் சந்திர சூரியாளரிய பரவசஞ்செய்து அசோக தொன்றுங் குருக்கத்தின் கிழவில்சென்று என்னைச்சேர்ந்து உமது காதலை தீர்த்துக்கொள்ளும் வொப்பொருவரில்லா கற்பகம் போன்ற அரசுக்கரசே,

இராசன்-கந்தார்த்தம்- அடதாளம்.

காருர்குழல்மயிலே-மிக நீருமையல்தீரவேயருள்புரி
பேருருடல்மெலிவாகுது பாருயிதுவேளையில்மோகினி

பாவையேவாடி கனிவாயிதழ் கோவையேதாடி
தேனர்சாக்ஷியாக மூவரறியச்சொன்னேன்
மேவியெனையணைய நவியமாகவே பாவை

மோகினி-கந்தார்த்தம்-அடதாளம்.

வண்டார்திருமலர்வனமதி கண்டேயறியாதவளாகினுங் கரிநினைப்ப
கொண்டேன்மையல்மிகமீருது திண்டோள்புயசலஜெய்யார(படியே

தீரனேவாறும் யெனதுவுபகாரனேவாறும்
வீரர்கொண்டதிறை ஆரைகொண்டரண பேரிகொண்டஜெய
பேறுயென்றுபெல தீரனே

இராஜன்-விருத்தம்,

ஆவலுடனெந்தனைப்பெத்தெடுத்ததந்தை அன்னையுமுன்செய்த பெருபுண்ணியத்தாலே, கானகத்தில்வேட்டைக்காய்வரும்போதெந் தன் கண்டசகுனப்பலனேகவலைதீர்ந்தேன், மேவியநல்மிருகமதை ஜெயித்துயிப்போ விடைதீர்க்கவந்திடத்தில்மேன்மையான, கவுருயி லோசைசயெனமொழியுமென்ற கோதையுடன்விளையாடிக்கொஞ்சப் பெற்றேன்,

மோகினி-விருத்தம்.

வேறுபேதகம்நினைக்கேதயாளுவென்று விகடங்கள்பேசினபெண் புத்தியாலே, கூரினதும்தெரிந்தும்தெரியாதுமுன்செய் குற்றமுமீ

பொருத்தெனையாள்கொள்விளையா, தேருகலையடியாளைகாத்தேயு ந்தன் சித்தமுலைவத்தெதத்தனையும்பத்தியாக, நாமூவதுபோகயாதி ருக்கி சாடிவினையாடிகவிகூறுவாயே,

## இராஜன்-கலிப்பா.

மட்டடங்காசெம்பொன் மணியிலகுமாவனத்தில்
கட்டடங்காவிம்முமுலைக் காமக்கருங்குயிலே
இட்டமாங்காசேணைவிஜய கிரிஜைநன்னகர்க்கு
பொட்டடங்காபானுதவிர் போகவும்நீவருவாயே,

வ-ம் கேளும் என்மனோரஞ்சிதமான காமக்கருக்குயிலே நான்வந் தயிடத்தில் என்னெண்ணப்பிரகாரம் துணையாய்கூடிவந்தது ஆகை யால் சீக்கிரமாய் கிரிஜைக்கி போகலாம் வாரும்பெண்ணேமோகினி,

## பொது-விருத்தம்,

வனத்தினில்வேட்டையாட வலியவில்லம்புகொண்டு
கனத்ததோர்மிருகந்தன்னைக் கண்டித்துவாரோமென்று
யினத்துடன்போனராஜன் யின்னமேன்வாரவேயென்ன
நினைத்துசந்தியாவளியும் நித்திரைவருமென்றுளே,

வ-ம் அகோ தெப்படியென்றால் யிந்தப்பிரகாரமாக ருக்மாங்கதம காராஜன் காட்டிலேகண்டு மோகித்த மோகினியை கிரிஜாபுரிக்கி அ ழைத்துக்கொண்டு வருகிறதருணத்தில் இராஜன் தேவியாகிய சந்தி யாவெளி வேட்டையாடப் போனஇராசன் ஏன் இன்னம்வரவில்லை யென்று எண்ணமிட்டுக்கொண்டு சத்தேநித்திரை வருகுதென்று சகி களுடன் சொல்லுகிறவிதங்காண்க.

## சந்தியாவெளி நித்திரைபோகிற-தரு-அடதாளம்-மட்டியம்

## இ-ம்-சங்கராபரணம்-பல்லவி,

நித்திரைவருது நேத்தியதாக யின்னோவேளைதனிலே
ரெண்டுநேத்திரமூடி நெடுநேரமாக நீநிலந்தனிலே
கிண்ணிருந்தாலடி கண்ணுறங்குதடி
என்னுமிந்தவண்ணமாய் கண்ணுறங்கினதுமில்லை (நித்தி)

## அநுபல்லவி.

இத்தினமென்தன் சத்திலுந்தோழிகள்யிருந்துபொன்னுஞ்சத்திலே
பெத்திஎன்னைவத்திலாவியும்பாடிட யெனக்குமேகொஞ்சத்திலே
நித்திரைவருதம்மா சத்தாகிலுஞ்சும்மா
யித்தினங்கண் பத்துனள்விழித்திருந்ததுபோல் நித்தி

## சரணங்கள்.

பஞ்சணைமெத்தையலங்கரித்தாலழகாய் பவனித்திருந்தாலுமே
கொஞ்சத்தில்நித்திரைவாராதின்றைக்கி கோலமென்னுகாலமே

கொஞ்சகுயிலோசை கிளிமொழியெனதாசை
வஞ்சிபனையென்சொல்கேள் வூஞ்சலில்லைத்தாட்டடினி தித்தி

அக்கினைகமரியார்க ளெண்பாரந்த சொல்லும்பழுதாயே-இதை
போக்கிடநாக்கம்பக்கம் நன்றாய் தூங்கபோகாமலே பேர்மோ
சீக்கிரமதாக தோழியெனக்காக
ஆக்குமஞ்சம்பாங்காகவே சிங்காரித்துவாங்கடி தித்தி

சத்தியாவொளி-நிதிரை,

அற்புதமான அழகிளந்தோழிகேள்
சப்ரமஞ்சத்தில் சயனித்திருக்க
சொற்பனத்திலெந்தன் துரைசிரோன்மணியும்
பொற்பரிக்காமைபோய் வேட்டையாடி
கற்பகபூங்காவனத்திலோர்கன்னி
நிற்பதைகண்டு ஒளிதவிர்க்கவென்ன
சொற்படிகேளென்று தோகையாளுடனே
நற்படிபேசி நாணமில்லாமல்
மனமதுமகிழ்ந்து மருவிருவருமாய்
வனத்திலிருந்த வனிதையையழைத்து
சனமுடன்னகர்வந்து களிகூர்ந்திருக்க
கினவுநான்கண்டேன் காரணமேதோ
நினைவுமிப்படியும் நேரிடுமோதான்
கனபிருபடைத்திந்த காசினிமுழுதும்
இனமுடனாளும் ஸ்ரீராஜவல்லபனும்
மனந்துணிந்தெப்படிவ் வாறுசெய்வாரோ
மனக்குறிப்புரைக்கும் மங்கையேநன்றாய்
யெனக்குனிசொல்வாய் யினிதுடன்தானே

சத்தியாவொளி-தரு-அடதாளம்-சங்கராபரணம்.

கண்ணிகள்.

கண்டேனான் கினவுகண்டேன் கிளையெல்லாங்கண்டேனிந்த
கண்டகினாகருத்தெரிந்துரைப்பாய்ல காரணமேதோ
களிக்குமோகீ கண்டறிந்துரைப்பாயே கண்

கண்டேனெந்தன் கணவனாரும்காட்டில்வேட்டைபோனிடத்திலோர்
பெண்டைக்கண்டுமோகித்திங்கையும் கொண்டுவரவே கண்

கொண்டுவந்தபெண்டையெந்தன் அண்டையிலழைத்துமன்னன்
பண்டுநான்செய்திட்ட பாவமோபலித்ததென்றார் கண்

பண்டுநான்செய்தபாவமோ கொண்டுவந்தபெண்டுமீதில்
சண்டையெந்தன்மீதில் நீ-போடவேண்டாமெனவே கண்

சண்டைக்கிடப்வைக்கவேண்டாம் விண்டுனின்செயலென்றெண்ணி
தெண்டிக்கனிவேண்டாமெனவே அண்டையில்வரக் கண்

பொங்கமிகுபுல்லைநகர் சங்கரனுரீன்றெடுத்த தங்கவேல்குருபரேசனை நாடினேன், கிருபைசெய்வாயென்று சங்கருபரனைப்பாடினேன் அம்

தோழி-தரு-மட்டியம்,

ஆரண்யத்தில்சகியைக்கண்டு அகிலநாயகர்
அழைத்துவருவதுமுண்டோ அரசனவர்
தாரணியையாளவர் தீசத்தியவந்தனும்
சகியையவழைத்துவருவதுண்டோ தர்மசுந்தனும்

கண்டக்கிருபலிக்குமென்று கலங்கலாகுமோ
கனவினிற்கண்டெடுத்தபணங்கட்டுக்காகுமோ
விண்டுவின்செய லல்லாமல்வேறேவருமா
விதியுமப்படியிருந்தால் விட்டுப்போகுமோ

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் கிரிஜாபுரிபட்டணத்தில் உருக்குமாங்கதமகாராஜன் தேவியாகிய சந்தியாவொளி யம்மன் வேட்டைக்குப்போன மகாராசன் வீடு இதுவரைக்கும்வந்து சேரவில்லையேயென்று தோழியுடன்சொல்லி புலம்பிக்கொண்டிருக்கும்போது அவ்வுருக்குமாங்கதமகாராசன் கிரிஜாபுரிக்குப்போக மோகினியை அழைக்கிறவிதம்மெப்படியென்றால்,

இராஜன்-தரு-ஆதிதாளம்-இராகம்-காம்போதி.

பல்லவி.

கண்ணேவாடிநடந்து-பெண்ணேவாடி நடந்து

அநுபல்லவி,

விண்ணிகமுதேநீயும் விளம்பினபடிக்கி கிரிஜைக்கி மாதே (கண்)

சரணங்கள்,

கஞ்சமலர்தாளசைய கானகில்வேர்வைகள்சிந்த
கடுகநடந்திட்டாலுங் களைத்திடுந்தேகம் மிகைத்திடுமானே (கண்)

தேங்கமுகுசோலைசூழும் திருகிரிஜைதனிலடி
செந்திருவானபெண்ணே சேர்ந்துமேநீயுமென்னுடன்கூட கண்

கொஞ்சங்கிளிமொழியே குயிலேபேடையனமே
கோவைக்கனியிதழ் கூடவேகாம்போதிருகப்பாடவே கண்

பொது-விருத்தம்,

இவ்வதுகண்டசந்தியா வொளியேதியங்கிமெத்த
மனமதுமெலிந்துதோழி மாருடன்புலம்பும்போது
வனமதுபோயிருந்த மன்னன்றுக்மாங்கராஜன்
வனிதைமோகினியைக்கொண்டு வந்தனைப்போதானே

வ-ம் அகோ கெப்படி யென்றால் யிந்தப் பிரகாரமாக சந்தியாவொ
ளியம்மன் நித்திரைசெய்து கனவுகண்டு வேட்டைக்கி போனராஜன்
இன்னம்வரவில்லையென்று யிருக்கும்போது ருக்மாங்கத மகாராசன்
மோகினியை யழைத்துக்கொண்டுவந்து மந்திரிகளுடன் சொல்கிற
விதம்,

இராஜன்-விருத்தம்,

வடிவினில்மிகுந்தமந்திரி மார்களேசொல்லக்கேளாய்
அடவியில்வேட்டையாடி அதிவேகமாகத்தானே
திடத்தொடுவந்தபேர்க்கு திருத்தியாயன்னவஸ்திரம்
அடவுடன்கொடுத்துநீரும் அனுப்பிடும்சேனைத்தானே

வ-ம் கேளுமப்பா மந்திரி நம்முடன்கூட வனத்தில் வேட்டையா
டின வேடர்வில்லியருக்கு திருப்தியாய் போஜனதாம்பூலமீந்து வஸ்
திராபரணம் தகுதியாய்கொடுத்து அனுப்புமப்பா,

மந்திரி-வசனம்.

அப்படியே செய்து அனுப்புகிறேன் மகாராசனே,

பொது-விருத்தம்,

கிரிஜைமானகரம்வந்து கிளிமொழியாளோடரசன்
ஆரண்மனைவாசல்விட்டு அன்புடன்மாலையிட்ட
தெரிவையையோடேதுணைப்பான் தேவியேயுந்தனுக்கு
வரும்விதிப்பயனால்வந்த வாறென்னசொல்வேனென்றான்

வ-ம் அகோ கெப்படியென்றால் காட்டில் கலந்தணைத்த மோகினி
யை ஆரண்மனைவாசலிலே விட்டு ராஜன் தன்தேவி சந்தியாவளியுடன்
சொல்கிற விதம்.

இராஜன்-விருத்தம்.

வனத்தினில்வேட்டையாடி வருகின்றபோதில்பெண்ணே
புனத்தினில்நீரையுண்டேன் பொற்பரிகாமல்நின்று
வனிதையைக்கண்டியானும் மையல்கொண்டணைந்தேன்பின்பு
இனிதுடன்வந்தன்பின்னே யேகினளென்னசெய்வேன்.

வ-ம் கேளும் என்பிராணபதமான பெண்ணே சந்தியாவளி வனத்
தினில் வேட்டையாடி அங்கே ஒருதடாகமிருக்க அதில் விடாதீர தா
கசாந்திசெய்து வருகிற தருணத்தில் மலையினடிவாரத்தில் நந்தவன
த்தில் ஒருஸ்திரீயிருக்க அவள்பேரில்காண்வலியா மோகித்து சேர்ந்
து அணைத்தபின்பு யென்னைவிடேனென்று யென்பின் தொடர்ந்தாள்
தான்யென்னசெய்வேன் பெண்ணே சந்தியாவளி.

சந்தியாவளிவிருத்தம்.

இத்தவாறுகந்தானே யென்னிடக்கிளவிக்கண்ட
தந்திரமெல்லாமிப்போ சரியாகமுடிந்ததேபோச்சி

முந்திஜூழ்வினையோன்செய்த மோசமோ அரிகிலேனே
சிந்தையுமயங்குதென்ன செய்குவேன்தெய்வகுதோ

வ-ம் கேளும் என்பிராணநாதா நீர்வனவேட்டைக்கி போனபிற்பாடு அடியாள் இவ்வாறாக சொற்பனங்கண்டது பழுதாகாமல் அவ்வாறே முடிந்தது இதுமுன் செய்த வினையோ அல்லது தெய்வச்செயலோ நானென்னசெய்வேன் தெய்வமே.

இராஜன்-விருத்தம்.

பெண்ணினாமணியேயித்திர பேதமோயெவர்செய்குதே
என்னுமென்கருத்திளைந்து யிந்தமோகினியைத்தானே
கண்ணினாற்கண்டபோதே காமமேலிட்டுசேர்ந்தேன்
புண்ணியபாவமென்று பொருள்தெரியகிலேனே.

வ-ம் கேளும் என்பிராணபதமான பெண்ணே சந்தியாவளிநாவித்தமோகினியைக்கண்ட மாத்திரத்தில் கெடுமதிகண்ணுக்குதோற்றுதென்று சொல்லார்கள் அப்படிபோலே காமமேலிட்டு நானே பலாத்காரமாய் சேர்ந்து விட்டேன் அந்தவேளையில் இதுபுண்ணியம்பாவமென்று பார்க்காமல் இப்படிப்பட்டதிங்குவரும்படியாய் செய்ததுயார்செய்த சதியோ நானென்ன செய்வேன் பெண்ணே.

சந்தியாவளி-தரு-ஆதிதாளம்-கண்ணிகள்.

நாதனேயென்னசொல்வேன்-யிவளை
நானெப்படி வெல்லுவேன்
ஆதாரவேரில்லையே-யிந்த
அரசாளபாரில்லையே (பிரா)
பெண்டில்லாதவர்போலே வேறோர்
பெண்கொண்டுவந்ததாலே (பிரா)
கண்டோர்நகைபார்களோ-யிதுநல்ல
காரியமென்பார்களோ (பிரா)
தக்காளிவள்நமக்கு-ஐயோ
சதிசெய்குவாளுமக்கு (பிரா)

சந்தியாவளி-விருத்தம்,

படியோருக்குடையிறைவனும் பார்த்திபாசொல்லக்கேளாய்
முடியுமாவிதிதடுக்க மூவரில்யார்தடுத்தார்
அடியவள்முன்செய்பாக்கியம் அநுபவித்திருக்கவேணும்
வடிவுள்ளமாதெசேர்ந்து மகிழ்ச்சியாய்வாழ்ந்திருப்பீர்

வ-ம் கேளும் பிராணநாதா விதிப்பயனைத் தடுக்கயாராலேமுடியும் மும்மூர்த்திகளாலேயுமுடியாது ஆகையால் அடியாள் பூர்வஞ்செய்த பூஜாபலமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் நீர்இவ்வசலைக்கமாதுஅவளுடன்சுகித்திரும்பிராணநாதா.

இராஜன் விருத்தம்,

மதியதாகலங்கியெந்தன் மையல்தந்தனைத்தபின்பு
சதிநடன்யெந்தன்கூட சரசமாய்வந்துவிட்டாள்
பதியினைவிட்டுமெய்பு பாவையும்போகேனென்றாள்
விதியிதற்கென்னசெய்வேன் விளம்புவாயெந்தன்கண்ணே

வ-ம் கேளும் எனதுபத்தினியாகிய சந்தியாவொளி அந்த மோகினியானவள் ஆரணியத்தில்இருந்தான்னுடன்கூடசரசமாய்பேசிகொண்டு வந்துவிட்டாள் நம்முடையஅரண்மனையைவிட்டு போகேனென்றாள்நாமென்னசெய்வேன்சந்தியாவொளி.

சந்தியாவொளி-விருத்தம்.

என்செய்வேனென்றுசொன்னாய் யெழில்பெருமன்னனேகேளாய்
பின்னிதையாரேச்சேரா மன்செய்தவினையெயல்லால்
அன்னிதஞ்செய்யவேண்டாம் அவள்பாவம்நம்மைச்சாரும்
சொன்னசொல்தவிர்த்திடாமல் சுகமுடன்வாழ்ந்திருப்பீர்

வ-ம் கேளும் என்பிராணநாதா முன்னாலே நாம்செய்த பூஜாபலத்தால் இப்பேர்ப்பட்ட காரணமவந்தது ஆகிலும் பெரிதல்ல பெண்பாவம் பொல்லாது சிலகாலம் அவளுடன் சேர்ந்திரும் சுவாமி.

இராஜன்-விருத்தம்.

அப்படிசெய்வாய்பெண்ணே அருமையுன்மைந்தனுக்கு
இப்பவேமகுடஞ்சூட்டி யிவ்வுலகாளச்செய்வேன்
தப்பேதுவருகாதுந்தன் தனையனுக்கினிதுசொல்லி
செப்பமாயரசயாண்டு சிரஞ்சீவியாகவாழ்வாய்

வ-ம் கேளும் பெண்ணே சந்தியாவளி உன்னிஷ்டபிரகாரம் மோகினிக்கு சொன்னச்சொல் தவிறாமல் அவளிடத்தில் நானிருக்கிறேன் நம்முடைய குமாரன் தருமாங்கதனுக்கு பட்டாபிஷேகஞ் செய்து செங்கோலாளச்சொல்லி வாழ்ந்திருக்கும்படியாய் யிப்பவே மகுடஞ்சூட்டுவேன் பெண்ணே,

சந்தியாவளி-விருத்தம்,

மன்னன்மெச்சினதோர்பெண்டு மாரம்பையென்றுசொல்லும்
அன்னிதமானவார்த்தை வுலகில்கேட்டிருப்பாயந்த
கன்னிதீபோலேயிப்போ நங்கைமேயெங்களுக்கு
அன்ன வஸ்திரமுமீந்து ஆதரிப்பதுவுன்பாரம்.

வ-ம் வாராய் மோகினி உலகில் ராஜன் மெச்சின ஸ்திரீயே ரம்பையென்றுசொல்லும் ஜெனவாக்கியம் பொய்யோ நீஅரண்மனைக்குள்ளிருந்து ஓர் ஆசனத்திலிருந்து அரசாட்சிசெய்து எங்களுக்கு வேண்டிய அன்னவஸ்திரங் கொடுத்து ஆதரிப்பது உன்பாரம் மோகினி.

மோகினி-விருத்தம்-தோடி.

சதமாதவெனச்சூழ்ந்தார்கைகூட் சந்திரநிகர்சுந்திர
மிருந்தாயெறுக்மாங்
கதருஜனும் நீயுங்கலந்தின்றளாய்கண்டசுகங்
கொண்டவள் மோகினிநானந்த
விதமாதவர்க்கண்முன் சொன்னவிதிகாந்தருவ
விவாகமென்றவருடன் கைவிடேனென்றின்னம்
விதமாகாவுந்தெய்வசன்னதிமுன்னின்றுநிதஞ்
சொன்னாரெனக்குபறவசஞ்சொன்னாரே.

வ-ம் அறு ஸ்திரிகளுடன்நட்சத்திரகூட்டங்களுடன் பிரகாசிக்குஞ்சந்திரனைப்போலஅழகியசந்தியாவளியென்னுந் தாயேநீங்களிதுவரைக்கும்ருக்மாங்கதமகாராஜனுடன் மருவியனுபவித்திருந்தயின்பசுகசம்போகத்தை இரசித்துக்கொண்டுவந்த நான்மந்திரகிரி சாரலிலே தெய்வதிருப்பணிசெய்துக்கொண்டிருக்க என்னைக்கண்டுமோகித்துஅச்சன்னதிமுன்னே நின்று சந்திராதித்தர்களறிய சொன்னதென்னவென்றால் நானிதுமுதல் ஒருபோதும் விட்டுப்பிரியாமல் இருந்து யின்பசுக சம்போகம் தருகிறேனென்று பிரமாண பூர்வகமாய் என்னைத்தொட்டு காந்தருவிவாகஞ்செய்துக்கொண்டுவந்தார் இதுதான் யென்வரலாறு நீங்களனைவரும் உங்கள் எசமான் சொன்ன பிரகாரம் பரவசம் காப்பாற்றுகிறது உங்கள் பாரமம்மா அக்கச்சிமாரே.

சந்தியாவெளி-விருத்தம்.

பரவசமரியாதித்தர் பார்வின்னுமரியனுங்கள்
பரவசமதியாய்சொன்ன பார்த்திபனையுங்கையில்
வரவசப்படிக்கிக்கொண்டு வந்தயுந்தனுக்குகந்த
வரவசமதியால்வந்த வாழ்வெல்லாமுனதேயம்மா.

வ-ம் கேளுமம்மா மோகினி சந்திராதித்தர் பூமியாகாயம் அறியும்படிக்கி காந்தருவிவாகஞ் செய்து வுன்னை கைவிடேனென்று பிரமாணிக்கஞ்சொல்லி யழைத்துவந்து நாங்கள் யாவத்தூராளும் வுமக்கு வுபசாரம்பண்ணும்படி செய்த மகாராஜனையே நீகைவசப்படுத்திக்கொண்டதனங்களுக்குமிகவும்சந்தோஷம் யினியிந்தவாழ்வெல்லாம் உனக்கேயல்லாமல் வேரில்லையம்மா.

இராஜன்-மோகினிக்கி-அரண்மனைகட்டின-பொது-திபிதை,

மைம்பல்நடைமோகினி
பயனுனஅக்கிர

மாதுக்குமன்னன்
புரமொன்றுமகிழ்வாய்

நவரத்னசெம்பினால் — ஞானையமாக
செவ்வையாகசோடித்து — திவ்வியமான
மாணிக்கதூலங்கள் — மறகதத்தாலும்
தூணுகள்கிரித்தி — துலக்கமதாக
பவழத்தால்வடிப்புகள் — பாங்காயமைத்தி
நவமானவவிச்சனு — ஞானையமாக
பச்சைசக்கல்ராவைமேலே — பலகையாமூடி
வுச்சிதவளமொன்று — வும்பர்கொண்டாட
கொஞ்சியேயிருவரும் — குலாவியேயிருக்க
பஞ்சணைமெத்தைதயும் — பளிச்சென்றுமினிய
திண்டுடன்தலைகாணி — சேர்த்திருவருமாய்
கொண்டாடிருக்க — கூடியேவாழ்க
குத்துவிளக்குகள் — கோடிகளாக
முத்துசரங்கள் — மூகமல்பட்டாடை
அத்தர்பன்னிருடன் — அழகாய்தெளித்து
எத்திசைபுகழ — வெழில்பெரதாக
சாமந்திமல்லிகை — ஜாதிபுஷ்ப்பங்கள்
நேமந்தருந்துளவ — நீலோர்பலமுடனே
கொன்னைமந்தாரையும் — குரிவேருமூல்லை
நன்றாகசாத்தியே — நாருமல்லிகையும்
அமத்தியேயிப்படி — அழகாகவேதான்
தமதுளமகிழ்வாய் — தையல்மோகினிக்கி
இரவினும்பகலினும் — யெத்தவேளையினும்
மருவியேயிருக்க — வளமமத்தினனே

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக உருக்குமாங்கதமகாராசன் மோகினிக்கி பொன்மயமான சிங்காரமாளிகை கட்டிவைத்து அதி லிருக்கும்படியாய் மோகினியை அழைக்கிரவிதம் யெப்படியென்றால்,

இராஜன்—கலிப்பா.

கொஞ்சும்பசுங்கிளியே குயில்மொழியேகுந்தளமே
இஞ்சொல்யிளங்கொடியே யென் னுடையகண்மணியே
பஞ்சடிகள்நோகாமல் பாங்குடன் பொன்மாளிகைக்கு
வஞ்சியரைமெள்ளநன்றாய் வருவாய்னிஷயிலாக

வ-ம் வாறும் என்காமக்கனிதீர்த்த கண்மணியே திரிலோக சந்திரமே யிந்தசிங்காரமாளிகை படிக்கைக்குப்போய் தாதிமார்களுடன் வி

ஐயாடியீரும் நான்போய் என்மகன் தருமாங்கதனுக்கு அரசாளும்படி பட்டாபிஷேகஞ்செய்து அப்பால் வன்னிஷ்டபிரகாரம் நடக்கிறேன் பெண்மயிலே.

மோகினி-வசனம்,

அப்படியே போய் சீக்கிரமாய் வாரும் பிராணநாதா

இராஜன்-விருத்தம்,

வீரனாம்புலிபோல்சீறும் விதூஷகாசொல்லக்கேளும்
தாரணிதன்னையாள தருமாங்கதனிபட்டம்
நேருடன்சூட்டவேணும் நிமிஷத்தில்நீபோய்த்தி
பார்த்துபஞ்சாங்கஞ்சொல்லும் பட்டரையழைத்துவாராய்,

வ-ம் வீரும்பிள்ளாய் விதூஷகா என்குமாரன் தருமாங்கதனுக்கு இளவரசு பட்டங் கட்டவேணும் பஞ்சாங்கபட்டரை அழைத்துவாரும்.

கட்டியன்-வ-ம்-அப்படியே அழைத்துவாரேன் சுவாமி.

கட்டியன்-விருத்தம்.

சாஸ்திரவிதிகளெல்லாம் தழைத்திட விளங்கச்செய்யும்
சூஸ்திரதாரியென்று சொல்லிடபுவியிலென்றும்
ஆஸ்தியும்படைத்தநல்ல அரசாளும்மன்னவனுக்கு
வாஸ்துவமாகசாஸ்திரம் வழங்கிடபத்தர்வந்தார்

பஞ்சாங்கபட்டர்வருகிற-தரு-ஆதி-பல்லவி.

பஞ்சாங்கையர்வந்தார்-புரோகிதஞ்சொல்
பஞ்சாங்கையர்வந்தார்

அநுபல்லவி.

நெஞ்சில்நினைத்ததெல்லாம் நிமிஷத்திலேசிறக்க
சஞ்சலமகற்றிட சாஸ்திரங்களுரைக்க — பஞ்சா

சரணங்கள்.

தேடித்தெருக்கள்நன்றாய் திதிகள்செய்யுங்காரியம்
விடுகளெங்கையென்று கூவிகூவித்திரியும் — பஞ்சா

காசுகொடுக்குமிடம் காதமானாலுஞ்சென்றே
வீசிநடந்துமெள்ள பேசிடுவோமென்றே — பஞ்சா

தமைபன்வீட்டினில் தலைதெவஷமானாலுங்காசி
நமக்குங்கொடுப்பானென்று நடப்பானவன்கைவீசி — பஞ்சா

கட்டியன்-விருத்தம்.

மறையவர்குலத்துதித்த வையரேபோற்றிபோற்றி
நறைபொருளுடையிலாரும் சமைத்துளருக்மாங்கராஜன்
ஒருநெறிதனிலேசாஸ்திரம் மோதிமெய்சாஸ்திரமேந்தி
திரமுடன்வரவேசொன்னார் சீக்கிரமாய்வருகுவீரே

வ-ம்-உருக்குமாங்கதராஜர வரச்சொன்னார்வாருஞ்சுவாமி

இராஜன்-விருத்தம்.

ஒப்பேதுமில்லாவேத வுசிதவந்தணரேபோற்றி
முப்போதும்ஸ்தானம்சந்தி முடித்துயர்ந்தோரைபோற்றி
தப்பாதுமணதில்ஞான தகையுடையோரேபோற்றி
யெப்போதுவருவீரென்று யெதிர்பார்த்திருந்தேன்போற்றி

வ-ம்-திரிகாலங்களும் ஸ்நானம் ஜெபதபம் முதலாகியதும் ஏகாதி இறுதுகள் சகலவேதசாஸ்திரபண்டிதரே தெண்டையயா சுவாமி,

பஞ்சாங்கபட்டர்-விருத்தம்.

மஹாராசராச மகிபதிஆசீர்வாதம்
சுகாபத்தியங்களோங்கும் நாயனேஆசீர்வாதம்
திகாதவற்கடங்கா சார்தூலஆசீர்வாதம்
சகாயநற்புருஷாயோங்கும் தார்வேந்தர்ஆசீர்வாதம்

வ-ம் ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அனேகமங்களவுசிதலங்கிருதசபா பிரசங்க துங்கசாரங்க அகளங்க ராஜராஜ மகாராசனே ஆசீர்வாதம் சுபமஸ்து நம்மை அழைப்பித்த காரியம் தெரியச்சொல்லுராசனே.

இராசன்-விருத்தம்,

சாஸ்திரியாரேவாரும் சரணமுனக்களுக்கு
கோத்திரம்தழைக்கவந்த குமாரனுக்கினிதாய்பட்டம்
நேத்தியதாகசூட்ட னேருடனொருநாள்நன்றாய்
பார்த்தினிர்பழுதில்லாமல் பாங்குடன்சொல்லுவீரே

வ-ம் வாருஞ்சுவாமி புரோகிதரே யென்குல புத்திரசிகாமணிக்கி தருமாங்கதனுக்கு பட்டாபிசேகஞ்செய்யவேணும் அதற்குநல்லநாள்பார்த்து சொல்லுஞ்சுவாமி,

புரோகிதர்விருத்தம்,

வென்றிகொள்ளரசர்போற்றும் வீரனேமிகவுங்கேளீர்
நன்றதுசோமவாரம் நர்த்திருறுசிசிங்கம்
வென்றியயாசன்தாராம் ஒன்பதாஞ்சமெட்டில்
யின்னொருதோஷமில்லை யெழில்முடிசூட்டலாமே

வ-ம்-கேளும் உருக்குமாங்கதமகாராசனே வைகாசிமீ" ௭௨ சோமவாரம் திரயோதசி நாழிகை ௨௯வஹு மகநட்சத்திரம் ௧௰நாழி சுபயோகம் ௨அதெஹு கவுலவாகரணம் ௨௯ஹு பகல் ௧௰நாழிகைக்குமேல் தியாச்சியம் ராவுகாலம் பூச்சியம் லக்கிணத்தில்சுக்ரன் நிற்கிறான் ஏழாமிடத்தில் குருநிற்க ஒன்பதாமிடத்தில்புதனிப்படி சுபகிரகங்கள்நிற்க பாபகிரகங்களாகிய இராகு கேது சனி செவ்வாயிவர்கள் மூன்றாமிடத்தில் பாபகிரகங்கணிற்க இப்படி பகை நீச்சமில்லாமல் உச்சத்தில்நிற்க எட்டாமிடம் சுத்தமாயிருக்க இச்சுபதினத்தில்வுதித்த ௧௰-நாழிகைக்குமேல் கடகலக்கிணத்தில் பட்டாபிஷேகத்திற்கு நாள்பார்த்திருக்கிறேன் இனிநடக்கவேண்டிய காரியங்களுக்கு சாமக்கிரிகைகள் சேர்த்துக் கொள்ளுங்கள்மகுடஞ்சூட்டலாம்மகாராசனே.

இராஜன்-விருத்தம்,

வரும்விதிபயனுரைக்கும் வாகுள்ளமந்திரிகேளாய்
தருமாங்கதர்க்குபட்டம் தரித்திடசாஸ்திரனா
மறையவர்சொன்னாளில் மகுடமுந்தரிக்கவேணும்
துரையினில்நீபோயெந்தன் சுதன்தனையழைத்துவாராய்

வசனம்.

வாருமப்பா மந்திரி நம்முடைய சாஸ்திரியார் சொன்னாளிலே தருமாங்கதருக்கு பட்டங்கட்டவேணும் ஆகையால் தருமாங்கதரை அழைப்பியுமந்திரி.

(மந்திரி-விருத்தம்.)

பட்டுடைபிடையிர்சாத்தி பரிவுடன்வாசல்காக்கும்
கட்டியக்காரராயிந்த கனத்திலில்நீபோய்ராஜன்
சட்டமாயின்றெடுத்த தருமாங்கதனையிப்போதே
பொட்டனையழைத்துக்கொண்டு புகழ்பெறவாச்செய்வாயே

வ-ம் வாரும் கட்டியக்காரா நமது ராஜன் குமாரனாகிய தருமாங்கதனை அழைத்துவாரும் கட்டியக்காரா

(கட்டியன்-விருத்தம்)

கனாபிறண்டோங்குங்கீர்த்தி கதிர்குலத்தினிலேவந்த
தருமாங்கராஜாவுன்னை தழைத்திடுங்கோலினுக்கு
அருமையாயுன்னைபெற்ற அன்னாலுவரவேசொன்னார்
திருகொண்டுஞ்சொல்லாமல் சூணத்தினில்வாருமப்பா

வ-ம் சரணம்சரணம் தருமாங்கதமகாராஜனே யுங்கள்தகப்பன் வுருக்குமாங்கதமகாராஜாவுன்னை கொலுவுக்கு வரச்சொன்னார்வாரும் தருமாங்கத மகாராஜனே"

(பொது-வசனம்.)

அகோ தெப்படி யென்றால் தருமாங்கத மகாராஜன்தகப்பனிடத்துக்கு வருகுரவிதங்காண்க.

தருமாங்கதன் கிபிதை-இராகம்-ஆறபி.

சிங்காரமாகவே செங்கதிர்குலத்தில்
பொங்கேருகதிரவன் போலவுமெழிலாய்
தறணிபாள்வுருக்குமாங்கன் தனையன்தருமாங்கன்
மூாஅரிதனைப்போற்றி முகவிலேசிதமாய்
திருமணிநுதலினில் திஷ்ட்டிபொட்டிட்டு
பரியனாருசவலாது பாங்குடனணிந்து
காதினிர்க்குண்டலங் கனக்கவேமாட்டி
ஒருகர்க்கரிதான வுயர்ந்தகல்முருகும்
வச்சிரமுத்தியு மணிமாலேயிட்டு
பச்சையில்மிருத்த பவுத்திரமுடனே
பாஜிபந்துகாப்பு பரிவுடன்தரித்து
விசும்வாசனைகெந்தம் மேனியில்பூசி
அறணநயருமே அழகதாய்பூட்டி
சரணத்திர்தண்டை சதங்கைகலகலன்ன
தட்டிசல்லடமுடன் செரிவியேபாங்கு
மெட்டிட்டுகாலுக்கு வேடிக்கையாக
சரிகைவஸ்த்திரமுமே தானுமேதரித்து
சிதசில்பொன்னுநமாலே திரித்தியேகட்டி
ரவைசல்லாசுங்கிட்டு ஞணயமாக
சேவையக்கைதனில் சிகப்புருமாலே
அழகதாய்கொண்டு அகிலத்தோற்போற்றும்
பழுதில்லாமல்தனை பத்திபாநினைத்து
மந்திரிமார்மைத்தரும் வாகுடன்கூட
சந்தோஷமாகவே சறசமாய்பேசி
அருமையாலாத்தி அன்புடனேந்த
பெருமையாய்தர்மைதமுன் பிரியமாய்வந்தான்



தருமாங்கதமகாராஜன்,

தருமாங்கதமகாராசன்-வருகிற-தரு-ஆதிதாளம்-இ-ம்-சுருட்டி,

பல்லவி.

ராஜசுதனுமேசபையினிலேதோவந்தான்
தருமாங்கதனென்னு மகாராஜசுதனுமேசபையினிலேதோவந்தான்

அநுபல்லவி.

கேசுலாமன்னன்நேசமாகவே மாசில்லமகாராஜனுடன்
விசுவாசமாகவேஆசையாகவே பேசியேசந்தோஷமாகவே (ரச)

சரணங்கள்.

தண்டைசதங்கைகள் தாளிக்கலிலெனவே-மார்பில்மகர
கண்டிமாலையும் ஒளியுமளிலெனவே-ஒளிபொலவே
கொண்டுகாதினில்குண்டலங்களும் பெண்டிசைவிலகொண்டு
பெருமென மண்டலாதிபர்கண்டுமகிழ்ந்துமே அண்டியே
வந்துதெண்டனிட்டுகொள்ளும் (ரா)

காலைப்பொழுதினிலே துங்கதிரனவே-மன்மதன்கண்டு
வாலையுமெனமேலும் மகிழ்ந்திடவே-விச்சித்திரமாக
வேலுநிகரென்றேனுவிழிகளும் நீலமணிமுத்து
மாலைபாடவே ஞாலம்புகழ்ந்திடகோலமாகவே
பாலனும்வெகுசீலமாகவே. (ரா)

யெத்தவேலையும்சிர்ணதமகிழ்வுடனே வரிதியாக
சந்ததம்னவருந்தவசுவனே புகழ்ந்துபோற்றி
அந்தனாமிகுமெந்தபுனருடன் கந்தமலர்கொண்டு
விந்தையாய்தொழும் தந்திமுனைறயிடவந்து
கார்த்தோவேதொர்த்தமாகவேவந்தனஞ்செய்துமே (ரா)

தருமாங்கதன்-விருத்தம்,

தரையொருகுடையிலாளும் தார்வேந்தா போற்றிபோற்றி
அரியதம்மறவா போற்றி அண்ணலேயின்தாள்போற்றி
திருவிரிஜைதனையாளும் செங்கதிர்தலைவா போற்றி
அரிமையாயென்னைப்பெற்ற அண்ணலேயின்தாள்போற்றி

வ-ம் சரணம் சரணம் தந்தையே யென்னை அழைப்பித்த காரியம்
தெரியச்சொல்லும்.

இராஜன்-விருத்தம்,

யென்னிடமகனேகேளா யானுமேயுந்தனுக்கு
பொன்மணிமகுடஞ்சூட்டி புவியுமேயாளவந்தற்கு
யென்மனமகிழ்சிகொண்டு பிட்சணம்வரவழைத்தேன்
சொன்னசொல்தவிர்த்திடாமல் சூட்டிக்கொள்மகுடந்தானே.

வ-ம் கேளும் என்னருமைக்கண்மணியே தருமாங்கதனே இன்றையதினத்துக்குபட்டாபிஷேகஞ் செய்துஅரசாளும்படிசெங்கோல் தருகுறேன் வாங்கிக்கொண்டு அரசாளும்மகனே

தருமாங்கதன்-விருத்தம்.

தந்திரமாசொல்வதென்ன தந்தைசொல்மிக்கவேறோர்
மந்திரமில்லையென்றவ்வை வையமிதுரைத்திருக்க
செந்திருமால்தன்பாதம் சென்னியிற்சூட்டினேனே
சந்திரமௌலியின்று சூட்டிக்கொண்டுலகாள்வேனே

வ-ம் கேளும்யென்னைப்பெற்றதந்தையே யுலகத்தில் தந்தைசொல்மிக்கமந்திரமில்லையென்று அவ்வையார்அருளிச்செய்த நீதிமார்க்கத்தை கேட்டிருந்தும் அடியேன் பிதாவாக்கியத்தைகடப்பேனோயிப்பவும் ஸ்ரீமகாவிஷ்ணுவினது திருவடிக்கமலமோநவரத்னகிரீடமோன்றும் சிரசிர்தரித்து கொண்டு வுலகத்தையாள்வேன் தந்தையே.

இராஜன்விருத்தம்.

அறிவினில்மிகுந்தயெந்தன் அறிவுள்ளமந்திரிமாரே
அர்வுள்ளமைந்தனுக்கு அழகதாய்மகுடஞ்சூட்டி
கிரிஜைமானகரமெங்கும் கொடிபெரசிங்காரித்து
வருகுவீரென்றுபேரி வடித்திடச்சொல்லுவாயே

(வ-ம்) கேளும் யென்னன்புக்கிசைந்த மந்திரிமார்களேஎன்குமாரன் தருமாங்கதனுக்கு பட்டாபிஷேகஞ்செய்து கிரிஜாபுரிபட்டணம் ஆளும்படி செய்யவேணும் ஆகையால் அன்பத்தாரு தேசமும் சிங்காரிக்கும்படி பேரியடிக்கச்சொல்லும் மந்திரி

கட்டியன் விருத்தம்.

சகலருமருவீரென்று சாற்றிடபேரிதானும்
மகிதலமைம்பத்தாரும் மன்னரும்வந்துசூழ
தகமைசேர்கதிர்குலத்து தருமாங்கராஜனுக்கு
பகருலகங்களாள பட்டமுந்தரிக்கின்றாரே

(வ-ம்) இவ்விதமாக அங்கம் அருணம்அவந்தி ஆந்திரம் எவ்வனம் ஒட்டியம் கருமகம் கலிங்கம் கன்னடம் கர்னாட்டம்காசம் காச்மீரம் காந்தாரம் காம்போஜம் காடம் குருகு குடகம்பு குந்தளம் குருகுளிந்து கூச்சரம் கேகயம் கேகாணம் கொங்கணம் கொல்லம்கோசலம் சாகம் சவ்வீரம் சாளவம் சிங்களம்சிந்து சினம் சூரசெனம் சோனகம் சோழம்திராவடம் துருவம் கெங்கணம்புளிதம் பொடம் மகதம் மராடம் மலையாளம் மாளவம் மச்சவம் யுகந்தம் வங்கம் வங்காளம் விதர்ப்பம் முதலாகிய அன்பத்தாரு தேசத்து ராஜாக்களும்அனேகபிராமணகூட்டங்களும் தேவரிஷிசெங்காமஜோகி சபன்தயானபேரும்கிரிஜாபுரிபட்டணம் வந்துசேரவேண்டியது,



திருமாங்கதனுக்குயிளவரசுபட்டங்கட்டுகிறதரு,

பல்லவி,

தங்கமகுடமெடுத்தார்சிரத்திற்பூட்டிசெங்கோல்
கைதனில்கொடுத்தார்

அநுபல்லவி.

யெங்கெங்கும்புகழ்கொண்டயிருஜர்கள்புடைசூழ
யிருபிறமந்திரிகள்யிறஞ்சியடிதாழ (தங்)

சரணங்கள்,

சிரசில்மகுடந்துன்னவே சிங்காரமாக
செவியில்குண்டலமின்னவே முறசு
யெக்காளேசின்னம்முழங்கி பேரியடிக்க
முகமல்பட்டுபூச்சக்கர முந்திருடைபிடிக்க (தங்க)

முத்தாலாலாத்தியெடுக்கமறைபோர்சாஸ்திரம்
மோதிவேதம்படிக்க பத்துமாத்தபறஞ்சி.
பணிகள்பளபளன்ன பச்சைசரவைக்கல்மாலை
பதக்கம் தளதளன்ன (தங்க)

தர்மதசொல்வழுமைமலே தருமாங்கதர்
சத்துமசையசமலை சிக்கநமகிழ்ந்தரசு
செய்திடுவேனென்று செங்கோல்கைதனில்குடி
திருக்கணியாவிபாடி (தங்க)

இராஜன்-விருத்தம்,

மந்திரிமாரோயிந்த மகுடஞ்சூட்டுவதற்காக
வந்திடுமரசருக்கு வரிசைகள்பலவுஞ்செய்து
சிந்தைகூர்ந்தவர்கள்தேசம் சேர்ந்திடசெய்துநீயும்
சந்தோஷமாகயிங்கே க்ஷணத்தினில்வருகுவாயே.

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக மகுடாபிஷேகத்துக்குவந்த ராஜாக்களுக்கெல்லாம் சிலவுகொடுத்து அனுப்பிவித்து ருக்மாங்கத மகாராசன் தன்குமாரன் தருமாங்கதமகாராசனுக்கு புத்திமதி சொல்கிறவிதம் எப்படியென்றால்.

இராஜன்- இயிசை,

மகனேயென்னிட வார்த்தையைக்கேளாய்
அகமகிழ்ந்தெப்போதும் அவனியிலுகாய்
அரிதனைமறவாதே அனுதினமன்பாய்
அரிமந்திரத்தா லறிவுமுண்டாகும்
அரிபக்தியதனால் அரசமேபெருகும்
அரிதனைதுதித்தோர்க்கு அழிவொன்றுமில்லை
புகழ்சேரும்பொருள்சேரும் புண்ணியமாகும்
மதிதலம்விஷ்ணு மாய்கையேயப்பா
பரமபாகவதாளும் பக்தியாசெய்யும்
விரதத்துக்கெல்லாம் மேன்மையுமான
யேகாதசிவிரத மென்பதேபெரிது
மாகானமந்திர நதியுமேபெருது
மலைகளுக்கெல்லாம் மகம்மேருபெரிது
வலதனில்தீயு முரிதியாயெண்ணி
தாரணியோர்கள் தானுமேயறிய
பாரணிசபியில் பரயணாவித்து
அரிவிரதத்தை அனைவருஞ்செய்ய
அரசாண்டுநீயும் அகமகிழ்ந்திருப்பாய்

இராஜன்-வசனம்.

வாரும் என் கண்மணியான தருமாங்கதராஜனே நான்சொன்னபிரகாரம் வலதம்விஷ்ணுமாய்கைதெரிந்துகொள் மலைகளுக்கெல்லாம் மகம்மேரு பெரிதென்று தெரிந்துக்கொள் நதிகளுக்கெல்லாம்கங்காநதி பெரிதென்று தெரிந்துகொள் விரதத்துக்கெல்லாம் ஏகாதசிவிரதம் பெருதென்று எண்ணிக்கொள் ஆகையால் யிந்த ஏகாதசிவிருதம் உலகமெல்லாம் அறியும்படி சபையில் பாராசத்திவிருதஞ்செய்யச்சொல்லி மந்திரியுடன் கூடயிருந்து கீர்த்திவியாய் அரசாண்டிருப்பாய் தருமாங்கத மகாராசனே.

இராஜன்-விருத்தம்.

தந்திரமரிந்துபேசும் சமர்த்துளமந்திரிகேளாய்
விந்தையர்மெனதுமைந்தன் மிகவுமேசிரியன்கண்டாய்
முந்தியேபெரியோர்செய்த முறையதுதவிரிடாமல்
அந்தமாயுலகமெல்லாம் ஆள்வதுன்கடமைதானே.

கேளும் வாரும் மந்திரி நம்முடைய குமாரன் அரியாதவனைபடியி னுலே நீர்சகலமுங்கவனமா[illegible] ஒருவருக்குங் குறைகளுமில்லாமல் தேசவிசாரணைபண்ணி அரசாண்டுக்கொண்டு யா[illegible] குறைவு கேசர்த்துக்கில்லாமல் சுகமாக வாழ்ந்திருங்களப்பா.

தருமாங்கராசன்-தேவாரம்.

அய்யனேஅரியேபோற்றி அன்பரைகாப்பாய்போற்றி
வையகமளந்தாய்போற்றி வைகுந்தவாசாபோற்றி
கையினில்சங்குசக்கிர கதைவில்கோதண்டபோற்றி
வையகமரசுசெய்ய வகையெனக்களிப்பாய்போற்றி

வ-ம் அரிஅரி கேசவா ஜெனார்தனா எழில்சேர் திருமணிமார்பா வைகுந்தவாச ஸ்ரீமன்நாராயணா அடியேன் அரியாதவன் இந்தவுலகம் அரசாள்வதற்கு அடியேனுக்கு யுக்தியுபாயம் கொடுத்தருள் புரியும் கர்த்தனே அரி அரி ஸ்ரீமன்நாராயணா.

தருமாங்கதன்-தேவாரம்.

மாதமும்மாரிவாழி மண்டபர்குடிகள்மேழி
வேதமும்பசுப்பார்ப்பாரும் வேந்தருமெவருப்வாழி
யேதமும்மலங்கடந்த யிருடிகளனையோர்வாழி
பாதமும்பரவும்பிதாம் பராபரபரனேபோற்றி

வ-ம் இந்தப்பிரகாரமாக ருக்மாங்கதமகாராசன் ஸ்ரீ தருமாங்கதமகாராஜனுக்குபட்டங்கட்டி வருகுமத்துக்குள்ளாக மோகினியானவள்காமம்பெருகி விரகவேதனை பொருக்கமாட்டாமல் மன்மதனை தூஷிக்கிறவிதங்காண்க.

மோகினிவிருத்தம்.

சுடகடென்றருளசக்கரம் காமனுங்கந்தினைசெய்துமே
டீடகடென்றதிரதாணியும் தாவ்டகமாகவேடுதன்றல்தேரேறியே
கடகடென்றகரும்புவில்லுணியுமேத்தியேராகரீகமதாய்
குடுகுடென்றோடியேகொப்பெனவருகிறான்கோதையான்னெப்படி எப்படி.

மோகினி-விருத்தம்.

அங்கஜனங்கனைசங்கையிலேந்தியேசிங்கமாசிரியே
அங்கனடுங்கவிடுங்கனை கங்கியேயிங்கையென்
கொங்கைகுடங்களிரண்டு குலிங்கிடபொங்கமால்
சங்கையில்லாமலேசாடுறான் வெங்கனல்மேனியிலெங்குமே

17010

## மோகினிவிருத்தம்.

தாமெனபேரிவாத்தியமொடுதன்னிடாதகஜதளபலத்தையும்
மாமபலாகியேயபங்கிடயேவியே மதனகேதனுக்கிரங்கிக்குரேதனும்
பூமலிதுபாக்கிசெடிபுஷ்பமருந்துவில்வத்திடத்திடமோதியே
டாமெனடம்மெனடும்மெனதரணியதிர்ந்திடவருகுறான்சகியேயெப்படி.

## மோகினி-தரு,

டங்கா பூரிகைதாரை சங்குமாய ஊதி ஊதி-சஹாசத்துடனவன்
சங்கையில்லகாளம்மினங்குமாய் மோதி-மோதி தகத்தகாய
திங்களுமொருகோடி சங்கம சோதி-சோதி பிரகாசமாக
யெங்குமில்லானந்தம் பொங்கமாய் ரீதி-ரீதி கங்கிகங்கவன்
பொங்குதங்கிடகொங்கைரெண்டு குடங்கள் மத்தியில்
சங்குசக்கிரங்களின்றிடும் அங்கஜனங்கணை சரங்கள
பங்கமாயிவ்கேயெய்குறான் சம்பருரிசாமுமாரி

தரு-சம்பருரிசாமுமாரி-சம்பருரியும் சாமுமாரியே
வம்புசெய்திட தெம்புமீரவன் சம்பமாக
சம்பங்கி ஜாதிபுஷ்பம் பூவில்லுகொண்
டிரும்பிக்கொண்டிதோ (சம்ப)

## மோகினிவிருத்தம்.

கணத்திடியெனகன்னல்வில்மாரனுங்கற்சிலைசெய்துமே
தொகைகண்டரியாதாவித்தமலரொனும் தொடுத்துபூங்கணையில்
புகைக்கெழும்பிடகுறிப்பார்த்தென்னிடபொன்குடமத்தியில்
சகிக்கவுமுடியாமல்டம்மெனஜாடுறான்சகியெப்படிதாளேனுதுமே.

தரு-ககனங்கற்சிலைபோலுமேயவை பேரி பேரிகரிவண்டுதண்டுகள்
துணககளிவளென்வருமரித்துவைய மீரி-மீரி பிரசண்டபூங்கணை
புகைகளெழும்பிடபுவிபுமேவிவைய வாரி-வாரி துருக்கிரமாக
பகைகளாகவேபாணமுந்துவைய மாரி-மாரி மகாகேதன
டிதனைசயதென்றலும் மாருதம் மனலாகவீசவும்
சிகரதேர்பிசைதீதில்லாமலே திங்கள்வெண்குடைநிழலிவ் வாசமாய்
பகரும்பசுங்கிளிவண்டுதும்பிகள் பாடிட பாடிட
புகழும்புடையுடன்படைநெரிங்கிட (சம்ப)

## விருத்தம்-இராகம்-நாட்டை,

கெடிபெருங்கோகிலத்தொனியுடன் கிதசாக்கள்வண்டுதும்பிகள்
அடல்புவி அண்டாண்டபகிரண்டநடுங்கிஞ்ஞூர்பரித்தட்டகடசமும்
கொடிமறங்கவிக்கவுத்தண்டசெம்பிரனுக்கிருறானுகிவா
னிடியெனவெழும்பிவருகிறான்யெப்படி எப்படி எப்படிசெய்குவேன்,

தரு-வண்டுனனிமயவில் வில்மாட்டினான்-சுத்தி-சுத்தி
சதகஜபதாதிகள் தண்டனைபயணக்கூட்டினான்-யெத்தி-யெத்தி

புலிகடுங்குத்தண்டமாயொருதெம்புகாட்டினன்-நத்தி-நத்தி
அஞ்சாமலேபிரச்சண்டபூங்கணை தன்னைநிட்டினன்-பத்தி-பத்தி
மண்டலம்புகழ்கொண்டகாமனூர் பெண்டுமீதினில்
சண்டைசெய்திடவண்டுதும்பிகள் தண்டுகட்டியே
மெண்டாகக்கொண்டுமே ஓண்டிவந்தனன் அண்டையிலிதோ
கண்டிரோ யிதோ கண்டிரோ சகி (சம்ப)

விருத்தம்-இ-ம்-ஷ்டை.

தாளவிருணபேரிகை மல்லாரிகள்பூரிகை
தந்தனும் தனமென
கோளகெக்கிட சதுரங்கபலகொடிகள்
சூழ்ந்திடமீனகேதனன்
தூளியெழும்பிடவிட ரவிடியுடன் தண்டரிக
ளிதோ தண்டுவிட்டனன்
மீளவும்பின்னமும் பென்னவிளையுமே
யினிமீதினிலென்னசெய்குவேன்

தரு - அங்கஜனைக்கணையுமீட்டியே-யதோ-யதோ அதமதாக
சங்கையில்லா சரங்கள்பூட்டியே யிதோ-யிதோ ஆ-பொங்கி
பொங்கவன் தளங்கள்கூட்டியே குதோ-குதோ சர்வாத்தியமுடனே
சிங்கனுதமும்சுதியுங்கூட்டியே ஊதோ ஊதோ கங்கொங்கவன்
பொங்குகுங்கிடசங்குசக்கிர றங்களின்றிடும்
அங்கஜனைக்கணைசரங்கள்பங்கமாயிங்கையெய்குறன் (சம்ப)

வேறு-தரு-பல்லவி,

அங்கஜனையடடா வுனக்குயிந்தபொங்கு
வேண்டாமடடா

அனுபல்லவி,

திங்களணிந்திடும் சங்கரனுலீனி
அங்கமெரிந்துமே வெங்கனலானதும் அங்க

சரணங்கள்.

யேதுந்தெரியாத மாதர்கள்மீதினில்
சாதனைசெய்வது நீதியுந்தானோ அங்க

கெருவமுமடங்கி ஒதிங்கியிரும்படி
வுருவமும்மில்லாமல் அரன்செய்ததறியாயோ அங்க

அரன் திருநேத்திரத் தெரிந்துநீறுகியே
யிரந்துபின்றதியினால் பிறந்ததும்தெரிந்தும் அங்க

மோகனங்கிகந்தார்த்கம்.

சுந்தரதோழிமார்களேதுணையெனவுங்களை
மெத்தவும் நம்பினேன்

இந்தவும்வந்துபாயுதே யெந்தன்மே
லெள்ளளவுசிந்தையில்லையோ
னொந்திடதென்றல்வீசவும் னொடியினி
லென்னுயர்நிரப்பதில்லையே
தந்திரமாகவே தன்னிடமாய்கையேகாட்டி

சம்பறுரி சலமாசாமாரி சதிசெய்தெனைக்கோரி தனத்துக்கதிகாரி
சாமுமேரமதில் வரிவிழியெகுரிகள்பார்த்திதரிட
தாணிபும்வருகிறனதோ சம்பறுரி

இதவுங்-கந்தார்த்தம்,

வண்ணமாங்குயில்கள்கிள்ளைகள் வண்டுகள்
தும்பிகள் சேனைசூழவே
தென்னர்த்தேரியே மன்மதன் திங்கள்
வெண்குடைநிழலில்வாசமாய்
கன்னல்வில்கையிலேந்தியே கடிதியே
மன்மதன்கடிதியேபூங்கணைவிடுவதென்சொல்வேன்
சன்னல்பின்னல்களாகவே தைக்குதேமார்பினில்
தாளுவதெப்படிதானே சைசைகயுஞ்

செய்புறானே சரந்தொடுக்குறானே சகியென்னசெய்வேனே
தாளமும்மேளமும் காளமும் பூரிபூபாளமும்பாடுறான்
தாளுவதெப்படிதானே சம்ப

விருத்தம்,

பேரிடிகெர்ச்சினை செய்வதுபோலவும்
பிரர்ச்சண்டம்மாருதமனலாகவும்
சிரிடசிவுக்கென தென்றல்தேரியே
செங்கையில்வில்லம்பேந்தியே
நரிடியிடித்தது போலவும்
வந்துபார்த்தென்னிடகொங்கைமத்தியில்
மாரடிபடவெனபாண மெய்குறான்
பாங்கியேயெப்படியெப்படியெப்படி

விருத்தம்செந்திரிக்கை.

தகத்தகத்தகாயமாக தென்றல்தேரிலெரியே
மகாமகாமகாயமாக மகாகேதமானும்
பகாபகாபகாங்கைதத்தா பஞ்சபாணமெய்குறான்
சகிசகிசகிக்கொணமல் சாமாருறானெப்படி.

மோகினி-திபிதை-இராகம்-ஆயிரி.

அம்மம்மாகேளடி அழகானமாரன்
செம்மையாய்தன்னிட சேனைகளுடனே

கடல்போலொலிசெய்ய கருங்குயில் வைய
மடையமாருதம்வீச மாங்குயில்பேச
வண்டுமச்சரமாகி வந்திசைபாட
தண்டுகளாய்தும்பி தளத்துடன்கூட
மதுநிலாவதுசாய மலர்க்கணைபாய
அதிமோகமாகியே அம்புவிதனிலே
கறையமாய்கையேவிட்டு காமாக்கினியாலே
பிரகற்றபாவையும் தேனில்விழுந்ததுபோல்
படுந்துயர்போதாமல் பனிச்சென்றுமிகவும்
இடிவந்துமின்னாமே வெடித்ததுபோலும்
அடியம்மாமன்மதனுக்கிரகனாகி
சடிதிகண்டோடிவந்தானென்னசலமோ
கடிகடாகடியுடன் கர்ச்சிணைக்கொண்டு
துடிதுடிதுடாவீரன் துஷ்டசேகவனும்
சலமதுகொட்டித்து சதிகாரன்கன்னல்
சிலைதனைதென்றலின் தேர்மிசைவைத்து
சொப்பெனபுவிமீது குதித்துகெர்ச்சித்து
வெர்ப்பாதநீர்ப்பாதனாயோடிவந்து
கேதகிமலர்கிழா இளாமரமீது
பாதகனைத நெய்பாணிகளாக்கி
ஞசிமல்லிகைதனை வுரிதியாய்முடிக்கி
ஜாதிவிதக்கட்டு தாமரைநூலவிட்டு
பாபதோஷங்கள் பாருமலர்க்கு
சாபென்றுசெவ்வலரி தனிரிசைவைத்து
கொழுங்கொடிதனில்விசை குதிரையுண்டாக்கி
தழுங்நோங்குமலறரும் பால்சக்கரமாட்டி
பரிமளங்கள்நூரி பறுக்கிரமேமருந்தா
முறவாளிமதிவிட்டு முறமையதாக
சாலவேதாமரை தண்டதினாலே
மேலாகசிலாக்குமிதம்பார்த்துவைத்து
கோலாகலங்கொண்டுப் குடமல்லிருண்டு
போலாககேமித்து போட்டுகெட்டித்து
அஞ்சாமல்சம்பங்கி அருமலர்தன்னை
றஞ்சகபொடியூட்டி நல்விசைமாட்டி
பட்டாணிசிப்பாயி பார்த்துபாக்கிகொண்டு
விடாவிடியுடன் தன்னைவிட்டோடிவந்து
பாவிமன்மதனதோ பாரமாம்மரிபூக்
காவினிலொதிங்கி கள்ளனாய்பதிங்கி
செடிகளிலிருந்து திகைத்தவன்கண்டு
கடினமதாயொரு காலினையூன்றி
வைத்துமேபார்த்து யோர்கன்றினைமூடி
சித்தனுன்மத்தொரு கண்திறந்துபார்த்து

யென்னதான்சலமம்மா யென்குசகும்ப
ஸ்தன்னியமத்தியில் தாக்கவேமுட்டி
அம்மம்மாறஞ்சக மதாகளுக்கென்ன
டம்மெனகுண்டுகள் தாக்குதேசகியே

மோகினி-ரிசபத்தியம்.

காமனேவுன்பஞ்சக்கணையும்வில்கன்னலும்
கரியொடிச்சிதின்றுகடிகியேக
காமனேவுன்மகரகேதனும்மேனுங்கொடி
கடல்வடவனலுடன்கலந்துபோக
காமனேவுன்பஞ்சக்கிள்ளைகுயில்களும்வண்டு
கடுங்கானகத்தினில் கடிகியேக
காமனேவுன்றதங்கடுமுறசலந்தனுங்
கணையுமக்கினிபட்டு கரிகிபோக

வுன்னங்கமழிகியெங்கினுமேறுர
வுனசதிரதியுன்னை யிகழ்ந்துசிர
வுன்கெர்வமடங்கி விண்ணுலகமேர
வுன்னந்தம்பிந்தியுன் னுருவுமாற

மோகினி தரு-அடதாளம்.

பல்லவி.

அதோபார்மதன்வருகுற வேகமதைபார்

அனுபல்லவி.

அதோபார்பதிவேக மதாய்மதனு
கணைபெடுத்துசரக் தொடுத்துக்கை
பிடித்துப்பின் விடுத்துகொண்டதபார்

சரணங்கள்.

தென்றலின்தேரேரி சென்றவன்வில்லேரி
வின்பென்மேல்வில்லேரி நின்றெய்குறான்பாரி

அதோ-யிடக்காகவே முடிக்கிகணை
விடுக்கன்றனன் முடிக்காகவே (அதோ)

சித்தஜன்யென்மேலே யித்தனிபேரிலே
புத்தியில்லாமலே சத்துமஞ்சாமலே

சிரித்துதன் கரத்தால்தன்
திறத்தைகாட்டொளித் துக்கொண் (அதோ)

திங்களுங்காயவே தென்றலுமாயவே
செங்கையும்வோயவே பங்கமுஞ்செய்யவே

54

அவன் தனித்துபின் ருதித்து
பூந்தடத்திர்க்கொக்கரித்துக்கொண் (அதோ)

பொது-விருத்தம்.

அந்தநல்வேளைதன்னில் அண்ணல்ருக்மாங்கராஜன்
மந்தனுக்கரசுக்காக மணிமுடிதரித்துபின்னும்
மந்திரிக்கினியபுத்தி வாகுடனுரைக்கயிங்கை
விந்தைமோகினியுமங்கை விரகங்கொண்டேதுசொல்வாள்

பொது-வ-ம் [illegible] தவ
ஞானான் தருமாங்கதராஜனுக்கு பட்டாபிஷேகஞ்செய்துமோகினியிடத்திற்கு போகும்போது மோகினி காமக்கணையால் மெலிந்து விரகதாபங்கொண்டு இராசனுடன் சொல்கிர விதம்.

மோகினி-விருத்தம்.

கானகந்தன்னிலென்னை கண்டுமோகித்துநீரும்
மானிகருளேயுன்னை காப்பதேயில்லையென்று
வானும்விண்ணரியசத்திய வாக்குமேயெனக்குரைத்தும்
ஏனென்றுகேளாமல்தான் யிருப்பதுஞாயந்தானோ

வ-ம் கேளும் மகாராசனே கானகத்திலென்னைக் கண்டுமோகித்து காந்தர்விவாகமாக கூடுங்காலத்திலே எனக்கு நீர்சொன்னசத்தியம் உன்னைவிட்டு நிமிஷமாத்திரம் பிரியேனென்று சொன்னீரே நானுன்னைநம்பி காமதேவனுக்காளாய் ருத்திரிகாலத்தில்நித்திரையில்லாமல் அவதிப்படுகிறது ஞாயமா மன்னவனே.

இராஜன்-விருத்தம்,

சித்திரவடிவேல்கண்ணே திகழிளங்குயிலேகேளாய்
யெத்திசையரியதாக யிளவரசாவயெந்தன்
புத்திரன்தனக்குபட்டம் புகழ்பெறகட்டிவந்தேன்
சத்தியம்மறப்பேனோவுன் தழுவியேயணைவோம்வாரீர்

வ-ம் கேளும் பெண்ணே மோகனாங்கி என்குமாரனாகிய தருமாங்கதமகாராசனுக்கு பட்டாபிஷேகஞ்செய்து அரசாள சொல்லிவந்தேன் இனி நமக்கு யாதொரு சஞ்சலமில்லை உனக்குசொன்ன சத்தியம் மறப்பேனோ நாமிருவரும் சப்பிரகூடமஞ்சத்தில் பவனித்துரதிகேளி விலாசமாயிருக்கலாம் வாரும் பெண்ணே மோகனாங்கி.

மோகினி-விருத்தம்.

மன்மதன்கணையால்மெத்த வாதைகள்பட்டபோதும்
இன்னிலந்தனிவிக்காளும யேக்கமாயிருந்ததெல்லாம்
வன்னிகமாகனும் ஒருமையாய்க டிருந்தால்
கன்னலவிலெய்புயானை கதரியமாடுவோனே.

வ-ம்-கேளும்'என் பிராணநாதா இங்கேயென்னை வொண்டியாக விட்டுப்போனீரென்று காமதேவன் மடக்கி பூங்கணை யெய்ததினாலே மனமுரிந்து வாதைபட்டேன் இனிநாமிருவருங் காமக்கிரீட்டி, லீலைகள்செய்திருந்தால் மன்மதன்வெட்கி வோடிப்போவான் இராசனே.



இராஜனுக்கும்-மோகினிக்கும் தர்க்கம்-தரு-அடதாளம்

இ-ம் காம்போதி-மோகினி-தரு.

சப்ரமஞ்சத்தினிலேறும் யென்னை
தழுவியணைந்துகாமன் தபியைதீரும் (சப

இராஜன்-தரு.

அற்புதஅழகுள்ளமானே கட்டியணைந்து
சுகங்கொடுத்துன்னுவல் திரப்பேனே (அ

மோகினி-தரு.

தாம்பூலம்மடித்திந்தேன்காணும்-வந்தன்
செங்கனிவாயால் மென்றுதரவேணும் (தா

இராஜன்-தரு.

காம்புகதிர்வெத்திலமென்னு-யெந்தன்
கனிவாயால்மென்றுகை களிக்குரோன்றின்று (கா

மோகினி-தரு,

கன்னமேதுக்குஞன்முனையே யென்னை
கட்டியணைந்துமுத்தமிட்டுக்கொள்துரையே (க

இராஜன்-தரு.

வெள்ளிலைசருள்பாக்கிதோடி மீனாக
மெல் லதின்றுகொஞ்சம் மீதிவிதாடி		(வெள்)

மோகினி-தரு,

துரையேயென்றனிடம்வாரும்-கொண்டு
வந்தனத்தைப்பிடித்தென்னையணைத்துநீசேரும்		(துரை)

இராஜன்-தரு,

திரண்டகொங்கைதன்னையுந்தின்டி-வர்தனி
செங்கனிவாயிதழ்தேன் குடிப்பேண்டி		(திரள்)

மோகினி-தரு.

சின்னஞ்சிறுத்திடை பெண்ணாசை-தீர்
திர்ப்பிருசுக்கொடுத்தென்று வீண்பேச்சை		(சின்ன)

இராசன்-தரு.

சின்னசொல்பேசாதமைத்து-இப்போ
சேர்ந்தணைந்திடுவதில் தெரியுதுன்சமைத்து		(சின்ன)

இராஜனுக்கும்-மோகினிக்கும் மோகிப்பு-சேபத்தியம்,

மோகினி-சொல்,

செங்கனிவாயிதழ் தந்தத்துரித்திட
சிவந்துமேதெரியுதித்தனிதுடிக்க

இராஜன்-சொல்.

சிங்காரபவழமோ தெங்கனிகோவையென்
இன்றிடலாமெனசிப்பினதனால்

மோகினி-சொல்.

கொங்கைக்குடத்தையும் செங்கையிலழித்திட
குனிகம்பட்டயிக்குரிகள்பாரும்

இராஜன்-சொல்.

பங்கையகருமலர் செண்டுபோலிருந்திட
பிடித்துமேபார்த்தனன் பேடையனமே

மோகினி-சொல்,

மூலைச்சிமுடி யவிழ்ப்பதென்னகாணும்

இராஜன்-சொல்,

கலையவிழ்ப்பதுகிளாசாஸ்திரமலவோ

மோகினி-சொல்.

குலவியெனையாளுநவாய் குணமதாக

இராசன்-சொல்.

பலவிதலீலைசெய்பவனிப்பம்வாராய்

இராசனுக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-இராசன்-தரு.

அதிகசரசமயலாகினி
காமனைத்திடுவம்ஜெகன்மோகினி

மோகினி-தரு.

தனியிங்கவேனாயிலெழுந்திரும்
சப்ரமஞ்சத்தில்சயனித்திருவரும்

இராசன்-தரு.

திருகொன்றுசொல்வேறேவருகிறேன்
வுன்னை சேர்ந்தணைத்துமுத்தந்தருகிறேன்

மோகினி-தரு.

இரண்டுகொங்கையும்சேர்த்துபிடித்திடும்
இப்போயிருகக்கட்டிசேர்த்துமுத்திடும்

இராசன்-தரு.

திரண்டபருவமானமங்கையே-யிதோ
சேர்த்துபிடிக்கிறேன்கொங்கையே

மோகினி-தரு.

மதனலீலைசெய்பிறதாயகா-யின்னம்
மயங்குவதென்பிராணநாயகா

இராசன்-தரு.

ஆசைக்குகந்தபெண்கண்ணாட்டி
வுன்னலல்திறப்பேனடிமின்னாட்டி

மோகினி-தரு,

பாசமதாகயென்னுருமேவேண்டி
பரிவாகயெந்தனையாளுமே

இராஜன்-விருத்தம்.

கோதையேகேளாயிந்த குவலயந்தன்னில்மன்னர்
நீதமாயுதையகாலம் நேமவிஷ்டைகளுஞ்செய்து
போதவேபாக்கிரிந்தால் பொருந்தும்லட்சுமியுமென்பார்
ஆதலால்தாம்பூலங்கொண் டிதேகமாகவாராய்

வ-ம் கேளும் என்னுசைக்கண்மணியே வுதையகாலத்தில் யாதாமொரு வக்தந் சுத்திசெய்துக்கொண்டு தாம்பூலந் தரித்துக்கொண்டால் முக வசீகரமுண்டாம் அஷ்டலட்சுமி விலாசம் பொருந்திஇருக்குமாம் ஆகையால் தாம்பூலங்கொண்டுவா மோகினி,

மோகினி-வசனம்,

அப்படியே தாம்பூலங் கொண்டுவந்தேன் தரித்துக்கொண்டு சப்ரகூடமஞ்சத்தில் பவனிப்போம் வாருஞ்சுவாமி,

பொது-வ-ம் அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக வருக்குமாங்கதமகாராசனும் மோகனாங்கியும் சப்ரகூடமஞ்சத்தில் சடலித்திருக்கும்போது குமாரனாகிய தருமாங்கதமகாராசா அரசுசெலுத்தகொலுவில்வந்து சொல்கிறவிதங்காண்க,

தருமாங்கதன் அரசுக்குவந்துசொல்-விருத்தம்,

அலைகடல்துயன்றாய்போற்றி ஆதிமாலடியேபோற்றி
வலிமையில்மிருத்தாய்போற்றி வையகமளந்தாய்போற்றி
சிலைதனைவளைத்தாய்போற்றி செங்கோலுமேந்தியிந்த
வுலகினையாள்வதற்கு வுத்தியைதருவாய்போற்றி

மந்திரி-விருத்தம்.

கதிர்மரபினிலேவந்த கனகவைபோகாபோற்றி
விதிதவிர்யோகாதேசி விருதமும்முடிப்பாபோற்றி
சதிருடனுலகையாளும் தார்வேந்தர்க்கரசேபோற்றி
அதிபதியாய்விளங்கும் அரசதருமாங்கதாபோற்றி

கட்டியன்-போற்றி-விருத்தம்-

திடமுடனுலகமொருகுடையினிலாண்டிடும்
தீரனேவெகுபராக்கு
அடவுடனேயமைச்சர்கள் அடிபணிந்திடகார்க்கும்
அயனேவெகுபராக்கு
இடுகிடெனமருமன்னர் திறைகொண்டுகுறையாமல்
செழித்தராசாள்பராக்கு
அடையலர்களுடனமா புரிந்துயித்தியம்செய்
அய்யனேவெகுபராக்கு.

தருமாங்கதன்-விருத்தம்,

மதிமந்திரிகேளாய்நாட்டில் மறையவர்மன்னர்நல்ல
சதிர்பெரும்வைசியர்சூத்திரர் தந்திரப்பரிகள்தேர்கள்
குதிகொள்காலாள்கள்சேனை குறையொன்றுமில்லாவல்தன்
அதிகசந்தோஷமாக அனைவரும்வாழ்கின்றாரா

வ-ம் கேளும் மதியுள்ளமந்திரி நமதுநாட்டில் யிருக்கப்பட்ட பிர்ம க்ஷத்திர வைசிய சூத்திர நான்குவர்னத்தாரும் சதுரங்க ஆனைசேனை பரிவாரங்கள் [illegible]க்காரு சொல்லும் மந்திரி.

மந்திரிவிருத்தம்.

உரைசெய்வேன் கேளயிந்த வுலகினில்மிகுதியாக
மறையவர்மன்னர்சூத்திரர் வணிகர்வேளாளர்மிக்க
கரிபரிதேர்காலாள்கள் கனத்ததோர்சேனையெல்லாம்
குறையொன்றுமில்லாமல்தான் குலவியுமிருக்குதையா

வ-ம் கேளும் தருமாங்கதமகாராசனே பிர்ம க்ஷத்திர வைசியசூத்திர னான்கு வர்னத்தாரும் குடித்தனக்காரரும் ஒன்றுமொன்று குறைவில்லாமல் யிருக்கின்றார்கள் மகாராசனே.

தருமாங்கராஜன்-தேசவிசாரணை-தரு,

வையகம்முழுதிலும் மாதரும்மாரியும்
வண்மையாய்பொழிகின்றதா மந்திரி

மந் மாதமும்மாரியும்பேயுதன்வீதியால்
வளம்பெறவையங்களெல்லாம்ராஜனே

தருமா திகழ்கின்றதேவாலயங்களிற்பூசை
சிறப்பாய்நடக்குவருதா

மந் திரிகாலமும்பூசை தேவாலயங்களிற்
செவ்வையாய்நடக்குவருது

தருமா மறையவர்தமது குலநெறிதவிறாமலே
யனுஷ்டானஞ்செய்யுறார

மந் வழுவாமல்ஜபதபம் சந்தியனுஷ்டானமும்
வழங்கியேவருகிறார்கள்

தருமா மருமன்னரரசாண்டு வழுவாமற்திறைகொண்டு
வந்துமேதருகுறாரா

மந் மனுநீதிதவறாமல் அரசாண்டுதிறைகொண்டு
வழங்கிபவருநருர்கள்-ராஜனே

தருமா விதிமுறைபடிபுலி பசுவுமோர்துறையினில்
விரும்பிநீர்குடிக்கின்றதாமந்திரி

மந் வேந்தனின்னுக்கினையால் புலிபசுவுமோர்
துறையில் - விளையாடுகின்றதையா

தருமா திதி[illegible]நைவசிபறல் வரும்பலசரக்குகள்
விரையினிற்குறையுள்ளதா

மந் நீதியின்னெறிப்படிக் கடைவீதியெங்கினு
நிறையினிர்குறையில்லையையா

தருமா சதியின்மிகு சத்துருவர் ஜம்புத்திவிர்செயும்
சண்டையேதேனுமுண்டோ

மந் சதுரங்கசேனைகட் கெதிரிங்குவருமாசர்
தலைவணங்கிசெல்குறார்ராஜனே

தருமா திதியின்மிகு தசமி ஏகாதசி துவாதசி-தின
விருதம்பேருதாமந்திரி

மந் திட்டமுன்னிட்டநின் கட்டளைப்படியதே
திரமாய்நடக்குதையாராஜனே

தருமா விளைவுசெய்காரளர் தான்னியங்கட்டடையாய்
வைத்துமெத்திருக்கின்றதா

மந் மேழிச்செல்வங்களும் கோழப்படாதெனை
மேன்மையாய்பெத்துநின்றார்ராஜனே

தருமாங்கதன்-விருத்தம்.

வஜிசாமுடையமந்திரி மார்களேயென துதந்தை
வுசிதமாவிருதஞ்செய்ப வுரிதியுஞ்சொன்னதாலே
பிசக்கிடபோகுதப்பா பாரணிஏகாதேசி
தசிமியுமென்னைக்கோதான் தெரிந்திடவுரைசெய்வீரே

வ-ம் கேளும் மந்திரி என்தந்தையாகிய வுருக்குமாங்கத மகாராஜா சொன்ன கட்டளைப்படிக்கி ஏகாதசி விருதம் நடப்பிக்கவேனும் ஆகையால் தசமி என்றைக்கோ இன்றைய திதி யென்னமோ தெரியச் சொல்லும் மந்திரி.

மந்திரிவிருத்தம்.

எங்களையாளவந்த யிரவனேசொல்லைக்கேளாய்
திங்களின் திதிகள்சொல்ல திசழும்வேதியனைக்கேட்டால்
இங்கிதமாகச்சொல்வார் யின்றையதினங்கள்யாவும்
சங்கைகளறிந்துக்கொண்டு சாத்துவம்பேரிதானே.

வ-ம் கேளுங் தருமாங்கதமகாராசனே இன்றையதினம் திதி தெரிந்துக்கொள்ள புரோகிதனை அழைத்துகேட்டால் தெரியும் ராசனே.

தருமாங்கதர்-வசனம்,

ஆனால் அப்படியே செய்யுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி - கவி,

கட்டியக்காரா கடுகனவோடி அட்டியில்லாமல் அரசனுக்காகவே
பொட்டெனவேயுப்புரோகிதனையும் இட்டுமேநீயுடனழைத்துவாய்

கட்டியன்-வ-ம் அப்படியே அழைத்துவாரேன் சுவாமி.

கட்டியன்-வ-ம் சுவாமி புரோகிதரே தருமாங்கத மகாராஜா அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரையா சுவாமி

புரோகிதர்-வ-ம் அப்படியே வருகிறேனப்பா

பஞ்சாங்கையர்வருகிற-தரு-மட்டியம்,

பல்லவி.

அய்யர்வந்தாரே பஞ்சாங்கஞ்சொல்
அய்யர்வந்தாரே

சரணங்கள்.

கையில்பஞ்சாங்கமும்பிடித்து நல்ல-தாவிவேஷ்டகனாயிதுமடித்து
பையவேதமனைதும்படித்து காலில்பாதக்குறடும்தொடுத்து அய்ய

வேதமந்திரத்தால்சூரியனையழைப்போம்
வேண்டியிருந்தால்மழையுமேபொழிவிப்போம்
போதவண்டத்திலுள்வதிசெயவரிவிப்போம்
பொருதுஞ்சூத்திரர்கொன்றுபுகலோய்மர்மம்வைப்போம் அய்

புரோகிதர் ராசனை வாழ்த்துகிற-விருத்தம்,

கதிர்குலத்தரசேவாழி கனகவைபோகம்வாழி
துதிபெறுமுனதுதந்தை தாயருக்மாங்கன்வாழி
சதுர்பெறுங்கோலும்வாழி சந்ததியோர்கள்வாழி
அதிபதிதருமாங்கத அரசனேவாழிவாழி

வ-ம் அஷ்ட அசுவரியமஸ்து ஆயிரோக்கிய மஸ்து யிஷ்உகாமிய மஸ்து சஸ்வாகடாக்ஷலமஸ்து சுபமஸ்து அவிக்கினமஸ்துசிரஞ்சிவி சுகிபல ஆசீர்பாதமேமாய் ராஜசேகர.

தருமாங்கதர்-விருத்தம்.

அந்தணா சநுணமெத்தை அச்பதமாகச்செய்யும்
விந்தையாமேகாதசி விரதமென்னறைக்கிதானே
சிந்தையும்மகிழவதாக தெரிந்திடவுரைப்பிரிப்போ
அந்தமாயுலகமெல்லாம்அரிந்திடவுரைசெய்வேனே

வ-ம் கேளும் புரோகிதரே யின்றையதிதியென்னநட்சத்திர மென்னான் தன்னையாகிய ருக்மாங்கதன் அனுசரித்துசெய்யும் ஏகாதசிவிரு மென்னைக்கே அதைதெரியச்சொல்லும்சுவாமி.

புரோகிதர்-விருத்தம்,

ஆதவன்மறபில்வந்த அரசனேசொல்லக்கேளாய்
மாதமும்தனுசுசுக்கிர வாரமுமெய் டாச்சதி

போதவேசுக்கிலபட்சம் பொரிந்திடும்நவமியின்றே
ஆகலால்வுலகமெல்லாம் அரியவேவுரைசெய்விரே

வ-ம் கேளும் மகாராஜனே பஞ்சாங்கம் பார்க்குமளவில் தனுர் மாதம் சுக்ரவாரம் பூர்வபட்சம்பிறையதினம் நவமிபோக்குது தச மிதினம் ஞாயதினம் யேகாதசி மறுநாள் துவாதசியிப்படி யிருப்ப தால்தங்களிஷ்டப்படிக்கி அன்பத்தாருதேசமும் அரியும்படிசெய்யு மரசனே.

தருமாங்கதர்-விருத்தம்.

மார்கழிமாதமெட்டாந் தேதியும்மேகாதசி
சார்ந்துலந்ததிரு லெக்தன் தந்தைசொல்படிநடக்க
நேர்ந்தபுத்திகளைச்சொல்லும் நெரியுள்ளமந்திரிநீபோய்
தாரணியறியத்தானே சாற்றுவீர்பேரிதானை,

வ-ம் கேளுமப்பா மந்திரி நமது புரோகிதர்சொன்ன பிரகாரம் நா ளை பதினம் ஏகாதசி ஆகையால் நமது நாட்டிலுள்ளோர் அறியும்படி பேரிகை காரனை அழைப்பித்துபேரிகை அடிக்கச்சொல்லும்மந்திரி.

மந்திரிவிருத்தம்,

பணையனைவிக்குமவீர பாருவேசொல்லக்கேளாய்
துணையவேநீபோயேகா தசமியும்நாளைக்கென்று
தரையினிலோடிநீயும் சகலருமறிவதாக
விரதமேயிருப்பீரென்று விளம்பியேபறையடிப்பாய்

வ-ம் ஆரடா அடா பேரிகைகாரா ருக்மாங்கதமகாராசா ஆசாபதி மாய் செய்யும் யேகாதசிவிரதம் ஞாயபதினமென்று நமது அன்பத் தாருதேசமும் அரியும்படி பேரிகை யறைவித்து விஷ்ணுவிரத மிரு க்கச்சொல்லும் பேரிகைகாரா.

பேரிகைகாரன்-வ-ம் அப்படியே அடித்துவருகிறேன் சுவாமி

பேரிகைகாரன்-விருத்தம்,

பட்டணமுழுதுஞ்சுற்றி பாரணியேகாதேசி
திட்டமாய்நாளைக்கென்று சேதியுமறிவதாக
கொட்டுரோன்மேளமாட்டி குலமயத்தோரீங்கள்
சட்டமாய்விரதந்தன்னை சாங்கியமாய்செய்யுவீரே.

வ-ம் கேளுங்கள் பிரம க்ஷத்திர வைசிய சூத்திர நான்குசாதியி லுள்ள சிசு பசுமுதல் அரியும்படி நாளையதினம் ஏகாதசி விரதமிருக் கவேணும் இது தப்பிநடக்கிறோர்க்கு ராசதண்டனை நடக்கும் டுடும் டுடும் டுடும்.

## இராஜன்-விருத்தம்.

என்னிகிணியிலேவாழும் மினியமந்திரிகளேகேளாய்
மன்னவன்சொற்பிரகாரம் வையகமெங்கும்பேரி
நன்னயவிருதமென்று நயந்தனுமடித்ததாலே
வுன்னிதமாகநாம்போய் ஓசக்தியும்மிருப்பம்வாரும்

வ-ம் கேளுங்கள் மந்திரிமார்களே என் தந்தைசொற்படிக்கி நாளையதினம் ஏகாதசி விருதமென்று பட்டணமுழுதிலும் பேரிகையினாலே தெரியும்படி அரியவைத்தோம் நாம்வந்து வெகுநேரமாச்சுது நாம் கொலுவைவிட்டு விருதமிருக்கலாம் யெழுந்திருங்களப்பா.

## பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் கிரிஜாபுரியில்வாழும் யாவருங்கேளுங்களையா யாதெனில் யின்றையதினம் கௌசிக தசமி பொருபோதும் நாளைக்கி ஏகாதசி நிர்ச்சலமும் மறுநாட்காலையில் துவாதசி பாரணபுசிப்பும் ஆதலால் இம்மூன்று தினமும் பெண்போகம் தித்தினாமுதலிய துர்சேஷ்டைகள் நிவர்த்திசெய்துமேற்கண்ட தெரிநின்ற சர்வாத்துமாக்களுக்கும் ஸ்ரீவைகுண்டபதவி கைவசமாமென்று மூன்மாதவரால் ருக்மாங்கதமகாராசன் கேட்டுக்கொண்டபடி யவ்விருதத்தை யனுஷ்டித்து தருமாங்கதமகாராசன் ஆக்ஞாவல்லாம் துவசம்நாட்டி தண்டோர் மூலமாய் அரிவிக்க அமுசதூளிகா மஞ்சத்தின்பேரில் மோகினி தாம்பூலம் மடித்துக்கொடுக்க ருக்மாங்கத மகாராசன்தாம்பூலமரிந்து கொண்டிருக்க ராசன் பேரிகை சத்தங்கேட்டுசொல்கிறவிதம் யெப்படியென்றால்.

## உருக்மாங்கதமகாராசன்-விருத்தம்,

ஹரிஹரிநாராயணாயடியவர்செய்யபசாரமனந்தமென்னும்
பரிகரிபாராயணபரிபூரண பதினொன்றுந்திதிபலனையருள்
புரகரிதோராவபுரவிகொண்டராசாளபுத்திரனும்புத்தியந்தனான்
முராஅரி ஆதிமூர்த்தியேமுரசமுழங்குதேமோசம்போனேனே,

வ-ம் ஹரிஹரி ஸ்ரீமந்நாராயணா அகண்டபரிபூரணா அச்சுதானந்தா ஆதிமூலப்பொருளே அடியார்கள் செய்யபசார மனந்தமாயிரம் பரிகரி பாராயணா பரப்பிரம்ம சுரூபா பதினொன்றாந்திதி ஏகாதசி பலனை அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும் கபடநாடக சூத்திரகடவுளே சதுரங்கசேனைகள் புடைசூழ இளவரசாண்டுவருமெனது புத்திரனாலே யின்று தசமி வொருபொழுதென்று பேரிகை முகாந்தரமாய் கட்டளை செய்ததைக்கேட்டுபுத்திவந்தது புண்ணியபருவோத்துமா தெரிந்தும் தெரியாமல் முழுமோசம்போனேனே வைகுந்தவாசா அரி அரி.

## மோகினி-கலிப்பா

மஞ்சத்தினிலேமடந்தை வாகுடனேசெங்கையினால்
கொஞ்சிவெள்ளிலைமடித்தே கொடுத்ததைவேண்டாமெனவும்

அஞ்சியிருக்கின்னேரம் அலரியெழுந்திருப்பதேனோ
வஞ்சகனைன்செய்தேனோ வகையேதுந்தெரிகிலேனே

வ-ம் கேளும் மகாராசனே யென்னிஷ்டத்தின்படியே கூடியிருந்தவர் கையிலிருந்ததாம்பூலத்தை சப்ரகூடமஞ்சத்தின்பேரில் வைத்துவிட்டு கட்டிலைவிட்டு கீழேகுதித்து அரிஅரி நாராயணாவென்றும் முழுமோசம்போனேனே யென்று சொல்லுவானேன் நானென்னதுரோகஞ்செய்தேன் மகாராசனே,

மோகினி-தரு-மட்டியம்-இ-ம்-காம்போதி

பல்லவி.

யென்னமாயமோ நீர்செய்தறியேன்
யேதுஞாயமோ

அநுபல்லவி.

இன்னவளென்னகுற்றம் செய்திருந்தாலுநீமகித்தம்
மன்னித்துயென்னிட மையல்தீர்த்திடவே
மருவிசுகந்தருவீர்மன்னா — யென்ன

கூசாமலேயழைத்து ரெண்டுகொங்கைகுடம்பிடித்து
நேசமாகயிருக்கையிலே நினைவுவேறானதென்மன்னா — யென்ன

வெள்ளிலைசுருள்தந்தேன் அதைவேண்டாமென்று
சொல்வதேன் மெள்ளமெள்ளவுந்தன் கள்ளத்தனமெல்லா
மேதெரிந்ததுவேமன்னா — யென்ன

பருவம்விஞ்சுகுதுமாரன் பயல்கணைமீறுது
மருருவம்காம்போதி ராகமும்பாடியே
வனவுக்கெழுந்திருமேமன்னா — யென்ன

மோகினிவிருத்தம்.

காரிகையென்னைக்காட்டிற் கண்டுமோகித்துநீயேன்
பாரிகைவிடேனன்றங்கு பரவசஞ்செய்துயிங்கை
பேரிகைமுழக்கங்கேட்டு பிரிவதேனென்னைவிட்டு
சூரிகைகொண்டுசென்னி துணிக்கின்றசொல்போல்மன்னா

வ-ம் கேளும் ராசனே அடியாளை கானகத்தில்கண்டுமோகித்துபூமி ஆகாயமறிய பிரமாணம்பண்ணி கொடுத்து காந்தருவிவாகஞ்செய்து அழைத்துவந்து அரண்மனைசேர்ந்தபின்பு யிங்கேகேட்ட பேரிகைசப்தங் கேட்டு பிரிந்திருப்பதை யோசிக்கில் ஒருவர்க்கன்னமிட்டு அன்னை முன்பின்னிருந்து கழுத்தையறுத்த கதைபோலேயிருக்குதுராசனே.

இராஜன்-விருத்தம்.

தையலர்க்கரசேயின்று தசமியோர்பொழுதுமாது
மையலாகாதுனோ மாத்திரமிச்சலமேகித்திடா

செய்யலாகாதுபாரணைத் திதிதுவாதசியோர்போது
பொய்யல்லமூன்றுநாளும் போகட்டும்மறுவலாமே,

வ-ம் கேளாய் பெண்ணாயகமே யின்றையதினந் தசமி யோர்போ தாம் ஞாயிதினம் ஏகாதசி நிற்சலமும் மறுநாள் துவாதசி பாரணி யோர்பொழுதுமாகிய யதில்நித்திரையும் பெண்போகமும் நிவர்த்தி செய்யவேண்டியதால் யிம்மூன்றுதினமுங் கழித்தபின்பு நாம் சுகிப் போம் மோகனாங்கி.

மோகினி-தரு-ஆதி-இ-ம்-காம்போதி.

பல்லவி,

இனிவிடுவேனென்றெண்ணாதே யென்னை
யெத்திசித்துகள் பண்ணாதே.

அநுபல்லவி,

தனியாயென்னைவிட்டிங்கு தர்மனைசெல்வேனென்று
தவிக்குரதென்னமோ தெரியலேயென்னைக்கொன்று யினிவி

சரணங்கள்,

சின்னஞ்சிறுபெண்கள்செய் மனஞ்சாதயம்போலே
சித்தெல்லாங்காட்டுகிறீர் தேவரீரென்னத்தாலே யினி

கன்னியவயதிலென்னை கைபிடித்திழுத்தாயே
கலந்துமருவியெந்தன் கற்பினையழித்தாயே யினி

பருவமதில்காமன் பாணத்தாலலையாதே
படுக்கைகெழுந்திரும் நீர்பரியாசம்செய்யாதே யினி

காமன்கணைபெய்யாமல் கலந்திருவருங்கூடி
கடுகயெழுந்திரும் நீர்கலியாணிராகம்பாடி யினி

மோகினி-தரு-ஆதி-ஜாவளி.

மன்னனேயின்னேரம் மஞ்சம்விட்டிறங்கினது
யென்னகாரணஞ்சொல்வாய் மன்னவா
வுன்னாணுன்செய்தருத்தம் ஓமன்னவா

இரா-உத்தமொன்றில்லைமானே குமான்பேரிழுக்கம்
பத்தியாயேகாதசி ஞாயிதினம்
ஒத்துவர்த்ததென்செய்வேன் அன்னமே

மோ-ஒத்துவத்தாலென்று வுன்னை விடுவதில்லை
சித்தஜன்கணைகள்பட்டு ஓமன்னவா
மெத்தமயங்குறேனே-ஓமன்னவா

இரா-மயங்கிறவிக்கவேணீ மனம்பொருந்தாயின்னேரம்
அயன்விருதம்செய்யவேண்டும் அனுப்பிடும்
சயனிக்க தருணமல்லடி அன்னமே

மோ-தருணமிதல்லவென்று தடுத்துசொன்னால் கேட்பேனோ
பாரணியேகாதசி ஓமன்னவா
சீராயுன்மகனசெய்வான் ஓமன்னவா

இரா-மகன்செய்யும்விரதத்துக்கு மருகமுன்றுனுள்பொரும்
வெருசகந்தருகுரோண்டியுந்தனுக்கு
வகையெனக்குசொல்லடி அன்னமே

மோ-சொல்லுவதென்னமுன்னே சகித்திருக்கவென்னேரம்
அல்லும்பகலிருக்கும்படி சத்தியம்செய்து
இல்லும்பில்லும்பேசுகிறாய் ஓமன்னவா

இரா-பாகுசேர்மொழியாளே பாசனிதசமிநல்ல
யேகாதசிவிருதமடி மோகினி-தோகையே
பொய்வாரேண்டி அன்னமே

மோகினி-கலிப்பா.

பருவமதில்மதன்பஞ்ச பாணத்திலேவிடாமல்
மருவியேயணைவாயென்று மையல்மிககொண்டிருந்தேன்
பெருமையுடனொழுந்து பேசாமலிருக்கும்வகை
தெரிந்திடவேயதையுரைத்து இலவெனக்குதருவாயே

இராஜன்-விருத்தம்,

பாகுசேர்மொழியாயெந்தன் பாவையேசொல்லக்கேளாய்
சோகம்நீகொள்ளவேண்டாம் சொன்னசொல்மாப்பேனோனன்
போகஞ்சேரேகாதசி புசந்தியமானதாலே
வாகுடன்இலவுதக்கால் வளவுக்குபோயிவாரேன்

மோகினி-விருத்தம்.

கல்வினுக்கரசேகேளாய் காமன்தன்கணையினாலே
மெல்லியாள்மிகவும்நொந்து விரக்கோய்திருமென்றால்
இல்லும்பில்லுகளும்பேசி சேரவுமாட்டேனென்று
சல்லியமிகுகளெல்லாம் சத்தியமிதுவோகண்டாய்

வ-ம் கேளும் கல்வியிலுயர்ந்த கனகமதிமான காவலர்க்கரசே ளாக்கானல் மன்மதன் பாணத்தினாலே அடிபட்டு விரகதாபம்பொறுக்கமாட்டாமல் அணைவோம் வாருமென்றால் இல்லும்பில்லும்பேசி சேரக்கூடாதென்று சொல்கிறாய் ஆகியில் நீசொன்ன பாசம் மாசிறு மன்னவா.

இராஜன்-தரு-ஆதி-இ-ம்-சத்தசாவேரி-பல்லவி.

விஷ்ணுபக்தியை மறக்காதே யிந்த
விரதத்தையுந்தவிர்க்காதே

அநுபல்லவி,

பட்சமுடன்பரம பாகவதர்கள்கன்றாய்
பண்ணும்நாரதர்வீணை பஜனையுஞ்செய்கின்ற

பாரினில் யாவரும் காரியமாகவே
கோரியே செய்திடும் பாரணி தசமியே (விஷ்)

சரணங்கள்,

விண்ணிசமுனிதனைகளிப்பாதே யிந்தவிரதத்தையுந்தடுக்காதே
புண்ணியபாவமில்லாமல் பொருந்தியனைவோமென்றாய்
பொருடிமுன்னுனள்மாத்திரம் புத்திசொல்குரோனன்றாய்

போகமும் யோகமும் ஆகமும் வேகாதேசிய
மாகிய சேரக மகத்திய. (விஷ்)

இரண்ணியகருப்பனேறுமந்திரம் இதை யிறைஞ்சிடதார்க்குவெருதந்
திரம், கருணிக்காமுதலை கண்டித்திடவேவந்த
கதருநிரளர்பதிக்கண்ணுகலைகள்மிகவுந்தந்த

கரிமுகில் வண்ணனே னெரியுட னெவர்களும்
பிரியமா பணிந்தவர்க் கருளது புரிகதிடும். (விஷ்)

அம்புனேர்விழிமடமானே விருதமதிகமோட்சபலமுர்த்தானே
பெம்பெருமானடியிணங்கவழிவிட்டி
யிந்தவிடவேரயாதாவிகளுண்டோடி

யிகரிய்மலை காதல்கொண் டேனென
சாதனை யாசுத்த சாவேரி யோதுராய். (விஷ்)

இராஜனுக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-தரு-மட்டியம்.

இராஜன்-யேதுக்கென்னுடன் யெதிர்த்துபேசுறாய்அடி பெண்ணே
மோகினி-யிகட்சியாகவே யென்னையேசுறாய்

மோகினி-யேசுதற்காய்வந்தனனல்ல யெத்தனுடைய
பெண்ணம்பிடா யெனக்குவகைசொல்லாய்

இராஜன்-வகையுமென்னடிமுன் அனள் பொரும்அடி-பெண்ணே
மோகினி-மரிவியணவேன் சிலவெனக்குதரும்

மோகினி-சிலவுனக்குஞ்ன்தருகவுந்தருமோவுந்தனுடைய
சத்தியம்தப்பினிசடப்பது ஞ்சுகமோ

இராஜன்-நிலமையாய்செய்யும்விருதத்தன்னையே யிந்தவுள தனிலே
சிரித்திடலாகுமோகன்னியே.

மோகினி-விருதமும்தருமாங்கள்செய்குவான் யினிமேலுனக்கு
வேண்டியகாரியமுமென்னதான்.

இராஜன்-காரியமானாற்கதியுஞ்சேரலாம் விருதஞ்செய்தால்
அதிகமோட்சமென் பார்பாரெல்லாம்.

மோகினி-பாரினில்பறவசமரக்கைதயே நீய்ருஜமன்று
பருவமதனில்யென்னை துரக்கைதயே

இராஜன்-தூரவதுயித்தனுளுமல்லவே விருதமேகா
தெசியுமென்னுவுலகில்சொல்லவே

மோகினி-சொல்லுவதேதென்று முத்தர்தந்திடும்பதுகூடாவிட்டால்
தேசமிபல்லையெமக்குதந்திடும்.

இராஜன்-தேசமிபல்லையாதன்கொடுப்பேனே யதுதவிரமத்த
தென்னவேண்டியதெல்லாங்கொடுப்பேனே.

மோகினி-கொடுமுந்தன்மைந்தன் சிரசையாகிலும்-யது
கொடுக்காவிட்டால் கூடுவோம்நாமிருவருகிலும்.

இராஜன்-விருத்தம்.

அறமனை ஆனை சேனை அடக்கனுங்கேளும்தாரேன்
மரியமனவி மைந்தன் மந்தெதனைவகேட்கில்தாரேன்
பறமபாரகவதால்செய்யும் பாரணியேகாதேசி
விருதமாத்திரங்கொடுக்கேன் மேலினிகேளும்பெண்ணே

வ-ம் கேளும்பெண்ணேமோகினி யென்னுடைய ஆனைசேனை அறம
னை மனவிமைந்தன்கேட்டபோதிலும்தருகிறேன் யேகாதசிவிருதமா
த்திரங்கொடுக்கேன் பெண்ணேமோகினி

மோகினிவிருத்தம்.

மதேதல மன்னவெபந்தன் மையல்தீர்ப்பதுவுமொன்று
விசுசித மேகாதேசி விருதமாளுலுமொன்று
அகமகிழ்ந்துனதுமைந்தன் அருஞ்சிரசாகிலொன்று
யிமனதர்க்கிந்த மூன்றிலொன்றுகில்தாருய்

வ-ம் கேளும்மகாராஜனே யின்றையதினத்தில் யென்மையல்தீரும்
படியாவது மருகவேணும் அல்லது யிந்த யேகாதசிவிருதமாவதுயெ
னக்குசத்தஞ்செய்யவேணும் அதுவுங்கூடாதெதல்ருல் யென்னுடைய
மையல்திர்க்க ஒட்டாமல் தண்பேழுமையாய் யேகாதசி விருதமென்று
தெரியவைத்த வுன்மைந்தன் சிரசாகிலுமொன்று யிந்த மூன்றினி
லொன்றாகிலும் தாவேணும் மன்னவா.

இராஜனுக்கும் மோகினிக்கும் தர்க்கம்-தரு-அடதாளம்-பல்லவி.

ஆகாததற்புத்திரனே யுனக்கார்சொன்னதோ
யெனக்கேசொல்லுவாய் மானே ஆகா

ஆகுமோகாதசியென்று நீஅரிக்குமகிழ்ச்சரவோயின்று
யென்போல் ஆர்சொல்லுவார்புத்திரன்று யிதையாருடன்
சொல்லுவேனின்று பாகாக யென்முன்னில்லாதப்புறம்போடி
பாருட்டியென்னுடன் அருட்டிபேசாதே ஆகாத

மோகினி-தரு-பல்லவி

ஐயோஜீனுகவேனுனே யென்னஅன்னிதஞ்
செய்தேனென்றெண்ணியே பேசுநீர் ஐயோ

சரணங்கள்.

பையவேபாக்கிலேகேட்டீர் பின்பாகாதென்சேதன்னிபோட்டீர்
யென்னஆக்டியவிதுகாட்டீர் பெண்ணுலாவதென்னயெந்தனிட்டீர்

ஆமென்றுபேசினல் போமென்றுவிக்கீர்
ஆதாரம்வேறில்லை பாதகமோயிது (ஐயோ)

இரா-நுனக்குகெட்டிகாரி அடிதுஷ்டவழக்கில்வாயாடி
அடிதோத்தத்தில்முழுமாரி யென்னசொன்னாயடி சிபோனரி

வாதித்துயென்னுடன் சாதித்துபேசுறாய்
வந்தாயடிவார்த்தை முந்தாதடிபோடி (ஆகா)

மோகி-போடியென்றீர்யென்னநாயம்சொல்லப்போகாதுகான்னியா
யம், யிதைபோதித்ததாருபாயம் யெல்லாபொய்யாமுடிந்ததுநேயம்

ஓடக்கடக்கவின் ஓடக்காரனுக்கு
ஒட்டாரமாகவே சொட்டுபோட்டதாச்சு (ஐயோ)

இராஜன்-ஒட்டாரமாகவேபேசி-விட வொக்குமடிமகருசி-அடி
ஆரெக்குஞ்சுத்தியவேசி வுந்தவுரவுதானைக்குமோ-சீசீ

வெட்டவெளியினில் கட்டைகள்நன்றாக
வெட்டிபேகட்டிடும் கெட்டிகாரிமெத்த (ஆகா)

மோகினி-மெத்தசமர்த்தியென்றீரோ-சொன்ன-மேட்டுபேச்சிமாக்கிறீரோ
யென்னைவித்தைக்காரியென்றீரே அப்போ மெய்யாகசார்ப்பேனென்

சிக்குதொழிலுக்கு பத்திநினைக்கேதேரும் (நியே
செர்க்கினம்பேச்சிக்கிவந்ததென்னைசொல்லும் (அய்யோ)

இரா-சொல்லுக்கொருபழுதுண்டோ வுந்தன்சூதுக்கெதிரியுண்டோ
மாய்சொக்குபொடிகையிலுண்டோ மான்போல்தான்ஜெகுருக்கனக

பல்லுக்கயாதசொல்லுக்கொரிக்கிறாய் (ண்டோ
பண்பட்டநரினியெமமாத்திரப்போடி (ஆகா)

மோகி-போடியென்றாலுன் போவேனோ மதன்பூசலினு விக்கலேவே
னே, விண்போருட்டமென் குயிரோனே யிப்போதுனே விட்டே வ
கூடிமிகவிளையாடிவிசைவாக (னோ
கொஞ்சிடுவெம்வாழும் அஞ்சிடாதேதிநம் (ஐயோ)

இராஜன்-விருத்தம்.

மாசனும்மனதாறுனை வடிவுள்ளமாதேகேளாய்
தாரணிவுனக்குசொன்ன சத்தியம்மறப்பதில்லை
பாரணியேகாந்தசி யாந்தாமன்விருதந்தன்னை
காரியமாகச்செய்து கடுகெனவாரோன்பெண்ணே

வ-ம் கேளும் பெண்ணே மோகினி உனக்கு சொன்ன சத்தியம்மறப்பேனோ சிலவுகொடுமெ பெண்ணே நான்போய்வாரேன்.

மோகினி-விருத்தம்.

எத்திசை தன்னையாளும் யிறைவனே முன்புசொன்ன
சத்தியபடிக்கியென்னை தழுவியேடணையேனும்
பத்தியாயெனக்குசொன்ன பரவசமரங்கேதயிந்த
வித்துகள்செய்தால்நீரும் சிலெத்தலருகுவேனோ

இராசனுக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-தரு-அடதாளம்;

வனஜகிளுனக்குசொன்ன வார்த்தைமறப்பதில்லை மாதேமோகினி
எந்தன்மைந்தன்சிரசைவெட்டவாதிப்பதென்ன மோமனமுண்டாகினி

மோ-மைந்தனைவெட்டென்றுவழக்காடனுன்வல்லமைகிபாலனே
எந்தன்மையல்தீர்வதாகமருவினையாட வாருஞ்சிலனே

இரா-மையல்தீர்ப்பதற்குவசமல்லவேபோடிபெண்ணேமோகினி
யிதுமாபாவமென்று வழங்குமையகத்திலாகாதாகினி

மோ-அகமகிழ்க்கெப்போதும் அதிபக்தியர்செய்யும்அகிலராசனே
அந்தஅரிவிருதமெனக்கண்பாயளித்திடும்அய்யாபோஜனே

மோகினிவிருத்தம்.

புகழ்பெருங்கீர்த்திகொண்ட போஜனேசொல்லக்கேளாய்
மிகவுமேயென்னை சேர்ந்து விரகமாய்த்தீர்க்காவிட்டால்
ஜெகமெலாமொருகுடைக்கீழ் செங்கோலுஞ்செலுத்துமுந்தன்
மகனுடசிரசைவெட்டி மடியிலேபோடுவீரே.

வ-ம் கேளும் ராசனே எனக்கு விரகவேதனை பொருக்க முடியவில்லை ஆகையால் என்விரகவேதனையாவது தீரும் யில்லாவிட்டாலெசாத்திவிநுதமாவது எனக்கு தந்தமபண்ணும் அதுவுங்கூடாதென்றால் உன்மகன் தருமாங்கதன் சிரசைவெட்டி யென்மடியில போடும்மகாராசனே.

### இராசன்-விருத்தம்.

நிந்தனையாகச்சொன்ன நீலியேசொல்லக்கேளாய்
தந்திடாதேகாதேசி தவமதைகொடுப்பதில்லை
மைந்தனைக்கேட்டாயல்லோ மனமதுமகிழ்த்தானே
நிந்தையதாகவிப்போ வெட்டியேதருகுவேனே.

### இராஜனுக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-அடதாளம்.

தந்தைதன்பேர்சொல்ல மைந்தன்வேணுமென்று தவமனேகம்புரி
வார்கள் யிந்த மகிதலத்தில் பெரியோர்கள்
பெத்தமைந்தனைக்கொல்லாமல் அந்தவிருதத்தை
யெந்தனுக்களித்திடும் மன்னவா

இரா-மைந்தனைக்கொன்றுன் னிந்தைக்காளாகுறும் செர்ந்தவிருத
த்தைவிடுப்பேனோ அன்று சொன்னபாவசத்தைதடுப்பேனோ
எந்தன்மைந்தனைவெட்டியே தந்திடுவேனிப்போ
னிந்தையாய்பேசனி வந்தாயடி

மோ-வள்ளலேவுன்போலே பிள்ளையைவெட்டிட வுள்ளந் துணிந்தவ
ருண்டோ முன்னே சொன்னசொல்தள்ளுவாருண்டோ யிப்போ
வெள்ளளவாகிலும் பிள்ளையென்றெண்ணாமல்
கொன்றிடலாகுமோமன்னவா

இரா-பள்ளவழக்கிட்டு மெள்ளமெள்ளவந்தாய் கள்ளியாரடிபோடி
பேய்போல்துள்ளுகிறாய் குடிகேடி
பெத்தபிள்ளையைபார்த்துயென்சொல்லையழிக்கவோ
பேசாமல்நில்லடிபாதகி

மோ-ஒருமைதரணிக்குள் ளருமைச்சுதனைவெட்டி பெருமைபுகழு
வருண்டோ வுன்போல் தருமைபதமடைவாருண்டோ யிப்போ
தவமதைபழித்து சரசத்துடனிருக்க
ஒருமித்துவாருங்காண் மன்னவா

இரா-ஒருமைச்சதியைவெட்டி தரணிக்குள்ளரிச்சந்திரன் வுலகத்தில்
நிலைபெத்ததில்லையா-மைத்த மகிபர்களொருவருமில்லையா
வுந்தன்சரசத்துடனிருக்க வருவதில்லையடி
வெருவில்பேசாதடி போடினி.

மோ-வண்ணமகனைவெட்டி புண்ணியத்தைதேட அன்னமேலூர்சொ
ல்லிகொடுத்தார்-யிதை பண்ணலாமென்றெவர்கெடுத்தார்
நான்யெண்ணிவந்ததெல்லாம் யிடோச்செய்யாமல்
சின்னஞ்செய்யலாமோமன்னவா

இரா-சின்னஞ்செய்தேனென்றாய் முன்னும்பின் னென்னாமல் யென்
னுடன்பேசாமல்நில்லடி விருதம்-பின்னஞ்செய்யலாமோ சொல்லடி
யடி-மன்னுமால்விருதத்தை பின்னஞ்செய்யலாமோடி
புன்னுகவராளிபாடியே.

இராசன்-விருத்தம்.

தடம்பெறவுள்ளுருகின்ற மைக்யலேசொல்லக்கேளாய்
திடம்பெரமகனேடென்னை சேர்ந்தவனிகேட்டிட்டாலும்
வுடம்பெரவாளால்வெட்டி வுனக்குநான்கொடுப்பதல்லால்
யிடம்பெரயிரண்டுவார்த்தை யின்றுநான்பேசேன்கண்டாய்

வ-ம் கேளும் பெண்ணே மோகினி என்மகன் சிரசுடன்கூட என் சிரசையுங்கொடுக்க தடையில்லை காட்டிலே வுனக்கு சொன்னபிரமாணம் தவிருகிறதில்லை உன்னையும் விருதாவாய் போகச் சொல்கிறதில்லை பெண்ணே மோகினி.

மோகினி-விருத்தம்.

விரும்புமூனூர்க்கமற்று விருதமேன்றனுசரித்து
தரும்புபோனூர்ந்துஜீவன் துடிக்கவுமுமக்குசொன்ன
பெரும்புருநகதைநம்பி பெண்கள்சம்போகமென்னும்
கரும்புதின்பதர்க்கிங்கேனோ கஷ்டநிஷ்டூரமையா

வ-ம் கேளும் மகாராசனே ஆசைகொண்ட அன்னபானாதிகளை ருசிகரமானபதார்த்தங்களையும் பொசிந்து சப்ரமஞ்சத்திற்படுத்து நித்திரைசெய்து பெண்போக மனுபவத்தையும் விடுத்து ஜலபானஞ்செய்யாமல் நிர்ச்சலமாயிருந்து வுடம்பு சரகாயுலர்ந்து ஜீவன் துடிக்கும்படிக்கி வுமக்கு யிந்த யேகாதசிவிருதத்தை போதித்தபெறும்புருஷர் சொல்லை நம்பி பெண்போகமென்னும் கரும்புதின்ன வுமக்கேனோ கஷ்டநிஷ்டூரம் வுங்கள்மடியை விடுகிறதில்லை மன்னவா வீணவார்த்தை யேன்பேசுகீர் வுன்மடியைவிடுகிறதில்லை.

இராஜன்-விருத்தம்

வீணானேதவென்கையை விடுசெடிக்குள்ளிருக்கும்
ஓணானைமடிக்குள்விட்டு வுடம்பெலாங்குடையுதென்று
ஆணவர்கள்முன்பே யடங்கிபேசாமலேனோ
நாணமெல்லாம்விட்டு நடுவீதிவந்தாய்பெண்ணே

வ-ம் கேளும் பெண்ணே மோகினி வுனக்கு என்னடி வீணாய்கெட்டுபோனது செடிக்குள்ளிருக்கும் ஓணானைபிடித்து அம்மடிக்குள்விடுத்து வுடம்பெங்கும் குடையுதென்று குதிக்கிறாய் கொஞ்சமாவது ஆண்சாதி பெண்சாதியென்ற அடங்கி ஒடுங்கி நடுங்கியிருந்திடாமல் பென்னடிமடியில் கைபோட்டு யிழுக்கிறாய் வீதியில்வரலாமாவிட்டுவிடடி.

மோகினி-விருத்தம்.

வீதியில்வருமெனக்கு வெட்கம்திக்கில்லைவுண்மை
நீதியிலுமக்கிங்காரு நிகரில்லையென்றுசொன்ன

சேதியில்வந்தபின்பு தெரிந்துதேயெந்தன்காதில்
ஓதியில்லையுண்டென்பா ஞாரியட்டுமென்று

வ-ம் கேளும் மகாராசனே வீதியில்வந்துவிட்ட யெனக்குவெட்கமில்லை வேறொருவர்திக்கில்லை பதவாக்கிய பிரமாணத்திற்கு இராஜநீதிமுறைமைக்கு வுமக்கு நிகரில்லையுலகிலில்லை நீர்அன்றையதினம் அடிமைபிரசொன்ன பாவசம் ஆண்மனைவந்துசேர்ந்தபின்பு பட்டபகலாய் வெட்டவெளியாய் யெனக்குமாத்திரம் தெரியுமென்று சகியமாய் காதில் வோதுகின்றதை யிந்த ஞாரியட்டுமன்று.

இராசன்-விருத்தம்.

ஞாரியவுமேலும் முலகரியவுமுணர்ந்த
பாரரியவும்நான்சொன்ன பாவசம்பிசக்கேனு
போரியவும்பெண்புத்தி பின்புத்தியென்னுமுந்தன்
சீரியவும்வுன்குட்டெல்லாம் தெரிவிலேவிட்டாய்பெண்ணே

வ-ம் கேளும் பெண்ணே மோகினி யிப்போதிந்த ஞாரியவும் உலகமரியவும் சாலும்பேரரியவும் பெண்ணும்பிறந்தவள் நடுத்தெருவில் வருவது நன்மையல்லவே மேலும் அன்றையதினம் ஆகாயம்பூமி அறிய வுனக்கு நான்சொன்னபிரமாணம் தப்புவது ஒருபோதும் தப்ப மாட்டாது பெண்புத்தி பின்புத்தியென்னும் பேதமையென்பது மாதர்ஜனிக்கலம்மென்று சொல்வதற்கு சரியாயுனது குட்டுமட்டு விட்டு வெட்டவெளியாய் தெருவில்விட்டாய் பெண்ணே மோகினி.

பொது-விருத்தம்.

கோவெனவிவ்வாறும்பெண்குரல்கேட்டந்த
கொத்தவன்தன்சுதன் தருமாங்கன்தன்தாயை
வாவெனமந்திரிகளுமின்னமற்றுள்ளோரும்
வாதுசெய்புமோகினிமுன்வந்துநின்று
ஆவெனவாய்திறந்தழுவதடக்கித்தங்கள்
அரசனிணையடிபணிந்தரமனைக்கி
மேவெனக்கைப்பிடித்ததையும்விலக்கிவேண
மிதஞ்சொல்வார்சகிதசகவிதஞ்சொல்வமே.

வ-ம் இவ்விதமாக மோகினி மிகுந்தவிரகதாபங்கொண்டு தர்மாங்கதமகாராசனுடன் வாதுசெய்து அடிமடியிற்கையைபோட்டு யிழுத்துக்கொண்டு அரண்மனையைவிட்டு வெளியில்வந்து அழுகிற சத்தங்கேட்டு தருமாங்கதன் தாயார் சந்தியாவளியும் மந்திரிகளும் யின்னம்யிருக்கப்பட்டபேர்கள் தங்களரண்மனையைவிட்டு யெழுந்தோடிவந்து மகாராசனைக்கண்டு வணங்கி மடியிர்கைபோட்டு வாதுசெய்துக்கொண்டிருக்கும் மோகினிக்கி புத்திசொல்கிற விதங்காண்க,

சந்தியாவளி-தரு-அடதாளம்-பல்லவி.

என்னவன்னிதயம்மா எங்களுக்கிதை
யியம்பிடுவாய்கம்மா

## அநுபல்லவி.

மன்னன்வன்னிதமாயுன் மாளிகையிற்குடியாய்
மருவியிருந்துநடுத்தெருவில்வரும்படியாய் — என்

## சரணங்கள்.

மடியிற்றைகபோட்டிழுத்துநடுத்தெருவில்
வரலாமோநின்றுகொழுத்து மன்னவனுக்கு
முடியினிற்போட்டவெழுத்து விடிந்துதென்று
மூகலைவேரில்புழுத்து யினியென்செய்வோம்
அடியில்சொன்னதைதள்ளி ஆண்மைப்போனூர்துள்ளி
செடியிலிருந்துகள்ளி சேர்ந்துவந்தாள்கொள்ளி
நுடியினிற்பெண்டென்மடியில நெருப்பென்று
தூத்தும்பெண்மையான கூத்தென்தகுமெல் பார் — என்

## சந்திராவளி-விருத்தம்.

ஒண்டவந்தபிடாரி யூர்பிடாரியைபோட்டிகை
கொண்டவாறுபோலெங்கள் கொத்தவன்சுகங்களெல்லாம்
கண்டவள்மடிபிடித்து காரணமென்பால்பாக்கியம்
வுண்டவாயால்னடத்த வுண்மையைவுரைசெய்வாயே

வ-ம் சேனாய் மோகினி ஒண்டவந்தபிடாரி யூர்பிடாரியை போட்டிவைத்த கதையாய் ஆங்கள் தாரகின்று பார்த்தேக்கக்கொண்டிருக்கும் காங்கனாசனிடத்தில் சகலசம்போக யின்பசுகங்களெல்லாம் கண்டு மனமகிழ்ச்சியாய்வாழ்ந்திருந்தவள் யின்றையதினம் நடுத்தெருவில் வந்தவாறு பாலை பாக்கியத்தை வுண்டவாயால் சொல்லுமம்மா.

## மோகினிவிருத்தம்.

பாலைபாக்கியத்தையுண்டு பழத்தைதின்றெறிந்த
தோலைபார்த்தெடுத்துக்கண்ட சுகயின்னம்போதாதந்த
வேலைபார்த்தீரென்றால்யேதோ விருதமென்றென்னையோர்பாழ்
மூலைபார்த்திரென்றுவிந்த மோகத்துக்கென்னசெய்வேன்

வ-ம் சேனும் யென்பெரிய தமக்கையென்னுஞ் சந்தியாவொளியம்மா நீங்களிதுவரைக்கும் பாலைபாக்கியத்தையுண்டுபழத்தைதின்றெறிந்த தோலையான்கண்டெடுத்து அநுபவித்துக்கொண்டசுகம் இன்னம் யெனக்கு வேண்டியிருக்கிறபடியால் யிவளை மண்டபத்திலிருந்து அவ்வேலையைபாரென்றால் யென்னையோர்மூலையில் பதுங்கவிட்டுபோனதெப்படியம்மா.

## இராஜன்-விருத்தம்.

மீனினைபழித்தகண்ணி மெல்லியேமுன் புயானும்
கானனில்வேட்டைமாடி கண்டுமோகித்துவந்து

மானிகருனமாது வளம்பெருகும்விருதம்விட்டு
தானினிசேரச்சொன்னாள் தையலேயென்னசெய்வேன்

வ-ம் கேளும் பெண்ணே சந்தியாவளி முன்னாலே வேட்டைக்குப் போய் அழைத்துவந்த மோகினியானவள் ஏகாதசியில் சப்ராஉடமஞ் சத்தில் மன்மதகிரீட்டிகள்செய்து விளையாடும்படியாய் விருதஞ்செய்யவொட்டாமல் தடங்கல் செய்கிறாள்நானென்னசெய்வேன் பெண்ணே சந்தியாவளி.

சந்தியாவளி-விருத்தம்.

ஹரிஹரியென்னபாவம் அரசனார்சொன்னவார்த்தை
கரித்தினிக்கினிக்கொணாது காதிலுங்கேட்கொணாது
சாசமும்செய்துயேகா தசியில்ஸ்ரீபோகஞ்செய்தால
நாகமும்கிடைப்பதன்றி நமனுக்கிங்கிடமதாச்சே

வ-ம் ஹரிஹரி ஸ்ரீமங்காராயனே பூர்வத்தில் நாங்கள் யென்னபாவஞ்செய்தோமோ காதிலுங்கேழ்க்காதவார்த்தையை கேழ்க்கலாச்சுதே ஆகிலுஞ்சொல்கிறேன் பெரியோர்கள் சொல்லப்பட்ட வேதப்புராணங்களில் யேகாதசியில் ஸ்ரீபோகம் தாம்பூலம் போஜனம் தள்ளும்படியாய் இருக்குது நமனுக்கும் யிங்கையிடமாச்சுதே அரி அரி.

சந்தியாவளிக்கும் மோகினிக்கும்-தர்க்கம்-தரு-அட்டதாளம்.

சந்தி அரிவிருதந்தன்னில் அணையலாம்வாவென்று
அரசனையழைப்பதுமேதுக்கோ அடி அரச

மோ அகத்தால்கூடியென்னை அழைத்துவந்திப்போதந்த
சுகத்துக்கழைத்தால் மன்னன் துயரப்படுவதேன்

சந்தி துயரப்படும்படினி துரோகினிதசமியில்
சயனிக்கமஞ்சத்தில் தானழைத்தாயே சய

மோ அழைக்காமல்விடுவேனோ அன்றுசொன்னதழித்தால்
வழக்காடராஜனை மடிபிடித்திழுப்பேன் வழ

சந்தி மடிபிடித்திழுக்கறாய் மானயீனமில்லாமல்
குடிக்கேடியுனக்கென்ன குறைதானசொல்லடி.

மோகி குறையென்ன அரசனைக் கூடுவதற்காக
பிரியமுடனழைத்தால் போருட்டமேனோ

சந்தி போமாடி அரசனை புணரவேணுமென்றால்
ஆடிசெய்குவாரி விருதந்தான் ஆமடி

மோகி விருதம்விருதமென்று விளைகயென்னுடன்
வரிதிபாய்பேசுறாய் வுனக்கென்னபோடி

சந்தி போடிவாடியென்று பொங்கிமருங்கில்லாமல்
சாடுமாரிபுத்திசரியாய்காட்டாதேசாடு

மோ சரியாகாட்டாதென்றாய் சாடுமாரிதன்னை
இரவெனைக்கூடி யிட்டுவந்தாரோ யிர

சந்தி யிட்டுவந்தாலென்ன யிராஜனுக்கடிக்கியே
குட்டாயிருந்தாலும் குடிக்கலாகாத குட்

மோ குடிப்பாய்கூழுமுந்தன் குழந்தைகளுமாக
வடிப்பில்லாகூழுண்ண வாட்டமாயெனக்கு

சந்தி வாட்டமாய்மன்னனே வனத்திலே மாத்திரமே
வீட்டுக்குவந்தாயே வெழ்க்கமில்லையடி வீட்டு

மோ வெழ்க்கமில்லாயலென்மேல் விழுந்தெதக்கனை
அக்கறையாய்மன்னன் அழைத்துவந்தாரோ

சந்தி அழைத்துவந்தாலென்னை அடங்காமல்புருஷனுக்கு
கொழுத்துதின்றுநீயுங் குதிக்கலாகுமோ

மோ குதிக்கிறதில்லூசார் கும்பலாய்கூட்டிடும்
யெதுக்காகவந்தவளென்றறியட்டும் யெதுக்காக

வேறு-சந்தியாவளிக்கும்-மோகினிக்கும்-தர்க்கம்-தரு-ஆதி

சந்தி அரியவேளுமோயிந்த அதிசெயத்தேவருனக்
கரிவில்லையா மனமுரியில்லையா யிது
சரியல்லபோடிசும்மா யிது சரியல்லபோடிசும்மா

மோ சும்மாபோடியென்றென்னை சுல்பமாய்சொல்லமன்னன்
சொன்னவிதம் யிது யின்னவித முனக்
கென்னவிதம்தெரியும்போ வுனக்கென்னவிதம்தெரியும்போ

சந்தி போபோவென்றென்னை யிங்கை பொங்கிவிழுகிறாய்னி
பொருந்து மனம் வெகு திருத்தமுடன்
நிலை நிரித்தினாலும் தெரியாதோ நிலைநிரித்

மோ தெரியுமென்னுயிந்த ஜெகமாளுமகாராசன்
செப்பினதும் நிலை தப்பிதம்வுனக் கொப்பிதமாகுமோ
சொல்லாய்வுனக்கொப்பிதமாகுமோ

சந்தி சொல்லுவதெப்படினுன் தேசமியோர்போதில்
காமசோக முடன் அதிவேகமதாய்
ஸ்ரீபோகமும் செய்யலாமோ ஸ்ரீபோக

மோ செயலாகாதென்றால் மன்னன்சொன்னதரிய
பூமிதனியு மெய்யவர் கூவியுமே பிரிந்தாவியும்
தரியாதென்றார் பிரிந்தாவியுமே தரியா

சந்தி பிரிந்திருக்கார்சொன்னார் பொல்லாநரகத்திற்கு
போகவுமே சை யோகமதாய் பெண் போகமுமே
யாகுமோ பெண்போகமுமேயாகுமே

மோ ஆகாதென்று னுன்சொல்லை ஆர்கேழ்க்கப்போறரிங்கை
அரசனுங்கென்மேல்சரசம்வேண்டாமகன்
சிரசாகினுந்தரச்சொல்லுமகன் சிரசறிது

இராஜன்-விருத்தம்.

பிரியமாயெனக்குரைத்த பேதையேசொல்லக்கேளாய்
தரைபொருதுடையிலாளும் தருமாங்கதன்சிரசை
சுருக்கெனவெட்டித்தந்தால் சொர்ப்பெருவிருந்தன்னை
பெருமையாய்செய்யுமென்றாள் பெண்ணேனுனென்னசெய்வேன்

வ-ம்-கேளும் பெண்ணே சந்தியாவளி அவளுடன் பின்னைக்கிச சமரச்சூடி விளையாடினால் ஆச்சுது யில்லாகிட்டால் நமது குமாரனுகிய தருமாங்கதன்சிரசைவெட்டி அவள்மடியில் போட்டு விருந்துசெய்யச்சொல்கிறாள் யிந்த பாதகத்துக்கென்னசெய்வேன் பெண்ணே சந்தியாவளி.

சந்தியாவளி-தரு-ஆதி-இராகம்-காம்போதி.

யென்னபாவஞ்செய்தோமோ தான்செவர் தானிப்படிசெய்வார்
யென்னென்றுசொல்வேனையோ மன்னவனே
முன்னானுஞ்செய்தபாவங்கள்மூண்டதோ யிப்பிறப்பினில்
மூதுத்தனர்கிறுமைபிதுவோ மன்னவனே
மைந்தன் தலையைவெட்டி மகிட்சியாயிருப்பாரும்
வையகத்தையாளலாமோ மன்னவனே
விந்தையாயிவ்வார்த்தைகேழ்க்கவேகுதே யென்குடலையோ
விபரீதமென்னமோ மன்னவனே

மோகினி-விருத்தம்.

குறையெனக்கொன்றுமில்லை கொத்தவன்கேவியாரே
யிருவரும்சேரும்போது யிரண்டுசெல்வமுங்கேட்டேன்
அருமையேகேட்டதெல்லாம் அன்புடன்தாரேனென்றார்
தருணத்தில்கேட்டால்ராஜன் சங்கடப்படுவதேனோ

வ-ம்-கேளுமம்மா சந்தியாவளித்தாயே கானகத்தில் காந்தருவிவாகமாக கூடுங்காலத்தில்நான் இரண்டுவரங்கேட்டேன் அது யென்னவென்றால் யெப்போதும் யென்னை பிரியாமலிருக்கவும் கேட்டதெல்லாம் கொடுக்க கேட்டுக்கொண்டேன் இந்ததருணத்தில் யெதைக்கேட்டபோதிலும் சங்கடப்படுவதேனம்மா.

சந்தியாவளி-தரு-கண்ணிகள்.

அம்மாநானென்னசெய்வேன் அனியாயமாகயிந்த
அருமைமகனைவெட்ட அரசன்துணிந்ததம்மா
இம்மானிலத்தனில் யெனதாபுத்திரனப்பா
யென்னகுற்றஞ்செய்தானோ யெந்திழைவனக்கம்மா

பேதமில்லாமனுந்தன் பிள்ளையும்பிள்ளைதானே
பொருத்துமனதுபிள்ளை பிட்சைதருவாயம்மா
அன்னையும்நிதானம்மா அருமைமகளையின்ற
அழகுதருமாங்கதன் அவனியையாளுகின்றான்

மோகினி-விருத்தம்.

நல்லதப்படியாகட்டும் நாளையதினமோசிப்போம்
வில்லணிமதனன்றுஜன விடுங்கணையாலேபட்டு
மெல்லியேவிரகதாபம் மேவிடுதென்றுசெய்வேன்
அல்லெனுங்குழலினளே அட்டிணிசொல்லவேண்டாம்

வ-ம் கேளுமம்மா சந்திராவளி யெனக்கானால் மன்மதன்பாணத் திறுலே அடிப்பட்டுவிரகதாபம் மேலிட்டுயிதை குறித்து நாளைதி னம் யோசிப்போம் யின்றைய தினம் யென் காமவிடாய்றுஜன் தீர்க் கவேணுமம்மாதாயே

சந்திராவளி-றுஜனுக்குசொல்-விருத்தம்.

அண்டமூமிடிந்திட்டாலும் அலைகடல்பிறண்டிட்டாலும்
தொண்டேதோரேகாதசி தொடுப்பதுதானையல்லா
மண்டலமாளுகின்ற மகனைனுங்கொடுத்திட்டாலும்
வண்டிந்தகீர்த்திமேலும் வலுகெலாம்புகழுந்தானே

வ-ம் கேளுமென் பிராணநாதா அண்டசராசமிடிந்திட்டாலும் அலைகடல்பொங்கினாலும் நமெடுத்தவிஷ்ணுவிருதத்தை கைவிடப் போகாது அவனிஷ்டப்படிக்கு பிள்ளையின் சிரசை அறுத்து கொடுத் து ஏகாதசிவிருதம் நடப்பித்தாலுநமது சத்தியமும் கீர்த்தியும் நிலைநி ற்கும் பிராணநாதா.

இராஜன்-வ-ம்-ஆனால் தருமாங்கதனை-அழைத்துக்கேழ்க்கலாம் பெ ண்ணே

இராஜன்-கவி.

கட்டியகாரா கடுகெனவோடி
திட்டமாயென்றன் சுதன்தனையிப்போ
கட்டிகைபோற்றி காரணமுரைத்து
பொட்டெனயழைத்து புகழ்பொரவாராய்

கட்டியன்-வ-ம்-அப்படியே அழைத்துவருகுரேன்சுவாமி.

கட்டியன்-விருத்தம்.

தருமாங்கராஜாவும்மை தந்தையுந்தாயுமாக
இருவருமாகச்சேர்ந்து யிட்சணம்யென்னைவோடி
பிரியமாயழைத்துக்கொண்டு புறப்பட்டுவரவேசொன்னார்
திருவேநான் யென்சொல்லவேண்டாம். சுக்ஷணத்தினில்போவோம்வாராய்

கன்

தருமாங்கதன்-விருத்தம்.

பிரியமாயென்னைவேண்டி பெத்ததாதந்தையாரும்
வரவெனவெமையழைத்தால் வருவதற்கட்டியுண்டோ
அரசர்கள்பணியுமெந்தன் அன்புள்ளதந்தைதன்னை
பெரிமையாபோற்றிசெய்து பின்புநான் வருகுவேனே

தருமாங்கதன் தாய்தந்தையிடத்துக்குவருகுறதரு-தாளம் திரிபுடை.

பல்லவி.

இராஜர்குஜர்புகழ் தருமாங்கனெனு மகாராஜன்வந்தானே
விசுத்தியொளி மணிமுடியிலக
மிஞ்சகலையெகுஞ்சரிங்கிட பக்கத்தின்மந்திரிநெரிங்கிட (இரா)

சரணங்கள்.

முரசுயெக்காளை பேரிகைனுதமசங்கம் முன்பின்யோசையிட முழங்
முனைசெய்துந்துமி இசைசெய்தம்புரு (கிடமிர்தங்கம்
மெத்திக்கும்மொலித்துவழங்கிட சுத்திக்கடலொத்துமுழங்கிட (இரா

மாதர்கவரியிருபுறமும்வீச மறையவர்கள்மனுநெறிதன்னைபேச
போதமுனிவர்கள் நீதிகலைசொல்ல
போகத்திர்க்கிந்திரனுமுக வாகத்திரசந்திரனுமக (இரா)

வங்களர்கலிங்கர்கொங்கணர் மாராட்டிதேசத்துமலையாளருங்கூட
தங்கவிடமிலா தெங்குமுலாவிட
சட்டப்புனைசேனைகள்பின்செல்பட்டப்பரியானைகள்முன்செல(இரா)

தருமாங்கதர்-வெண்பா.

விந்தையேகாதசியின் விருதமிருந்தென்னையீன்ற
தந்தையேயுந்தன்மலர் தாள்போற்றி-சிந்தைதனில்
அரசுதனையுன்னுமென் னையாவென்னன்னையிட
மிச்சுதனையுமழைத்ததேதன்.

வ-ம் மறையாதி நூல்களாலோதுதற்கரிதாகிய யேகாதசிவிருதம
னுசரித்து அடியேனை பயின்ற என்தந்தையே சறுணம் சறுணம்தே
வரீர் யிச்சபையில் என்னை வரவழைத்தகாரணம்யாதோ அதனை திரு
வாய்மலர்ந்தருளவேணும் தந்தையே.

இராசன்-தரு-ஆதி-பல்லவி.

ஐயாவாடாயெந்த னழகேகண்மணியேவாடா
வையகமரசளிக்க வந்திடும்சுந்திரமந்தனேநீதான் ஐயா

சரணங்கள்.

பத்தரைமாத்துதங்கமே பசசையேபுஷ்ப
ருகமே பவழமே மாணிக்கமேயென்
பகலவனொளியென மதிவதனழகே ஐயா

பேசும்பசுங்கிளியே பொற்சிலையேபொன்
மலரே பூதலத்தோர்புகழும்
புத்திர சித்திர ரத்தினமேதான் ஐயா

மதுரைவடிவழகை மாசிலாமணியேயெந்தன்
மடிமீதினிலேறிட நீயும்
மகனேயென்மன மகிழுவதாக ஐயா

உருக்மாங்கதராசன்-விருத்தம்.

ஆழிசூழுலகமெல்லாம் அரசாளுமன்னரோடு
சூழவேகொலுவிருந்து செங்கோலுஞ்செலுத்திமேலும்
வாழியென்றெவரும்போற்ற மகமேருக்கொப்பாநீயும்
தாழ்விலாதாண்டிருப்பாய் தருமாங்கதனேவாழி

சந்தியாவளி-விருத்தம்.

ஐயனேவாடாயெந்த னழகுகண்மணியேவாடா
வெய்யவன்குலத்துதித்த வீரல்தருமாங்கதனேவாடா
வையகமரசளிக்க வந்தயென்மகனேவாடா
செய்யெனயெந்தன்கண்ணே செல்வமேவாடாவாடா

தருமாங்கதர்- விருத்தம்.

சந்திரவதனம்போன்ற தாயேயுன்சொல்லக்கேளாய்
இந்தையுங்கலங்கினின்று திருமுகம்வாடியேனோ
சிந்தையாயிருப்பதென்ன விபரமாயெந்தனுக்கு
எந்தனோடினிதாநீயும் மியம்பிடும்தாயேபோற்றி

வ-ம் கேளும் என்னம்மணி சந்திரவதனத்துக்கொப்பானவுன் முகம்வாடி யிருப்பதென்ன தெரியச்சொல்லுமம்மா தாயே.

சந்தியாவளிக்கும்-தருமாங்கதனுக்கும்-தர்க்கம்-தரு-அடதாளம்.

யென்னமென்றிதை மகனேயெப்படி சொல்வேன்
யிந்தவோர்விதி வந்ததென்னசெய்குவேன்

தரு செப்பலாவதேன் அம்மா செயன்யாவுமே
செய்தக்கமோ யேதுக்தெரிகிலேனம்மா

சந்தி குத்தமொன் றில்லை மகனே கொத்தவனுமே
கொண்டுவந்தவளுன்னைக் கொல்லசொல்கிறாள்

தரு சொல்வதேனம்மா மன்னன்சொன்னவார்த்தையை
சூதுசெய்யாமல் ராசன் செலுத்தவேணுமே

சந்தி செலுத்தாமலென்ன யேகாதசியிதன்னிலே
சோச்சொல்கிறாள் வுங்கள் சிறியதாயாரும்

தரு ஸ்ரீயதாயார்க்கேயேர்தன் சிரசைதந்துமே
செய்யலாகுமே யேகாதசமிநோம்பையும்

சந்தி தசமிநோம்பையும்வுந்தன் சிரசைதந்துமே
செய்துநுங்களும் செங்கோல்செலுத்தநல்லதா

தரு நல்லதேயம்மா ஆதிமூலம்பாதத்தில்
காலுஞ்சேர்ந்துமே நல்லகதியடைவனே

சந்தியாவளி-விருத்தம்.

எப்படிமகனைவுன்னை யீன்றதோர்வயர்குளிர்ந்து
எப்படியுனையிழந்து யேக்கமும்யில்லாமல்தான்
யெப்படிமனம்பொருத்து யிருந்திடுமென்றுசொன்னாய்
யெப்படிவுலகுதன்னில் யிருந்துநான்வாழ்வேனப்பா

வ-ம் கேளும் யென்னுசைக் கண்மணியே வுன்னை மோகினிக்கீந்து யெப்படி யிருப்பேனப்பா.

தருமாங்கதன்-தரு-ஆதி-பல்லவி.

நீரின்குமுளியிந்தகாயம்-யிதை
நிஜமென்றெண்ணுவதென்ன ஞாயம்

அநுபல்லவி.

பார்த்தையளந்திடும் பாத்தாமனிடற்செயல்
படிநடவாமல்வேறே பலன்கிடைக்குமோநீசொல் நீரின்

சரணங்கள்.

யெண்ணிக்கிருந்தாலுங்காயம் பிடிமண்ணுக்கிரையாகவேசாயும்
பெண்ணென்றும் புவியென்றும்பொருளென்றும்
புவிக்குள்ளேபேராசைகொள்வது வினுகயிதற்குள்ளே நீரின்

அம்மணிநம்மயெலன்னவாமோ அயனெழுதினதாம் தப்பிபோமோ
செம்மையாயரிபதம் சேர்வதேபெரிதென்றுதெரியாதோ வுனக்கொன்று, ஜெகத்தினில்கலமென்று நீரின் நீரின்

வுலகவாழ்க்கையதைநம்பி நீயுருகிறாய்யேன்சும்மாவெம்பி
வலிமையில்மிகுந்து நூறாண்டிலும் வருபிடர்
மாண்டுபோகலாசென்று வரியாயோமானிடர் நீரின்

வேறு-தருமாங்கதனுக்கும் சந்தியாவளிக்கும் தர்க்கம்-தரு-ஆதி.

அப்பனேகண்ணின்மணியே ஆதரவா ஆசாள்வா-என்று
அகமகிழ்ந்திருந்தேனே அப்பனே

இப்பாரினிலுனக்கு ஒப்பொருவருமுண்டோ யெப்படிமன்னன்
மனதொப்பியேவுன்சிரசை கொப்பெனதாரேனென்று
ஒப்பிக்கொண்டாயோ அப்பனே

தரு ஏதுக்குவெதும்புகிறாய் யென்னம்மாமினிசும்மா
யிந்த-யிடருகவென்னசெய்யும் ஏதுக்

மாதவன் தன்னை நிதம் போதனைசெய்தபேர்க்கு
நீதொன்றுவருமென்று ஜெகத்தினில்நினையாதே ஆதர
வாகுமாதிமூலனே நினைத்திரு ஏதுக்

சந்தி மகனேநானென்னசெய்வேன் மன்னன்மீது வெகுவாது
அந்தமாதுமோகினிசெய்கின்றாள் மகனே

ஜெகமாளுமகாராசன் சிந்தைகலங்கிப்போது
மகனென்றுபாராமல் மைந்தாயுன் தலைவெட்டி
ஜெகன்மோகினிக்கீந்து செலுத்துவோன்விருதமென்றாள் மகனே

தரு விருதத்துக்கெப்போதுமே விசாதமாராதவார்த்தை
விளம்புமோனிகேளம்மா விருதத்துக்கெப்போதுமே

சிறியதாயார்க்கெந்தன் சிரசைதந்தேயிப்போது
அரியிடவிருதத்தை அகத்தினிற்செய்திருந்தால்
நரகமென்பதுயில்லை பரகதியடைகுவோம் விருதத்துக்

தருமாங்கதன்-விருத்தம்.

பெற்றனைபெத்ததாயே யென்னிடவம்மாகேளாய்
சிந்தையேவெரென்னவேண்டாம் திருமாலினருளினாலே
யெந்தனுநலகுதன்னில் யிருந்திட்டபோதிலுந்தான்
செந்திருமாலிடத்தில் சேர்வதேசலந்தானம்மா

சந்தியாவளி-விருத்தம்.

தடக்கலுஞ்சொல்லாதென்று சாத்தியமைந்தாகேளாய்
யிடக்கொடுத்துவனைப்பெத்து யின்றுனன் பிரிவதாக
வடவாளித்துயின்றோன்செய்த வஞ்சனைதானேயிதுவும்
கடந்திடயெந்தனுள்ளம் நடுக்குதென்செய்வேனப்பா

உருக்மாங்கதன்-விருத்தம்.

பரிவிலாகொடுமைகொண்ட பாவிநானேகாதேசி
விருதமேதருவாயென்று விருதமென்பதனைதள்ளி
அரிமையாய்கேட்டதெல்லாம்அளிப்பேனென்றுரைத்தேனுந்த
சிரமதைதருவாயென்றாள் நீயவளர்களிப்பேனென்றேன் (வ

வ-ம் கேளும் யென் கண்மணியே கொடிய பாதகியாகிய மோகினி
தாம்செய்யும் ஏகாதசிவிருதத்தை தத்தமாய் குடுமென்றாள் அதுதவி
ரமற்றெனவெல்லாம் வேண்டாமென்று உன்சிரசை கேழ்க்கிறான் நா
னென்னசெய்வேன் மகனே

தருமாங்கன்-விருத்தம்,

பிரியமாயென்னைப்பெற்ற பிதாவைநின்னிருதாள்போற்றி
சிறியதோர்சொத்தன்தாய்க்கி செப்பினபடிக்கியென்றன்
சிரசினைவெட்டி அந்த தேவிக்கிகுடுத்தாரீறும்
பெருமைபாம்மேகாதெசி பிரதிக்கினைநடப்பிப்பீரே

வ-ம் பிரியமா என்னை பெற்றுவளர்த்த தந்தையே தேவரீர் என்சிறிய தாயாருக்கு சொல்லிவந்த பிரகாரம் தடங்கலில்லாமலென்சிரசை கொடுத்து யேகாதசிவிருதம் நடத்தும் பிதாவே.

இராசன்-விருத்தம்

தெள்ளிநற்புகழைக்கொண்ட செல்வமேசொல்லக்கேளாய்
வள்ளமென்முலையரான மங்கைதன்னுரையாலே
பிள்ளையைக்கொன்றேனென்று பெறும்பழியாகத்தானே
வுள்ளனுள்ளவாக்குமென்னை வுரைக்குமிவ்வுலகந்தானே

வ-ம் கேளும் என்னுடைக்கண்மணியே ஒருபெண்ணுடைய மாய்கையினாலே பெத்தபிள்ளையைக் கொன்றேனென்று யிவ்வுலகம்பழிக்கும் மகனே.

தர்மாங்கதன் -விருத்தம்.

மாரிலாபுகழைக்கொண்ட மன்னவர்க்கரசே கேளும்
பாரினில்சோழராசன் பாலன்தேர்கீழ்விழுந்து
காராவுங்கன்றுசாக கதிபெறமுஜனிதி
சாரமாய்மகனைகன்றுய் தண்டனைசெய்துவிட்டார்

வ-ம் கேளும் என்னைப்பெற்ற தந்தையே அடியேனொரு விண்ணப்ப உலகத்தையாளப்பட்ட ராஜாக்களில் சோழராசன் குமாரனாகிய வீதிவடங்கள் கேளிவிலாசமாய் தெருவில் ரதமேரிவருகையில் ரதசக்கரத்தில்விழுந்த யிறந்துபோன காரம்பசுவுக் கன்றுக்காக தன்பிள்ளையென்று பட்சம்வையாமல் நீதியாய் விசாரித்துதண்டனைசெய்தார் நீங்கள் யிதற்காக சந்தேகப்பட தேவையில்லை என் சிறியதாயார்க்கு யென் சிரசைகொடுத்துவிட்டு ஏகாதசிவிருதம் நடத்தும் ஐயா.

இராஜன்-விருத்தம்.

குலத்தினிலேயுன்போல் புகழ்பெரிதாவிளங்கும்
நீதிசாஸ்த்திரங்களைச்சொல்ல நினைக்கிணையில்லைமைந்த
வாதனைபடுவதாக வாளினால்வெட்டியுன்னை
காதைதனைக்கிவதற்கு கருத்துமெதுணிபலாமே.

வ-ம் கேளும் யென்கண்மணியே மனந்துணிந்து யென்னமாவுன்னை வெட்டி அந்த காதைதனைக்கிசப்பேனப்பா.

தருமாங்கதன்-விருத்தம்.

ஆமிதுமெய்தானையா அரிச்சந்திராஜனென்போன்
மாமுனிக்குரைத்தவார்த்தை மாறிடலாகாதென்று
பூமியும்பாலைசேனை பொருளொடுபெண்டைவித்து
சேமமிஷ்டைகளைவிட்டு நீச்சனுக்கடிமையானான்

வ-ம் கேளும்மெனையாலே அரிச்சந்திரமகாராஜனென்பவர் விசுவாமித்திரர்க்கு சொன்னவார்த்தை தப்பாமல் ஆனை சேனை பரிவாரமும் விட்டு பெண்சாதி பிள்ளையையும் வித்து தானும் புலையனுக் கடிமைபட்டு சத்தியம் தவறாமல்சத்தியகீர்த்தியென்று பேரெடுத்தார்அப்படி சத்தியம் தவறாமல் கீர்த்திபெருவதே வுத்தமம் என் தந்தையே.

தருமாங்கதருக்கும்-சந்தியாவளிக்கும்-தர்க்கம்-தரு-தங்கச்சிந்து

ஆதியந்தம் அருமறைநீதி சோதிபரம்பொருளே
ஸ்ரீ அரி-சுதனேவுன்பதஞ் சேர்ப்பாய்-ஸ்ரீ அரி-சுத

சந்தி-மைந்தாயுந்தலையிப்போ மனந்துணிந்துவெட்ட
வந்தாரென்றுசெய்குவேன் யென்மகனே வந்தா

தரு-மாதாவேயென்னம்மா மனம்நொந்தழுகாதே
வேதிலைதீர்த்திடுவார் ஞானர் விதனமேனபடுகுராய்

சந்தி-தயமாகபஞ்செய்து தனயனேவுன்னைபெத்தேன்
அபலமாய்மாள்வாயென்று அப்பனே அறியாமல்

தருமாங்கதன்-விருத்தம்.

உனக்குநான்பிள்ளையென்று ஒதியதாயேகேளாய்
மனக்களிப்பாகநீதி மாந்திடவாகாதம்மா
கனக்கதோர்மாத்திர்பூகாய் கனியிலேவேரேபன்றி
நினைக்கவேயாகாதம்மா நிதிசெய்யுமன்னரூனோர்

வ-ம் கேளுமம்மா தாயே வுனக்கு நான்பிள்ளையென்றும் யெனக்கு நீ தாயென்றும் பட்சம்வைத்தாண்டானால் சத்தியம் நிலைநிற்கமாட்டாது அறசாட்சிக்கு விரோதம் வருமம்மா தாயே.

சந்தியாவளிக்கும்-தருமாங்கதனுக்கும்தர்க்கம்-தரு.

சாமருகம்-அட-தாளம்.

மைந்தனேவுன்னைவாளினால் வெட்டியேமாபாவிக்கு
மனம்நொய்ய வந்ததப்போமாயமோ
யிது பாயமோ யென்ன மாயமோ மாயமோ.

தரு-மாயமாவதுயென்ன மாயனருளில்லாமல்
வல்வினை வருமோ யின்பந்தருமோ துன்பந்தருமோ
மாதாவே அந்த ஞாதாவே துணை மாதாவே

சந்தி-மாதுமோகினியுந்தன் மாமுடிதார்ச்சொல்லி
மன்னனேடெடுத்து மடிபிடித்து தெருவிலிழுத்து வைகுறுள்
வம்புசெய்தற வவள் வைகுறுள்.

தரு-வைகுறுளென்றுயே மன்னன்சொன்னசத்தியம்
மாறிடப்போகா விடப்போகா சரியாகாகடந்தால்
வைவாளேவம்பு செய்வாளே அவள் வைவாளோ

இராஜன்-விருத்தம்.

தேனினுங்கொடுமையான தியவள்சொல்தட்டாமல்
வேனினுமரியராஜர் விளங்கியசபையின்முன்னே
ஆனினுமழகாவுன்னை அனைவருமிகவேகாண
வாளினால்நீவெட்ட மனமதுவருகுமோதான்

வ-ம் ஹரிஹரி யிந்த ராஜசபையில்வுன்னை யெப்படி வெட்டுவேன் மகனே

தருமாங்கதர்-விருத்தம்,

பெற்றிடும்புதல்வனென்று பிரியம்வைத்திரக்கம்வைத்தால்
வெற்றிகொள்ளோகாதேசி விருதமும்கவிரஅய்யா
முத்தியசாபத்தானும் போகினிவிடேனேயா
வுத்தமோர்வாய்மைதன்னை வுறுதிசெய்வதுவேதர்மம்

வ-ம் கேளும் யென்னைப்பெற்றதந்தையே பிள்ளையென்று மனதில்கிலேசம் வைக்கவேண்டாம் நீரெடுத்தவிருதமும் முடியாது கீர்த்திவிளங்கும்படி சத்தியத்தை நிலைநிறுத்தும் என்தந்தையே.

இராசன்-தரு-அடதாளம்

அரிஅரிநானென்னசெய்வேன் அவனியாள்மகனேநான்
அழிக்கவும்ஜெகம்பழிக்கவும்

ஆனைமுனிவர்போற்றும் நாதனுவுந்தன்செயலோ
அய்யனேஅழிகையனே

ஞானிலத்தோர்கள்நகைக்க நான்முகனெழுதினானோ
நறநடபரிபூரணா

தன்னைமோகினிக்கியென்று நானுரைத்தேன்வுண்மையாக
நட்டிலேபெருங்காட்டிலே

கேட்டதெல்லாந்தாரேனென்று கிளிமொழிக்குரைத்துவிட்டேன்
கெட்டியாய் சத்துருவ்டியாய்

அந்தவார்த்தைதவிரிடாமல் அரிமைமகனேநானேவெட்டி
அளிக்குசேஷ்டினங்களிக்குரோன்

இருஜன்-விருத்தம்.

நிலையைக்காப்பதுவும் நிஜமெயந்தா
னீனிலமுமதர்க்குள்வரு நிதிபுடநலல
கலையைக்கேட்கினுந் தருவேன்கனகரத்ன
கலபாளமுங்கனிவான் கடிகொள்மதார்
முலையைக்கேட்கினுந் தருவெனயெந்தன்பாக்கிய
முத்தந்தருவேனிறத்ன முடியோடெந்தன்
தலையைக்கேட்கினுந் தருவேன் தசமியேகாதசி
துவாதசிவிருதம் தவிரேன்பெண்ணே.

(வ-ம்.) கேளடிபெண்ணேமோகினி, யானுனக் கன்றுசொன்ன நிலையைக் காப்பாத்தவேண்டியதில்லை யென்று சொல்லமாட்டேன் இப்போது இந்த சம்புத்தீவுபெனும் நாடுநகரமும் ரதகெஜதுரகபதாதிகளும் வேண்டிய கனகங்களும தங்கசரிகை சேலைகளும் சக்கரை முப்பழங்களும் திவ்விய அன்னமும் யானிதுவரைக்கும் கலியாணஞ்செய்து கலந்து சுகம்னுபவித்த நூரு ஸ்திரீகளுடன் முலையையும் பாக்கியமுத்தந் தருவதும் மன்றியில் நவரத்ன கிரிகிடமணிந்திருக்கும் மெனது சிறத்தைக்கேட்டாலுந் தருவேன் யேகாதசிவிருதந்தவிரேன் பெண்ணே.

மோகினி-விருத்தம்.

வுன்தலைகொடுக்கவாங்கி வுரியில்வைத்தழகுபார்த்தால்
யென்தலைக்கேறுமையல் பெவ்விதமிறங்குத்தந்தை
முன்தலைக்கொடுப்பாலெங்கு முரைசரக்தரசாள்பிள்ளை
தன்தலைகொடுக்கவுள்ளத் தயிரியமுண்டோசொல்வாய்.

(வ-ம்.) கேளும் யென்பிராணவல்லபா வுமது தலையைவாங்கி வுரியில்வைத் தழகுபார்த்தால், என் தலைமண்டைகொண்டிருக்கும் விறகம் பெவ்விதத்தாலடங்கும், தகப்பனுக்குமுன்னே தலைகொடுப்பாய் பேரிகையறைந்து பிறபலமாய் செங்கோல்பிடித் திளவரசாளும் தறதலைப் பிள்ளையாகிய தருமாங்கன் தலையைக்கொடுக்க தயிரியமுண்டா சொல்லும் இருஜனே.

தருமாங்கதன்-விருத்தம்.

நாயேன்செய்தபுண்ணியமோ யின்னகர்செய்தபுண்ணியமோ
நீயேசெய்தபுண்ணியமோசொல் நின்முன்னோர்செய்தபுண்ணியமோ
தாயேயென்தலையைக்கேட்குந் தருமர்தருமர்சும்மா (முன்
வாயேமூடிக்கொண்டு வைத்திருக்கின்றீரையா.

(வ-ம்.) கேளும் தந்தையே அடியேன்செய்த புண்ணியமோ அல்லது னினிளவரசுசெய்த புண்ணியமோ, தேவரீர்செய்த புண்ணியமோ யென்னைப்பெத்த சித்தன்னை யென்தலையைக்கேழ்க்க தமகா

தக்ஷணமருந்துகொடாமலும், மருவுத்திரவு சொல்லாமலும் வாயே
ன்மூடிக்கொண்டு நாமதாயிருக்கிறீர் யென்தந்தையே.

இராஜன்-விருத்தம்.

மண்டலமழிந்திட்டாலும் வானுலகிடிந்திட்டாலும்
கொண்டிடுவிரதம்பாழாய் குறைந்துமேதவிரிட்டாலும்
கண்டிருமொழியாலென்ன காரணம்நேர்ந்திட்டாலும்
திண்டிறல்மகனைவுன்னை சிதைப்பேனுன்வாளினாலே.

(வ-ம்.) வாழும் தருமாங்கதா, இந்த பூமண்டலமழிந்திட்டா
லும் தெய்வலோகம் பாழாயிடிந்திட்டாலும் நானெடுத்த யேகாதசி
விருதம் குறைபடாமலும், இந்த பாதகியாலே யென்னகாரணம் நே
ர்ந்திட்டாலும் அவள் வுன் தலையைக்கேட்டபோதே வுன்னை வெட்ட
துணிவேன் மகனே.

தருமாங்கன்-விருத்தம்.

தந்தைசொல்மிக்கமந்திரம் தானொன்றுமில்லையென்று
விந்தைசொல்லொன்றையிங்கை விளம்புவதென்னயிப்போ
யெந்தைசொல்லொன்றைமந்திரம் மென்றிருக்கின்றபோதே
சிந்தைசொல்லொன்றேயெந்தன் சிரமறுத்தருள்செய்வீரே.

(வ-ம்.) சரணம் சரணம் யென் தந்தையே தந்தைசொல்மிக்க
மந்திரமில்லையென்று அவ்வையருளிச்செய்திருக்க அதனன்றியி
வித்தையாய் வேறொரு மந்திரத்தை விளம்பவேணுமோ தேவர் வ
ர்த்தையை யடியேனுக்கு மந்திரமென்று மனமும் வாக்கும் வொ
ன்றாய் தலைகுனிந்திருக்கிறேன் சிரத்தை துண்டித்துக்கொ[illegible]யென்த
ந்தையே.

இராஜன்-விருத்தம்,

முத்திக்கிமுதன்மையான மூலக்காருண்யனேபோற்றி
சித்தியேதருவாய்போற்றி தேவர்கள்தேவாபோற்றி
பத்தியாயேகாதசி பலனைத்தருவாய்போற்றி
சத்தியேயேந்தினின்றேன் கடவுளேபோற்றிபோற்றி.

(வ-ம்) முற்றிக்கிமுதன்மையான மூலக்காருணனே யெங்கு
நிறந்தரமான பறுபரப்பொருளே சரணம் அடியேன் சத்தியம் த
ருமல் வெட்டுகுறேன் விருதத்துக்கு வின்னம் வறுமல்காறும் சாமி.

மோகினி-விருத்தம்.

மட்டில்லாகீர்த்திக்கொண்டு வாழ்கதிர்குலத்துமன்னா
கெட்டியதாகவாளைக் கையினிலெடுத்தபோதே
யிஷ்டமாமகனைவெட்டி யெனக்களித்ததுபோலாச்சி
சட்டமாய்வாளென்கையில தந்திடுசரணந்தானே.

(வ-ம்.) மட்டடங்கா கிறதிக்கொண்டு செயத்தோடும் வெத்
மாலையைப்பூண்ட கதிர்குலத்தரசனே நீர் கையிலேவாளெடுத்தபோ
தே வுன்குமாரனைவெட்டி யெனக்கு கொடுத்தது போலாச்சி வும
கையிலிருக்கும் வாளையிப்படி காலும் ராஜனே,

இருசன்-விருத்தம்.

பொன்னுடைமைகளென்னாலும் புணர்முலைத்திருவேகேளாய்
யென்னிடவாளைக்கையில் விலக்கவேவேண்டாங்கண்டாய்
சொன்னசத்தியத்தையானுன் சொர்ப்படிமுடிக்கவேனும்
வுன்னிடசப்தம்போகா தாகழ்ந்துமேவாங்கிக்கொள்வாய்,

(வ-ம்) கேளும்பெண்ணே மோகினி வுன்னை வொருக்காலும் வெருக்கிறதில்லை, மகனை வெட்டவேண்டாமென்று சொல்குறையே னெடுத்த யேகாதசிவிருதம் எப்படிமுடியும், யென்னிட பிறதிக்கினை யெப்படிநடக்கும் சுகமாய் தருமாங்கன்சிறசை வாங்கிக்கொண்டு வுன் கூரத்தை விரவேத்திகொள்ளும் மோகினி,

இருசன்-விருத்தம்.

அப்பனேவாவாயெந்தன் அரசிளங்கொழுந்தேவாடா
இப்புவியாளுகின்ற யிலகியமைந்தாவாடா
ஒப்பிலாவிருதஞ்செய்ய வுருதியாதிருமால்தன்னை
செப்பமாய்நினைத்துக்கொண்டு செல்வனேகுனிந்திடாயே,

வ-ம். வாரும் யெனது புத்திரசிகாமணியாகிய செல்வமே னும் செய்யும் யேகாதசிவிருதத்துக்கு விக்கினம் வராமல் வுன்னிஷ்டதெய்வத்தை நினைத்துக்கொண்டு வுனசிரசை நீட்டிகொடுமப்பா.

தருமாங்கன்-விருத்தம்.

ஜென்மமேழாகிலுந்தான் திருகிரிசாளவேனும்
மன்னன்ருக்மாங்கருக்கு மகனுபாலும்விஷ்ணு
மன்னுமாவிருதஞ்செய்து வதிஷ்டரும்குருவுமாகி
யென்னையிப்படிவிதிப்பாய் யெம்பெருமானேபோற்றி.

(வ-ம்) அரி அரி வாசுதேவா, அனாதரக்ஷகா ஆபத்பாந்தவா அடியேன் யெழுபிறப்பு பிறந்தாலும் கிரிஜைமானகரம் ஆளப்பட்ட ருக்மாங்கருஜனே யெனக்கு தகப்பனாகவும், வதிஷ்டரேயெனக்கு குருவாகவும், சந்தியாவொளி அம்மனே தாயாராகவும், அடியேன் யேகாதசி விருதஞ்செய்து விஷ்ணுபக்தியாயிருக்கவும் ஸ்ரீமன்னாராயணா யென்றைக்கும் யிப்படியே விதிப்பாய் கர்த்தனே.

இருசன்-விருத்தம்.

இக்கிருதித்தோர்விண்ணோர் யெவர்களுஞ்சாக்ஷியாக
சுந்திரமடந்தையார்க்கு சொன்னசொல்தவிரிடாமல
விந்தையதாகசூழ்ந்த வேந்தரும்பலருங்காண
மைந்தனேமிகவேயானும் வாளினால்வெட்டுவேனே.

(வ-ம்) யிக்கிருதித்தர் விண்ணோர்கள்காண இவர்கள் சாக்ஷியாக அப்பா மகனே தருமாங்கத அரி அரி சீதா பீதாம்பரகருடவாகனா தாமோதர முரஅரி முகுந்தா நமக்கு ஆதரவு அரியென்றுசொல்லும் கிழக்குமுகமாகிலனு வாய்மூடி கைகட்டி சிரம்வணங்கு யிதோ வுன்

கழுத்திலே வாளைவிடுகிறேன்மகனே அரி அரி ஸ்ரீமன்னாராயணமூர்த்தி திருவிளம்பத்தகுா.

விருத்தம்,

பொருபொருவுலகிலுன்போல் சத்தியவான்களில்லை
அருவரொன்றாலுங்கத்தி யருக்குமோயறிவுள்ளோனே
மருபிறப்பில்லையுனக்கு மகனுக்கும் மத்துள்ளோர்க்கு
பெருவதமுயர்வைகுந்தம் போினரேபெற்றமன்னா.

(வ-ம்) பொருங்காணும் பொரும் பிள்ளையின்தலை யருக்கவேண்டாம் பொறும், சத்தியமென்றானதேசத்தியம் தயிரியமென்றானதேதயிரியம் விருதமென்றானதேவிருதம், இன்றுன்னைமெச்சினேன் நீயின்றைக்கெல்லாம் அருஅரு வென்றாலும் அருக்குமா வுங்களுக்கு யித்தவுலகத்தில் மருபிறப்பில்லை பேரின்பமாகிய வைகுந்த பதவியென்னும் போகஷசாம்பிருச்சியத்தை யின்றுபெறத்தீர் வுருக்குமாங்கத மகாருஜனே.



மகாவிஷ்ணுவருகிற-தரு-ஆதி.

வைகுந்தவாசர்வந்தார்-கருடனேரி-வைகுந்தவாசர்வந்தார்
வைகுந்தவாசர்வந்தார் மன்னன்றுக்மாங்கதற்காக
மெய்யென்றவர்க்குமெய்யன் பொய்யென்றவர்க்குபொய்யன். (வை)
தேவர்புகழ்வுலாசன் திருமருவுமுலாசன்
ஆவித்துணையாமீசன் அன்பர்தொழும்பிறகாசன். (வை)
அனந்தசயனநீக்கி ஆழிபுவணம்போக்கி
மனதனிலன்புண்டாக்கி மன்னனிடம்நோக்கி. (வை)
செந்திபறிக்குங்கோடி திருமகளுடன்கூடி
சோந்தவன்தன்னைநாடி குவலையகதன்னைத்தேடி. (வை)

ருக்மாங்கதர் தருவு-அடதாளம்.

அரியேயுன்னடியினை சரணம்-யெம்மை
யாள்கொண்டருளயிது நல்லதருணம்,
கரியன்றுகதறிட வந்தாய்-ரெண்டாய்
கன்டித்துமுதலையை காசூனிதநதாய்
ஆலிலைமேல் பள்ளிக்கொண்டாய-யிந்த
அண்டபுவனமுழுதாவையு முண்டாய்
கஞ்சனைவதைத்த பொர்ப்பாத-எந்தன்
சஞ்சலந்தீர்த்தருளுஞ் செகனாதா
ஆழ்கடல்மீதினில் சயனா-யென்னை
யாள்கொண்டருளும் மறவிந்தநயனா
படிதனி யளந்திடும்பாதா-மிகு
பஞ்சவர்களுக் கன்றேகிய தூதா.

விஷ்ணு-விருத்தம்.

அஞ்சலிதந்தோம் அன்புள்ளமன்னாகேளாய்
மிஞ்சியேவந்தோமுந்தன் வேதனையனைத்துமிப்போ
துஞ்சிடகணத்தில்தீர்த்து சுபமுடனிருக்கயுந்த
மந்தனைக்கார்ப்பேனிப்போ வாஙைதவிளக்குவாயே.

தருமாங்கதர்-தருவு-அடதாளம்.

பல்லவி.

அரியைக்கண்ணில கண்டேனே - மனம்பூரித்து
பரிவாயானந்தங் கொண்டேனே.

அநுபல்லவி.

அரியைக்கண்டேனெந்தன் நெரியுத்தவிருமலே
தருணத்தருகில்வந்து கருணைத்தந்தருளிய. அரி

சரணங்கள்.

தீரமிகுத்தஆரபாரம் மேன் தாளோங்காரம்
சுருட்டிகன்கெம்பீரம் சாய்மரையிருவேஈரம்
சார்ந்திடும்சவுக்காரம் வேதமுழங்குஞ்சாரம்
வெகுவிதவிஸ்தாரம் விளங்குமவதாரம்
பரிமளத்தின்வீரம் துளசிமணிபாரம்
நரசிங்கவுதாரம் யென்மேல்கனிக்காரம்
யெதிரியின்மேல்வீரம் தொண்டருபசாரம்
ஆதாரம்ஓங்காரம் ஒய்யாரம்யின்னேரம். அரி

மேலேசிகரக்குடைக்கூலே மணியில்குத்தாலே
யிணைத்தகுச்சுத்தாலே வெட்டிவேரழகுஞ்சாலே
சாலரின்குடையீமேலே யெங்கிலுமொருகாலே
யிருக்கணுஞ்சூமேலே பணிகள்சித்திரவேலே

பகரும்வுறப்பிலே    பச்சைகளுடலிலே
கனிவுதிருகலே    கறப்பூரரசத்திலே
கடிகதுளங்கைகளுலே    சிலைகனிபோலே
முன்னுலேதிருமாலே    கரிமாலேஅரிவாலே.    அரி

அரியமணிமகுடத்திரைய    கித்திலங்களுஞ்சொரிய
கவிகிதனில்பிரைய    காதல்குண்டலமெரிய
கமகமென்றுவுரிய    பதக்கமதில்பெரிய
கேயூரபுயம்விரிய    ஆரமுரத்தில்சொரிய
ஆதாரமென்றுகுரிய    அவனிசேரலைதிறைய
ஆருக்கும்பாவம்பிரிய    காலில்பிலம்புசரிய
கண்டவர்நெஞ்சங்களைய    அசுரர்மனமுரிய
கனக்தெரியதுதுரிய    வுலகரியசொர்ப்பெரிய.    அரி

திரஅசுரர்க்கதிகார    மச்சாவுதார
ஆழியினுள்ளபூர    யமர்ந்தவனேசிர
ஆரூந்தக்துநார    ஆக்கியவுபகார
சோமசூரசம்மார    மோகினியவுதார
தேவர்க்கமுரதம்சிர    தெளிந்துபரிமார
வரஆவதார    யிரணியாக்ஷசனேநேர
வதைத்தகொம்புகூர    அடுத்தமல்லர்கோர
ஆக்கினையெல்லாநதிர    ஆக்கியவுபகார
செல்வநகர்திர    சிருவனைக்கார
செம்பிரவொய்யார    செயசூரயென்னோர.    அரி

தேவாரம்.

அய்யனேஅரியேபோற்றி ஆதியர்லயனேபோற்றி
மெய்யனேவிமலாபோற்றி விண்ணவர்தளவாபோற்றி
துய்யகோவிந்தபோற்றி சுடர்மணிவிளக்கேபோற்றி
வையகமளந்தாபோற்றி வைந்நனைக்கார்ப்பாபோற்றி

விஷ்ணு-விருத்தம்.

வாசம்ம்புவிருக்மாங்க வாசனைசொல்லக்கேளாய்
நேசமாயேகாதேசி நின்னயநெரிதப்பாமல்
பாசமாயெடுக்கவல்ல பத்திக்கிமகிழ்தேன்முத்தி
ஆசையாயுனக்குவேண்டும் அதியதோர்வார்த்தைகேளும்.

(வ-ம்.) கேளும் ருக்மாங்கராஜனே, நமக்குயிஷ்டமான யேகாதசிபத்தின் நீயே ஆகையால் வுன்னுடைய பத்திக்கு சந்தோஷப்பட்டேன் வுனக்கு வேண்டியவரங்களும் ருசனே,

இருசன்-விருத்தம்.

புண்ணியபொருளேவுத்தி பூறந்தமாலரியேபோற்றி
யெண்ணியப்படியேசெல்வம் யீந்திடும்யேகாதேசி

பண்ணியபேர்களிந்த பாரினில்பலனைபெத்து
நண்ணியுன்பதத்தைசேர நயந்தருள்புரிவாய்போற்றி.

(வ-ம்.) கேளும் சர்வஜீவ தயாபரனாகிய ஆதிமூலக்கடவுளே அடியேன் வுலகத்தில் செய்யப்பட்ட பக்ஷம் பிறசித்தமென்னும் சொலலப்பட்ட புண்ணிய யேகாதசிவிருதம் ஆர்செய்குறார்களோ அவர்களுக்கு பத்தினாலே புத்தியும் பெரும்படி வரங்கொடுக்கவேணு வைகுந்தவாசா.

விஷ்ணு-விருத்தம்.

நீண்டதோருவன்னையாளும் நிருபனேமிகவுங்கேளீர்
ஆண்டதோரேகாதேசி அரிவிருதங்கள்செய்தோர்
பூண்டபுண்ணியனாயிந்த புவிதனில்பிறந்துவாழ்ந்து
காண்டரிதானமோட்சம் கதிதனைபெருவார்சொன்னேன்,

(வ-ம்.) கேளும் நக்மாங்கதமகாராஜனே யேகாதசிவிருதம்ஆர் செய்யுறார்களோ அவர்கள் புண்ணியவான்களாய் பூமியில்பிறந்து யிஷ்டகாமியங்களனுபவித்து அனித்திய காலங்களில் நம்மிட பாதாரவிந்தம் சேருவார்கள் ராஜனே.

இராசன்-விருத்தம்.

தையலாள்சொல்லைக்கேட்டு சந்ததிதனையேவாளால்
கொய்யவேதுணிந்தபொல்லா கொடியபாதகனுமின்றேன்
வையகம்பழிக்கவன்னம் மாதவா அரிகோவிந்தா
அய்யனேவுமதுசெம்பொன் னடியினைசேர்த்துகொள்வீர்.

(வ-ம்.) அரி அரி அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகா அடியேன் வொருவின்னைப்படம் ஒரு பெண்ணாசையாலே பெத்த பிள்ளையைக்கொல்லவந்த பாவியென்று வுலகத்தில் சொல்லாதபடி நகிவும் முடைய பாதாரவிந்தம்சேர யிப்பவேஅருள்புரியும்வைகுந்தவாசனே.

விஷ்ணு-விருத்தம்,

மனநிலையரியவென்றோ மாயமோகினியுந்தானே
வுனதிடமனிப்பிவித்தோ முமக்கொருபயமுமில்லை
கனமிகுமகனோடுந்த காசினிமுழுதும்ஆண்டு
யெனதிடபாதஞ்சேர்ந்துயெழில்பெறவாழ்வாய்சொன்னேன்.

(வ-ம்.) கேளும் ருக்மாங்கதமகாராஜனேவுனது மனது நிலையே யறியவேணுமென்று யிந்த மோகினியை சிருஷ்டித்து பிறமதேவன் அனிப்பிவித்தான் அதனாலே வுனக்குவொரு பழியுமில்லை வுன் மூலமா யின்னம் வுலகத்தில் வெகு தர்மம்நடக்க போகிறபடியால் யிந்த வுலகம் அரசாண்டு யின்ன சிலநாள்பொருத்து நம்மது பாதம்சேரும் ராஜனே.

மோகினி-விருத்தம்.

சாபமும்துயரம்போக்கும் தலைமைநாயகனேயெந்தன்
சோபமேதீர்க்குமனால சுடரொளிவிளக்கேயெந்தன்
பாபமோபழியோஅய்யோ பறமபாகவதாள்சித்தம்
கோபமாகவேனுன்செய்த குனாயெவருட்ன்சொல்வேனே.

(வ-ம்.) கேளும் சறவலோகநாயகா அடியாளொருவிண்ணப்பம் ஒன்றொரு பெண்ணாகபிறந்து பாவமானபழிசுமந்தேன் ஐயையோயிதென்னகாரணம் ஒன்றுமபாகவதாளுக்கு துரோகம் பண்ணப்பட்ட பாவியானேன் வைகுந்தவாசரே.

விஷ்ணு-விருத்தம்.

முகமலர்க்குழைமுடியுமீல மொய்க்குழல்விழுந்துசோர
அகமதுதாழக்கண்ணீர் ஆறெனப்பெருகியோட
மிகவுமேஅழுதுக்கொண்டு விதனமேபெரிதாய்வந்த
வகையென்னவிபரமாக வடிவின்மோகினியேசொல்லாய்.

(வ-ம்) வாறும் பெண்ணேமோகினி வுன்முகம் வாடியிருப்பதேதென்று வுன்னுடைய கூந்தல் அவிழ்ந்து சோர்வதென்று மிகவும் விசனத்தோடு அழுதுக்கொண்டுவந்த காரணமென்று சொல்லும் பெண்ணேமோகினி.

மோகினி-விருத்தம்.

பிர்மதேவனைப்பெத்தெனனை பிறவிக்கவருளிச்செய்த
மர்மதேவனாவுந்தன்பொன் மலரடியடியாள்போத்த
தர்மமாதவர்கள்செப் யேகாதசிவிருதத்துக்காக
கர்மதேகத்துக்கென்று கட்டளையருள்செய்வீரே.

(வ-ம்.) பிரமதேவனை யுந்திகமலத்தின்று அன்னவனைக்கொண்டு யென்னை சிருஷ்டிக்க வருளிச்செய்த கபடநாடக சூஸ்திர அவதாரக் கடவுளே கனகாம்புயம்போன்ற வுன் திருவடிகளுக்கு அனந்த சரணம் தர்மதேவதைகளால் அனுசரிக்கும் யேகாதசி விருதத்துக்காக கர்மதேகத்தைபெத்த நிர்மூடியாகிய அடியாளுக்கு யென்ன கட்டளை யருளிச்செய்தீர் சுவாமி.

விஷ்ணு-விருத்தம்.

அரும்புதிதனையுண்டாக்கி அவலமாசெய்தோமென்று
தரும்பெனமெலியுமுள்ளம் சோர்ந்திடவேண்டாமின்றோ
பெரும்புவிக்குடையவேந்தன் பெருந்தவமழிக்கத்தானே
கரும்பெனமினியைச்சொல்ல கர்ப்பித்திங்கனிப்பித்தோம்.

(வ-ம்.) கேளும்பெண்ணே மோகினி வுன்னை அபலமாகச்செய்தோமென்னவும் பழிவந்துசேர்ந்ததென்றும் நீ மனதில் கிலேசப்படவேண்டாம் அந்த ருக்மாங்கதனுடைய சத்தியத்தையும் மனவுறுதியையும் அறியவேணுமென்று வுன்னை சிருஷ்டித்தனிப்பிவித்தோம் வுனக்குயென்ன குறைவுவந்தாலும் யென்னுடன் சொல்வாய்பெண்ணே.

மோகினி-விருத்தம்.

படிதனையுண்டசெவ்வாய் பச்சைமுறமுகிலேகேளாய்
தடிமுறைகடையமன்னன் சொன்னசொல்தவறிடாமல்
கெடியவிதாருலகில்செல்வம் நிலையெனகீர்த்திபெற்ற
அடியவன்கடக்கும்புத்தி அனுக்கிரகஞ்செய்யுவீரோ.

(வ-ம்.) ஓ சுவாமி வைகுந்தவாசரே யிந்த பூலோகத்தில் அருக்குமாங்கத மகாராஜனை சந்திரர் சூரியாள் தெற்குவடக்காகிலும்

சொன்னசொல் தவருமலும் யெடுத்த விருதத்தை கெடுக்காமலும் சத்தியசந்தனென்கிறபேர் மறந்துபோகாமலும் இர்த்தியெபெத்தார் ஆசையால் அடியாள் நடக்கும் வழியென்றுசொல்லும்சுவாமி.

விஷ்ணு-விருத்தம்.

செகத்தினில்விருதந்தன்னை செய்பவரெவருனாலும்
பகர்ந்திடுமேகாதெசி பாரணைகாலந்தன்னில்
மகிழ்ந்துசெய்போஜனங்கள் மருவிநித்திரைசெய்தாலும்
வுகழ்ந்தவர்பலனையெல்லாம் வுனக்குனளித்தேன்பெண்ணே

(வ-ம்.) கேளும்பெண்ணே தெய்வ சுறாபமாயிருக்கப்பட்ட யேகாதசிவிருதஞ் செய்யப்பட்டவர்கள் துவாதசிகாலத்தில் தப்பி போசனஞ்செய்தவர்கள் பலனையுந் துவாதசி விருதபங்கம் நித்திரா ஸ்திரிபோகம் செய்யப்பட்டவர்கள் பலனையெல்லாம் வுனக்கே அளிக்குறேன்பெண்ணே.

(மோகினி-வ-ம்.) அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

பொது-விருத்தம்.

விண்ணவர்யாவர்சொல்ல விளங்குமோகினியாள்தானும்
தண்ணருவரத்தால்மிக்க சத்தியலோகஞ்சேர்ந்தாள்
யென்னிலாயேகாதேசி யியல்பெரும்பலனுல்சொல்ல
மன்னும்புவியாள் றுக்மாங்கதனுமேம்மகனுடாண்டார்.

வாழி-விருத்தம்.

மாதமும்மாரிபெய்ந்து மன்னவர்செங்கோலென்னும்
கோதில்லாமேழிச்செல்வம் குறைபடாதிருந்துவாழ்க
தீதில்லாமறையோர்தாமும் செழித்திடதேசமெங்கும்
நீதியாயேகாதேசி நிறந்திடவாழிவாழி.

மங்களம்-தரு-அடதாளம்.

மங்களம்மங்களம்தெய்வ சர்வ மங்களம்மங்களம்
மங்களம் திருப்புல்லை மாநகரவாசனே
யெங்கும்புகழ்கொண்டெழில் குமரேசனே. மங்க
மங்களம்செயசுப்பிர மண்ணியனெனும்விநோத
திங்கள்பிறையணி சிவகாசிவிசுவநாதா. மங்க
மங்களம்திருமருமார்பா மகானுபாவ
செங்கண்மாலெனவரும் தேவாதிதேவா. மங்க
மங்களம்திருவிருத மகத்துவருக்மாங்கத
திங்கள்மும்மழைபெய்ய செய்யுந்தர்மாங்கத. மங்க

வாழி-விருத்தம்.

மாமறைகள்வாழி வுலகடலும்வாழி
மன்னும்புவியாண்டு வளர்மன்னர்வாழி

பாம்ருவிலாசம்தை செப்பினோரும்படித்தோரும்
வாழிமிகு பரிவுத்திதை
தேமருவுலகுதன்னில் கற்றநன்றாய்
சொல்லிவைத்துபாத்தியர்க்குசிறப்பதாக
காமகள்சேர்ந்தழகாய் பாடியாடி
காஸிலத்திலென்னாளும் நலமாய்வாழி வாழி.

(வ-ம்.) அதோதெப்படியென்றால், நாலுவேதங்களும், நார்க்க
டலும்வாழி பிறமா க்ஷத்திரவைசிய சூத்திர னென்குசாதியரும்வாழ
இவ்விலாசம் பாடினவரும் படிக்கின்றவரும் சங்கீதத்துடன் கற்
வாத்தி மதனஞ்செப்பும். உபாத்தியாயர்களும் கற்றுக்கொள்கிற
பிள்ளைகளும் கேளிக்கையாடி வைத்தவர்களும் லட்சுமீகரம்பொரு
ந்தி வாழி வாழி.

தர்மாங்கத விலாசம்-முற்றிற்று.

---

## தர்மாங்கத விலாசத்தை

அச்சிடவுதவிசெய்தவர்கள்.

கம்முவார்பாளையம் இலட்சுமிநாயுடு குமாரர் முனிசாமிநாயுடு,
நல்லப்பநாயக்கன் பாளையம் ஜமீன்தார் சிறங்கைய நாயுடு
ஆத்துபாக்கத்திலிருக்கும் சதுரங்கபட்டணம்,
திருவேங்கட முதலியார்.
ராமாபுரம் இராஜகோபாலு பிள்ளை
கும்மிடிபூண்டி வைசிய செஞ்ஜிசெட்டியார் வகையரு,
மதூர்மேடு-கந்தப்பசெட்டியார் குமாரர்,
மா-ா-ஸ்ரீ, வேலாயுத செட்டியார்.
சுண்ணாம்புகுளம் வைசிய ஆருமுத்து
முனிசாமிசெட்டியார் வகையரு,
ஷை யூர் வேலப்ப ஆசாரி.
வும்ப்பேடு செங்கு முதலியார்.
பட்டுபள்ளி வயிதிசெட்டியார்.
திருக்கண்டளம் இரண்ணியவிலாசம்
கற்றுக்கொண்ட பிள்ளைகள்.
ஷை யூர்கணக்கு சிதம்பரபிள்ளை.
சிரணம்பூதூர், வீருசாமிசெட்டியார்.
ஆத்துப்பாக்கம், அப்புலாசாரி,